# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 27 புதன்கிழமை (11.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 166





02 புனேக்கு வெற்றி





03 இந்திய அணியில் இடம் பிடிப்பேன்





16 உரத்துப் பேசுங்கள்





23 கொல்லப்பட வேண்டிய தீவிரவாதிகள் பலர்





25 மஹிந்தவை ஐ.நா. விசாரிக்க வேண்டும்


# நிபுணர்குழு அறிக்கைக்கு அரசு பதிலே அளிக்காது

## பத்திரிகை ஆசிரியர்களிடம் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, மே 11

**ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ - மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால் அந்த அறிக்கைக்கு அரசு பதில் அளிக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். யதார்த்த நிலை குறித்து ஐ.நா. பொதுச் செயலாளருக்கு அரசு விரைவில் விளக்கம் அளிக்கும் என்றும் அவர் கூறினார்.**

நேற்றுக் காலை அலரி மாளிகையில் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், பொறுப்பாளர்கள் ஆகியோரை ஜனாதிபதி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் அமைச்சர் ஜி.எல். பீரிஸும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் உடனிருந்தனர்.

அப்போது ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப்


(29ஆம் பக்கம் பார்க்க)


## போர்க்குற்றச்சாட்டை எதிர்கொள்ள இந்திய அரசின் உதவி அவசியம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 11

ஐ.நா. நிபுணர் குழுவால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்களை சர்வதேச அரங்கில் எதிர்கொண்டு இலங்கைக்கு எதிரான முயற்சிகளை முறியடிக்க இந்தியாவின் உதவி மிக மிக அவசியம் என்று தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அலரி மாளிகையில் நேற்றுப் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''இந்தியா எப்போதுமே இலங்கையுடன் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்பட்டுள்ளது. எல்லாச் சமயங்களிலுமே இரு தரப்புகளுக்கும் இடையிலான உறவுகள் சிறப்பாகவே இருந்து வருகின்றன'' என்று தெரிவித்தார் ஜனாதிபதி.


(31ஆம் பக்கம் பார்க்க)


## ஓய்வுபெறும் வயது 57ஆக அதிகரிப்பு

கொழும்பு, மே 11

அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 55இலிருந்து 57ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர அறிவித்துள்ளார். இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து இந்த புதிய கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.


(32 ஆம் பக்கம் பார்க்க)


## ஐ.நா. பிரதிநிதியாக புதியவர் நியமனம்

கொழும்பு, மே 11

இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர்/ மனிதாபிமான ஒருங்கிணைப்பாளரும் அகதிகளுக்கான ஐ.நா. அபிவிருத்தித் திட்ட வதிவிடப்பிரதிநிதியுமாக சுபினே நான்டி புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வெளிவிவகார அமைச்சில்


(31ஆம் பக்கம் பார்க்க)


## கூட்டமைப்பு தமிழர்களின் ஏக பிரதிநிதி இல்லை என்பதில் ஜனாதிபதி திட்டவட்டம்

கொழும்பு, மே 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இது வரை பல சுற்றுப் பேச்சுகளை நடத்தினாலும் அது தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி அல்ல என்ற நிலைப்பாட்டிலேயே அரசு தொடர்ந்து இருந்து வருகிறது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அடுத்த சுற்றுப் பேச்சு இன்னும் சில தினங்களில் நடைபெற இருக்கிறது. ஆனால், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி அது மட்டுமே அல்ல என்ற நிலையில், டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியுடனும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் நாம் பேசுவோம்'' என்று தெரிவித்தார் மஹிந்த.

அலரி மாளிகையில் ஊடகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியபோது அவர் இதனைத் தெரிவித்தார். இந்த விடயம் குறித்து


(29ஆம் பக்கம் பார்க்க)


## போர் நிறுத்தக் கோரிக்கையை இலங்கை அசட்டை செய்தது

### விக்கிலீக்ஸ் தகவல்

நியூயோர்க், மே 11

இரத்தக்களறி நிறைந்த விடுதலைப் புலிகளுடனான போரைத் தற்காலிகமாக நிறுத்தும்படி மேற்குலக இராஜதந்திரிகள் விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசு அசட்டை செய்ததாக 'விக்கிலீக்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தியை சர்வதேச இணையதளங்கள் நேற்று வெளியிட்டன. இராஜதந்திரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான 38 ஆவணங்களை 'விக்கிலீக்ஸ்' வெளியிட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சிலிருந்து மேற்படி விடயங்கள்


(29ஆம் பக்கம் பார்க்க)


## முன்னுக்குப் பின் முரணாக கதைக்கிறது அரசு – ஐ.தே.க

கொழும்பு, மே 11

''ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக அமைச்சர்கள் முன்னுக்குப் பின் முரணான கருத்துகளை வெளியிடுகின்றனர். அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் ஐ.நா. சபை எமது சபை, அதை எவரும் விமர்சிக்கக்கூடாது எனத் தெரிவிக்கின்றனர். ஆனால், அமைச்சர் விமல் வீரவன்ஸ, ஐ.நா. சபையையும், அதன் செயலாளர் நாயகம் பான் கீ-மூனையும் கடுமையாக விமர்சிக்கிறார்.


(31ஆம் பக்கம் பார்க்க)


## கோகேஸ் தீவில் பிடிபட்டவர்கள் ஈழத் தமிழர்களே

கொழும்பு, மே 11

கோகேஸ் தீவுகளில் சட்ட விரோதமாக நுழைய முயன்ற குடியேற்றவாசிகள் அனைவரும் இலங்கையர்களே என ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி 82 பேரைக் கொண்ட சட்டவிரோத குடியேற்றவாசிகள் குழு ஒன்று மீன்பிடிப் படகு ஒன்றின் மூலம் ஆஸ்திரேலியா


(32ஆம் பக்கம் பார்க்க)


# தமிழ் மொழி அமுலாக்கம் பெயரளவிலேயே; நடைமுறையில் பாரபட்சமே காட்டப்படுகிறது

## அமைச்சர் வாசுதேவவிடம் குடாநாட்டு அதிகாரிகள் நேற்று நேரில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 11

அரச கரும மொழிக் கொள்கையின் கீழ் தமிழ் மொழிக்கும் சம மதிப்புக் கொடுக்கப்படும் என்பது பெயரளவில் இருக்கிறதே தவிர நடைமுறையில் பாரபட்சம் தொடர்கிறது என்ற குற்றச்சாட்டை, தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் நேரில் முன்வைத்தனர் யாழ். மாவட்ட அரச அதிகாரிகள்.

அரச கரும மொழிகள் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பான செயலமர்வும் கருத்துப் பரிமாற்றமும் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகள், அரச திணைக்களங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர். கருத்துப் பரிமாற்றத்தின் போது அரச அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

✸ தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு


(31ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கங்குலி வருகை புனேக்கு வெற்றி



- டிலீப்-

மனிஷ் பாண்டி, மிர்செல் மார்ஷ் கை கொடுக்க புனே வாரியர்ஸ் டெக்கானை வீழ்த்தியது. தொடர் தோல்விகளால் டெக்கான் அணி அரையிறுதிக்கான வாய்ப்பை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மேலும் புனே வாரியர்ஸ் அணிக்கு கங்குலி விளையாடியதன் மூலம் அவரது கிரிக்கெட் வாழ்க்கை மீண்டும் புத்துயிர் பெற்றது.

ஐ.பி.எல்லின் 53 ஆவது ஆட்டம் ஹைதராபாத்தில் நடைபெற்றது. டெக்கான் சார்ஜஸ் அணி சங்கக்கார தலைமையிலும், யுவராஜ்சிங் தலைமையில் புனே வாரியர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சங்கக்கார முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

தவான் - ரவிரேஜா ஆகியோர் அந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். முதலாவது விக்கெட்டுக்காக சிறப்பான இணைப்பாட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. நான்காவது ஓவரிலேயே தவானின் பிடியெடுப்பை [illegible] தவறவிட்டது. ஆறாவது ஓவரை பானெல் வீச அந்த ஓவரின் இறுதிப் பந்தில் தவான் சிக்ஸர் அடித்து அணியை 50 ஓட்டங்களை எட்டச் செய்தார்.

அடுத்த ஓவர் யுவராஜ் சிங் வீசினார். தவானின் ஆட்டத்துக்கு முடிவு கட்டினார். 17 பந்துகளில் ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக 24 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்த ஓவரிலேயே மறுமுனையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த ரவி ரேஜா மிர்செல் மார்ஷின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். 27 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். சங்கக்கார - டுமினி இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேகரித்தனர். அணி 76 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சங்கக்கார 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து களம் புகுந்த கிறிஸ்ரெய்ன், டுமினியுடன் இணைந்து ஆடத் தொடங்கினார். யுவராஜ்சிங்கின் பந்து வீச்சில் 10 ஓட்டங்களுடன் கிறிஸ்ரெய்ன் ஆட்டமிழந்து வெளியேறினார். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த டுமினி 30 பந்துகளில் ஒரு பவுண்டரியுடன் 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மார்ஷின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்வரிசை வீரர்கள் ஒற்றை ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். சொஹால், மிஷ்ரா அடுத்தடுத்து ஓட்டமெதனையும் பெறாது மார்ஷின் பந்து வீச்சில் வெளியேறினர். மிஷ்ரா 'ஹட்றிக்' வாய்ப்பை ஸ்ரெயின் சிதறடித்து விட்டார்.

இறுதியில் டெக்கான் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் மிச்செல் மார்ஷ் 4 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஜெசி ரைடர் - மனிஷ் பாண்டி இருவரும் புனேக்கு நல்லதொரு அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர். ஸ்ரெயின் முதலாவது ஓவரிலேயே சிக்ஸர், பவுண்டரி என்று ஒரு காட்டுக் காட்டினார் ரைடர். இவர்களின் அதிரடியில் 36 பந்துகளில் 50 ஓட்டங்களை கடந்தது புனே அணி.

அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த ஜெஸி ரைடர் ஓஜாவின் பந்து வீச்சில் 20 பந்துகளில் 35 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இவரது அதி ரடியில் 4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கின. இவரது ஆட்டமிழப்பை தொடர்ந்து கங்குலி களத்துக்கு புகுந்தார். ரசிகர்களின் ஆரவாரம் அரங்கிலிருந்த அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

கங்குலி நுழைந்த மறுகணம் மறு முனையிலிருந்த பாண்டி அதிரடியாட்டத்தை தொடங்கினார். கங்குலி - பாண்டி இரண்டாவது விக்கெட்டுக்காக 38 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் 49 ஓட்டங்களுடன் பாண்டி, மிஷ்ராவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். மறு முனையில் கங்குலியின் சிறப்பான ஆட்டம் தொடர்ந்தது. பாண்டியின் ஆட்டமிழப்புக்காக நுழைந்த உத்தப்பா நேற்றைய ஆட்டத்தில் ஏமாற்றினார். 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அணித்தலைவர் யுவராஜ் சிங் 2 ஓட்டங்களுடன் கிறிஸ்ரெய்ன் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இறுதியில் வேக்குஸன் அதிரடியாக ஆடி அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார். 10 பந்துகள் மீதமிருக்க 6 விக்கெட்டுக்களால் புனே அணி டெக்கானை வீழ்த்தியது. கங்குலி ஆட்டமிழக்காமல் 32 பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 32 ஓட்டங்களும், வேக்குஸன் 8 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 15 ஓட்டங்களும் பெற்றுக் கொடுத்தனர்.

ஆட்ட நாயகனாக புனே அணியின் மிச்செல் மார்ஷ் தெரிவு செய்யப்பட்டார்.



# மும்பையின் வாலை சுருட்டியது பஞ்சாப்

சச்சின் தலைமையிலான மும்பை அணிக்கும், கில்கிறிஸ்ட் தலைமையிலான பஞ்சாப் அணிக்குமிடையிலான ஆட்டம் சண்டிகரில் நேற்று நடைபெற்றது. இது ஐ.பி.எல்லின் 54 ஆவது ஆட்டமாகும். இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்தது.

வல்த்தாட்டி - கில்கிறிஸ்ட் இருவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். ஹர்பஜன் சிங்கின் முதலாவது ஓவரை தடுமாற்றத்துடன் எதிர்கொண்டது. மலிங்கவின் பந்து வீச்சில் பவுண்டரியுடன் அதிரடியை தொடங்கியது பஞ்சாப். மூன்றாவது ஓவரை மீண்டும் வீசினார் ஹர்பஜன். இந்த முறை விட்டு வைக்கவில்லை வல்த்தடி. இரண்டு பவுண்டரிகள் அடுத்தடுத்து சென்றன. 14 பந்துகளில் 14 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வல்த்தாட்டி , முனாப்பட்டேலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்த ஷோன் மார்ஷ் களமிறங்கினார். மறுமுனையில் கில்கிறிஸ்ட் தனது அதிரடியான துடுப்பாட்டத்தை தொடர்ந்தார். இருவரும் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக வேகமாக ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டனர். மும்பையின் பந்து வீச்சில் இவர்களது விக்கெட்டுக்கள் வீழவில்லை. இறுதியாக 70 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்ற நிலையில் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

மலிங்கவின் வேகத்தில் வீழ்ந்தது கில்கிறிஸ்ட் விக்கெட். 28 பந்துகளில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். கில்லி யின் வெளியேற்றத்தை தொடர்ந்து டினேஸ் கார்த்திக் நுழைந்தார். மார்ஷ் உடன் இணைந்து சிறப்பாக ஆட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். இடையிடையே அதிரடிகளை காட்டினார். மறுமுனையில் மார்ஷ் 34 பந்துகளில் 43 ஓட்டங்க ளைப் பெற்ற நிலையில் முனாப் பட்டேலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளி யேறினார். அவரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து பஞ்சாப்பின் அதிரடி ஆட் டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. டினேஸ் கார்த்திக் ஒரு முனையில் சிறப்பான பங்களிப்பினை வழங்கினாலும் மறுமுனையில் விக்கெட்டுக் கள் தொடர்ச்சியாக வீழ்ந்தன. 24 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக் ஸர் அடங்கலாக 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முனாப்பின் பந்து வீச்சில் கார்த்திக் ஆட்டமிழந்தார்.

இருபது ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் உதிரிகளாக 22 ஓட்டங்கள் மும்பையால் வாரி வழங்கப்பட்டது. பந்து வீச்சில் முனாப் பட்டேல் 4 ஓவர்கள் வீசி 21 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்டுக்கள் கைப் பற்றினார். மலிங்க 24 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்டுக் களை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மும்பை அணிக்கு பிரவீன் குமார் வீசிய முதலாவது ஓவர் நல்ல வாய்ப்பாக அமைந்தது. பிளிசாட் - டெண்டுல்கர் ஜோடி முதலாவது ஓவரிலேயே தொடர்ச்சியாக மூன்று பவுண்டரிகள் அடித்து அசத்தியது. மூன்றாவது ஓவரில் மும்பைக்கு வில்லங்கம் காத்திருந்தது.

பிரவீன்குமாரின் பந்து வீச்சில் 6 ஓட்டங்களுடன் சச்சின் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து நுழைந்த ரோகித் சர்மா 5 ஓட்டங்களுடனும், சைமொன்ஸ் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். சிறப்பாக ஆடிய பிளிசாட் 10 பந்துகளில் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். மும்பை அணியின் வீரர்கள் ஒற்றை ஓட்டங்களுடன் தொடர்ந்து ஆட்டமிழந்து வெளியேறினர். மத்திய வரிசையில் பொலாட் 11 பந்துகளில் ஒரு பவுண்டரி, சிக்ஸர் அடங்கலாக 17 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார். இறுதியில் 12.5 பந்து வீச்சுக்களில் 87 ஓட்டங்களுக்கு மும்பை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்து வீச்சில் பகாட் 2.5 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இந்த ஆட்டத்தின் நாயகனாக பகாட் தெரிவானார். (15)

## இன்றைய ஆட்டம்

- ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் பெங்களூர் றோயல்ஸ் [இரவு 8 மணி]

## அதிகூடிய ஓட்டம்

- சேவாக் – டெல்லி [11 ஆட்டங்கள் 424 ஓட்டங்கள்]
- ஹஸி – சென்னை [9 ஆட்டங்கள் 388 ஓட்டங்கள்]
- சச்சின் – மும்பை [11 ஆட்டங்கள் 371 ஓட்டங்கள்]

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை [11 ஆட்டங்கள் 26 விக்கெட்டுக்கள்]
- முனாப் பட்டேல் – மும்பை [11 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்]
- ராகுல் சர்மா – புனே [11 ஆட்டங்கள் 14 விக்கெட்டுக்கள்]

DLF INDIAN PREMIER LEAGUE

## DLF INDIAN PREMIER LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 11 | 08 | 03 | 0 | 0 | + 0.314 | 16 |
| சென்னை சூப்பர் கிங்ஸ் | 11 | 07 | 04 | 0 | 0 | + 0.509 | 14 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 07 | 04 | 0 | 0 | + 0.464 | 14 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 10 | 06 | 03 | 0 | 1 | + 0.786 | 13 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 11 | 05 | 05 | 0 | 1 | - 0.504 | 11 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 11 | 05 | 06 | 0 | 0 | - 0.624 | 10 |
| புனே வாரியர்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.003 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.312 | 08 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 10 | 04 | 06 | 0 | 0 | - 0.432 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 11 | 03 | 08 | 0 | 0 | - 0.177 | 06 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி விளையாட மாட்டார் சேவாக்

தோள்பட்டையில் அறுவை சிகிச்சை செய்யப்படவுள்ளதால், ஐ.பி.எல் போட்டியில் மீதமுள்ள ஆட்டங்களில் வீரேந்திர சேவாக் விளையாட மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை டெல்லி டெயா டெவில்ஸ் அணியின் தலைமைச் செயல் அதிகாரி அம்ரித் மதூர் நேற்று டெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அறுவை சிகிச்சைக்காக சேவாக் லண்டன் செல்கிறார் என்றும், அணியின் தலைமைப் பொறுப்பு ஆஸ்திரேலிய வீரர் ஜேம்ஸ் ஹோப்ஸ் வசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அம்ரித் மதூர் கூறினார்.

இதனிடையே டெல்லி அணியின் உரிமையாளர்களான ஜி.எம்.ஆர் ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் பி.பி.வஞ்சி கூறியதாவது:

தோள் பட்டையில் ஏற்பட்ட காயம் தொடர்பாக சேவாக் இந்திய கிரிக்கட் வாரியத்திடம் தெரிவித்தார்.

இதையடுத்து உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளையும் கிரிக்கெட் வாரியம் செய்து வருகிறது. விரைவில் அவர் லண்டன் செல்கிறார்.



சேவாக்

எனினும் சேவாக்கிற்கு அறுவை சிகிச்சை செய்யப்படும் திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டிகளில் பங்கு பெறுவதற்காக இந்திய அணி ஜூன் 1 ஆம் திகதி புறப்பட்டுச் செல்கிறது.

இந்தத் தொடரிலும் சேவாக் கலந்துகொள்ள மாட்டார் என்று கூறப்படுகிறது. (15)

# இந்திய அணியில் இடம்பிடிப்பேன்

ராகுல் சர்மா நம்பிக்கை



ராகுல் சர்மா

ஐ.பி.எல் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி விரைவில் இந்திய அணியில் இடம் பிடிப்பேன். இவ்வாறு புனே வாரியர்ஸ் அணியின் இளம் சுழற்பந்துவீச்சாளர் ராகுல் சர்மா தெரிவித்துள்ளார்.

நான்காவது ஐ.பி.எல் தொடர் இந்தியாவில் நடக்கின்றது. இதில் புனே வாரியர்ஸ் அணியில் இடம் பெற்றுள்ள, பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த இளம் சுழற்பந்துவீச்சாளர் ராகுல் சர்மா (24 வயது), 9 போட்டிகளில் 11 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார்.

இது குறித்து ராகுல் சர்மா கூறியதாவது:

ஐ.பி.எல் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்தத் தொடர் இளம் வீரர்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றது. இந்தத் தொடர் மூலம், இளம் வீரர்கள் தங்களது திறமையை நிரூபித்து தேசிய அணியில் இடம் பிடிக்கலாம். இந்திய அணிக்காக விளையாடுவது எனது நீண்ட நாள் கனவு, லட்சியம். ஐ.பி.எல் தொடரில் முழுத்திறமையை வெளிப்படுத்தி, விரைவில் இந்திய அணியில் இடம் பிடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. இதற்காக முழுவீச்சில் தயாராகி வருகிறேன்.

சமீபத்தில் மும்பை அணிக்கு எதிராக 4 ஓவர்களில் 7 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 2 விக்கெட்டுக்கள் கைப்பற்றினேன். இதன்மூலம் இந்த ஆட்டத்தில் எங்கள் புனே அணி தோல்வி அடைந்தபோதிலும், ஆட்ட நாயகன் விருதை வென்றேன். இந்த ஆட்டத்தின் முடிவில், 'அருமையாகப் பந்து வீசுகிறாய்' என்று, இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் என்னை வெகுவாக பாராட்டினார். சச்சினிடம் இருந்து கிடைத்த இந்தப் பாராட்டு எனக்கு கிடைத்த சிறந்த வரப்பிரசாதமாக கருதுகிறேன். இதன்மூலம் தொடர்ந்து சாதிப்பேன் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளது.

மூத்த வீரர் பிரவீண் ஆம்ரே, பந்து வீச்சு குறித்து நிறைய ஆலோசனைகள் வழங்கி வருகிறார். நான்காவது ஐ.பி.எல் தொடரை வெற்றியுடன் தொடக்கிய எங்கள் புனே வாரியர்ஸ் அணி, பின் தொடர்ந்து ஏழு தோல்விகளைப் பதிவு செய்தது. இதில் நிறைய போட்டிகளில் வெற்றிக்கு அருகில் சென்று கோட்டை விட்டுள்ளோம். மீதமுள்ள ஐந்து போட்டிகளில் முழுத் திறமையை வெளிப்படுத்தி எழுச்சி பெற போராடுவோம். இவ்வாறு ராகுல் சர்மா கூறினார். (15)




## ஒன்றுமே தெரியாது என்கிறார் ஹர்பஜன்

சூதாட்டத்தில் இந்திய வீரர்களுக்கு தொடர்பு உள்ளதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது, சிறுபிள்ளைத்தனமானது என்று இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

இந்த மாதிரியான உண்மைக்கு புறம்பான செய்திக்கு கருத்துத் தெரிவிக்க முடியாது. தேவைப்பட்டால் இந்திய கிரிக்கெட் வாரியத்திடம் ஆலோசிப்பேன், மற்றபடி கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது என்றும் கூறிவிட்டார்.

இந்தியாவின் முன்னணி விளையாட்டு இதழ் ஒன்று கிரிக்கெட் வீரர்களுக்கும், சூதாட்டத் தரகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் குறித்து கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் இந்திய வீரர்களுக்கும் தொடர்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை. இது தொடர்பான தகவல்களை பி.சி.சி.ஐ மற்றும் ஐ.சி.சி ஆகியவற்றிடமே தெரிவிப்போம் என்றும் கூறப்பட்டுள்ளது.

சண்டிகரில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் சகவீரர் யுவராஜுடன் பங்கேற்ற ஹர்பஜன், இந்த விஷயம் தேவையில்லாமல் ஊடகங்களால் பெரிதுபடுத்தப்படுகிறது என்றார்.

இரு வீரர்களிடம் திருமணம் குறித்து கேட்டபோது, இந்த விஷயத்தில் என்னை விட, எனது நாட்டு மக்களே அதிக கவலைப்படுகிறார்கள் என்றார். யுவராஜ் கூறுகையில், 'இப்போது திருமணம் பற்றிய சிந்தனை இல்லை; கிரிக்கெட் பற்றிய எண்ணம் மட்டுமே உள்ளது' என்றார். (15)

# சம்பியன் வீராங்கனை மரியா ஜோஸ் அதிர்ச்சித் தோல்வி

ரோம் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் கடந்த ஆண்டு சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயின் வீராங்கனை மரியா ஜோஸ் மார்ட்டினஸ் முதல் சுற்றிலேயே அதிர்ச்சித் தோல்வியை தழுவினார்.

அவரை ரஷ்ய வீராங்கனை எக்டரினா மகரோவா 6-0, 5-7, 6-4 செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

முன்னாள் பிரான்ஸ் திறந்த தொடர் சம்பியனான ரஷ்யாவின் ஸ்வெட்லனா குஸ்னேட்கோவாவும் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். அவரை ஹங்கேரி வீராங்கனை கிரெட்டா அன் 3-6, 7-6 (7-4), 7-6 (11-9) செட் கணக்கில் வென்றார்.

முன்னாள் இறுதிப் போட்டியாளரும் 9 ஆவது நிலை வீராங்கனையுமான பிரான்ஸின் மரியன் பர்டோலி 6-2, 6-3 செட் கணக்கில் ஸ்பெயினின் அராண்ட்சா பரரா சான் டோன்ஜாவை ஜெயித்தார். (15)



மரியா

# பறிக்கப்பட்டது வன்னியாராச்சியின் பதக்கம்

கடந்த பொதுநலவாய விளையாட்டு விழாவில் குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இலங்கை வீரர் மஞ்சு வன்னியாராச்சி தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து விவகாரத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளதாக பொது நலவாய விளையாட்டுச் சம்மேளனம் நேற்று அறிவித்துள்ளது.

இதனால் அந்தப் போட்டியில் அவர் பெற்ற தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் சம்மேளனம் அறிவித்துள்ளது. மலேஷிய தலைநகர் கோலா லம்பூரில் கூடிய பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத்தின் ஒழுக்காற்றுக் குழு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

கடந்த வருடம் புதுடில்லியில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டு விழாவில் 56 கிலோகிராம் எடைக்கு உட்பட்டவர்களுக்கான குத்துச்சண்டைப்போட்டியில் மஞ்சு வன்னியாராச்சி தங்கப்பதக்கம் பெற்றிருந்தார். ஆனால் தடைசெய்யப்பட்ட 'நன்ட்ரோலின்' எனும் ஊக்கமருந்தை உட்கொண்டதால் அவர் பதக்கத்தை இழந்துள்ளார். (15)

# விசாரணைக்குழு முன் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை

ஸ்ரீலங்கா கிரிக்கெட் (இலங்கை கிரிக்கெட் சபை) மீதான நிதி முறைகேடுகள் மற்றும் ஆட்டநிர்ணய சதி; குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, பொதுநிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற குழு (கோப்) முன் ஆஜராகுமாறு ஸ்ரீலங்கா கிரிக்கெட்டிற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களில் வெளியான அதிர்ச்சிகரமான பல தகவல்களைத் தொடர்ந்து இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டதாக கோப் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் டி. எஸ். டீ சில்வா தலைமையிலான தற்போதைய இடைக்கால நிர்வாகக் குழுவின் பதவிக்காலத்தில் 200 கோடி ரூபாயுக்கும் அதிகமான நஷ்டத்திற்குள்ளாகி இருப்பதாக கூறப்படுகிறது.

'முரண்பாடான கணக்குகள், தவறான நிதி கையாளல், மற்றும் ஏனைய ஒழுங்கீனங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிப்பதற்காக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தை கோப் குழுமுன் ஆஜராகுமாறு கோரியுள்ளோம்' என்று அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

'ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் கோப் குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்படுவது இதுவே முதல்தடவையாகும். இந்த நிறுவனத்தை விசாரிப்பதற்கு கோப் குழுவுக்கு அதிகாரமில்லை என்பதுபோல் முன்னர் அபிப்பிராயம் நிலவியது. ஆனால் அதற்கான அதிகாரம் கோப் குழுவுக்கு உள்ளது என்று எமது சட்ட ஆலோச[illegible]தெரிவித்தனர்' எனவும் அமைச்சர் டியூ குணசே[illegible]ார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 மே 2011 புதன்கிழமை

# கைதான பல்கலை மாணவர்கள் இன்று அடையாள அணி வகுப்பில்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வணிக முகாமைத்துவ பீடத்தில் இடம்பெற்ற கைகலப்புச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட இரு மாணவர்களும் இன்று புதன்கிழமை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தப்படுவர்.

யாழ்.நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட இரு மாணவர்களையும் வாகனத்தில் வைத்தே பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு பார்த்தார்.

அதன் பின்னர் இருவரையும் இன்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அடையாள அணி வகுப்பில் நிறுத்த ஏற்பாடு செய்யுமாறும் பொலிஸாரைப் பணித்தார்.

சாட்சி வராத காரணத்தால் அணி வகுப்பு ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-9-319)

# குடாநாட்டில் கடும் வெப்பநிலை சில தினங்கள் நீடிக்கும்

யாழ் மாவட்டத்தில் தற்போது வெயிலும் மப்பும் மாறி மாறி நிலவும் காலநிலை உள்ளது. இதன் காரணமாக பகல் வேளையில் கடும் வெப்பம் நிலவுகிறது. அதேசமயம் வளிமண்டலத்தில் அதிக ஈரப்பதன் காணப்படுகிறது. இவ்வாறு திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி எஸ்.புஸ்பநாதன் தெரிவித்தார்.

தற்போது 32 பாகை செல்சியஸுக்கும் 33 பாகை செல்சியஸுக்கும் இடையில் பகலில் வெப்பநிலை நிலவுகிறது. இந்த அதிகரித்த வெப்பநிலை சில தினங்களுக்கு நீடிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-14)

## மரண அறிவித்தல்கள்



### பொன்னையா அருளானந்தம்

**(ஓய்வு பெற்ற கணக்காளர்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட பொன்னையா அருளானந்தம் நேற்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பொன்மணியின் அன்புக் கணவரும், அன்புருவேல், சர்ப்பா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரணீதரனின் மாமனுமாவார்.

அன்னாரது இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

110/2, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்

### சாந்தாதேவி அம்மா செல்லத்துரைக் குருக்கள்

சண்டிலிப்பாய் ஆலங்குழாயைச் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தாதேவி அம்மா செல்லத்துரைக் குருக்கள் நேற்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரை குருக்களின் அன்பு மனைவியும் பத்மினி, பாஸ்கரசர்மா, மணிமேகலா, ரஞ்சன், பாகுலேஸ்வரசர்மா(பாபுஐயா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற நடனசபாபதிசர்மா, சிவனேஸ்வரி, இராஜபுஷ்பம், சந்திரவதனி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கட்டுடையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கட்டுடை. (4083) கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

# நடமாடும் சேவை

தென்மராட்சி, மே 11

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கான குறைகேள் நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை யாழ்.கல்வி வலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-207)

# அளவெட்டியில் இன்று உன்னிமேனனின் இசை நிகழ்ச்சி

தென்னிந்திய திரை இசை பாடகர் உன்னிமேனனின் இசை நிகழ்வொன்று இன்று புதன்கிழமை இரவு 9 மணிக்கு அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் நடைபெறவுள்ள ஐங்கரன் இசை மாலை இசைப் பேழை வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொள்ளும் பாடகர் உன்னிமேனன் இசைப்பேழை வெளியீட்டை தொடர்ந்து இசை நிகழ்வொன்றை நிகழ்த்தவுள்ளார். ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ)

## கிரேசர் மகானுக்கு கண்ணீர் அஞ்சலிகள்!

புன்னாலைக்கட்டுவன் தெற்கு பிரதேசத்தை
வசிப்பிடமாகக் கொண்ட

**இளையதம்பி மகாலிங்கம்**

**(கிரேசர் - மகான்)**


நேற்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கந்தையா வரதன்**
*சுமித் ராஜ் கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையம்.*

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம். (575959)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
22 ★ 11 ★ 1936



மறைவு
22 ★ 04 ★ 2010


**அமரர் ஆறுமுகம் செல்லையா**

திதி- பூர்வபட்ஷ அட்டமி

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்- என்றும்
உங்கள் நினைவலைகளைச் சுமந்தபடி.....
இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இருபாலை கற்பக விநாயகப்
பெருமானை வேண்டுகிறோம்.

கோப்பாய் தெற்கு, கோப்பாய். (சி/575956) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## கந்தையா சண்முகநாதன்

புலவர் வீதி, நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகநாதன் 07.05.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற நாகேந்திரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முத்தையாவின் அன்புச் சகோதரனும், லிங்கேஸ்வரன், பரமேஸ்வரன், விஜியகுமாரி, வசந்தகுமாரி, சிவகுமாரி, சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சியாமளா, விக்கினேஸ்வரி, சந்திரகுமார், உதயநாதன், செல்வக்குமரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மலர்மதி, மாலதி, மகேஸ், சாரங்கன், மாதுமை, பிரியங்கா, சங்கீதா, பவித்திரா, திவாகரன், அபிலாஷ், துளசிகன், சபீன், ஆரனி, ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2011) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய். (சி/575952)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முப்படைகளுக்கும் தமிழர்கள் தேவை

நாட்டின் எந்தப் பகுதியிலும் பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இல்லை. நாடு முழுவதிலும் சமாதான வலயங்களே உள்ளன. இது ஜனாதிபதியின் செய்தி. அந்தச் செய்தியுடனேயே நான் இங்கு வந்துள்ளேன்-

எதிரிகள் என்று எவரும் இல்லாத காரணத்தால், ஒரே நாட்டில் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்கிறோம். அதனால் பாதுகாப்பு வலயங்கள் எதுவும் தேவை இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது-

முப்பது வருடங்களாக படையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதன் பெறுபேறாகவே இன்று இந்த மண்ணை உங்களிடம் கையளிக்கிறார்கள்-

இங்கு மீளக் குடியமரும் மக்கள், வெளிநாடுகள் திணிக்கும் தவறான குற்றச்சாட்டுக்களுக்குத் துணை போகக் கூடாது. அது அழிவுக்கே வழி வகுக்கும் -

வலிகாமம் வடக்கில் ஒன்பது கிராம சேவகர் பிரிவுகளில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை நடைபெற்ற மீளக் குடியமர்வு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்கண்ட கருத்துக்களை முன்வைத்தார்.

ஜனாதிபதியின் செய்தி எனக் குறிப்பிட்டு அமைச்சர் கூறியதனையும், பாதுகாப்பு வலயங்கள் தேவையற்ற நிலை உருவாகி இருப்பதாக அமைச்சர் பஸில் கூறியதையும் இங்கு நோக்குவது பொருத்தம்.

முப்பது வருடப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த செய்தியைப் புளகாங்கிதத்துடன் நாட்டுக்கு அறிவித்தவர் ஜனாதிபதியே.

எனினும் இரண்டு வருடங்களின் பின்னரே, இப்போதே, நாடு முழுவதிலும் சமாதான வலயங்களே உள்ளன என்பதனைத் தமது சகோதரரும் முக்கிய விவகாரங்களில் தமது ஆலோசகர்களில் ஒருவரும், அமைச்சருமான பஸில் மூலம் ஜனாதிபதி அறியப்படுத்தி உள்ளார்.

தமிழ் மக்கள், நாட்டின் பெரும்பான்மையினரான சிங்களச் சகோதரர்களுடனும் முஸ்லிம் சகோதரர்களுடனும் நட்புறவுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்பதனைப் புறந்தள்ளிப் பகைமை கொள்ள நினைத்தவர்கள் அல்லர்.

அவர்களது பிறப்புரிமைகளைப் பறித்து, ஜனநாயகத்தை விழுங்கி விடுவதற்கு சிங்கள அரசியல் தலைவர்கள் முற்பட்டதிலிருந்தே இரு தரப்புகளுக்கு இடையேயும் அரசியல் பிணக்குத் தோன்றியதோடு, ஒற்றுமைப் பாங்கும், சம நோக்கும் சீர்கெட்டுப் போயின.

அரசியல் பிணக்கை, நீதியான, நேர்மையான, சகோதரத்துவ உணர்வுடன் தீர்த்து வைப்பதில் கடந்த ஐம்பத்தைந்து வருடங்களாகச் சிங்கள அரசியல் தலைவர்கள் - சிங்கள மக்களின் அமோக ஆதரவுடன் பதவிக்கு வந்த ஆட்சித் தலைவர்கள் - நாட்டு நலன் கருதியும் சகோதரத்துவ சக வாழ்வு கருதியும் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படாமையே முப்பது வருடப் போருக்கு வித்திட்டது என்பது வரலாறாகிவிட்டது!

நடந்தவைகள் கடந்தனவாக இருக்கட்டும். இனிமேலாவது நாட்டில் சமாதானமும் அதனூடு நட்புறவும் வளர்ச்சியும் சபீட்சமும் பிறக்க வழி காண வேண்டும். அதன் பொருட்டு முன்னோக்கிய முதலடி எடுத்து வைக்கவேண்டிய பெரும் பொறுப்பு மஹிந்த அரசினுடையதே.

வடக்கு,கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயங்கள் மூடப்பட்டால் மட்டுமே எந்தப் பகுதியிலும் பாதுகாப்பு வலயம் இல்லை என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

ஆனால், அவை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையே உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று காரணம் கற்பிக்கப்படுகிறது.

இதே போன்றே-

போர் முடிவுற்ற பின்னரும் மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் அமைதியையும் நிலைநிறுத்தப் படையினரின் பிரசன்னம் தேவை என்று இராணுவத்தினர் தரப்பில் காரணம் கூறப்படுகிறது; உயர் அதிகாரிகள் அதனை அடித்துச் சொல்கிறார்கள்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பிரதான பொறுப்பு பொலிஸாருக்கு உரியதாக இருப்பினும், மேலை நாடுகள் பலவற்றிலும் படையினரும் இணைந்தே அந்தப் பணிகளில் ஈடுபடுகிறார்கள் என்றும் படை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

போர் முடிந்துவிட்டதால் இராணுவத்தினர் வடக்கு, கிழக்கில் இருந்து வெளியேறித்தான் ஆக வேண்டும் என்ற நியதியில்லை என்றும் பல காரண காரியங்களைத் தொட்டுக் காட்டி, நிலைநாட்டப்படுகிறது. அதற்கு அனுசரணை சேர்க்கும் விதத்தில் மக்களுக்கு எவ்வித இடையூறும் விளைவிக்காமல் தமிழ்ப் பிரதேசங்களில் பணி புரியலாம் என்றும் வாதாடப்படுகிறது.

அந்தக் கருத்து அல்லது ஏற்றபாடு பயன் அளிக்க வேண்டுமாயின், தமிழ் இளைஞர்களும் படைகளில் மிகக் கணிசமான எண்ணிக்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

தமிழ் பிரதேசங்களில் தகுதியான தமிழ், இளைஞர், யுவதிகளை பொலிஸ் சேவையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது போன்று-

முப்படைகளுக்கும் தமிழ் இளைஞர், யுவதிகளைச் சேர்க்க வேண்டும். ஏன் இருபது முப்பது வருடங்களுக்கு முன்னர், மூன்று படைகளிலும் தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையில் பணி புரிந்து நாட்டுக்கு விசுவாசமாக உழைத்தவர்கள் என்பது மறக்கக் கூடியதோ, மறுக்கக் கூடியதோ அல்ல,

அந்த நிலைமை மீண்டும் வந்தால் மட்டுமே, நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் சமாதான வலயங்கள் உள்ளன என்பதனை அர்த்த புஷ்டியாக்க இயலும். அரசு அந்த வழியை ஏன் நாடக் கூடாது?

மீளக் குடியமரும் மக்கள், வெளிநாடுகள் திணிக்கும் தவறான குற்றச்சாட்டுக்களுக்கு துணை போகக் கூடாது . அது அழிவுக்கே வழி வகுக்கும் என்ற பஸிலின் புத்திமதியின் ஊடாக, உங்களது பிரதேசங்களில்- சொந்த மண்ணில்- வாழ்வதற்கு வசதி செய்துள்ளோம். ஆகையால் நீங்கள் பட்ட கஷ்டங்களை- உண்மையான வாழ்க்கைப் பிரச்சினைகளை- 21 வருடங்களாகப் பட்ட இடர்களை- வெளியாருக்குக் கூறி அரசை அவமானப்படுத்தக் கூடாது என்று அமைச்சர் மறைமுகமாக எச்சரிக்கிறாரோ என்னவோ?

அத்தோடு வெளிநாடுகளிலிருந்து வரும் எவரும் (உறவினர்கள் உள்ளடங்கலாக) இப்போது மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதற்கான மறைபொருள் அறிவித்தலாகவும் இதனைக் கருதலாம்.

மற்றொரு விதமாக நோக்கின், இனப்பூசலை மீண்டும் உசுப்பிவிடுவதற்கான உத்தி இந்த உரையில் உள்ளடங்கி உள்ளதோ என்ற சந்தேகம் பிறப்பதனையும் தவிர்க்க முடியாது.

# கொழும்பு - ஓமந்தை ரயில் சேவை 21 ஆண்டுகளுக்குப் பின் ஆரம்பம்

## 27 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சர் தலைமையில் நிகழ்வு

கொழும்பு, மே 11

21 ஆண்டுகளுக்குப் பின்னர் வடக்கு ரயில் மார்க்கத்தில் கொழும்பிலிருந்து ஓமந்தை வரையான ரயில் சேவை மீண்டும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது கொழும்பிலிருந்து தாண்டிக்குளம் வரை சேவையில் ஈடுபடும் ரயில் ஓமந்தை ரயில் நிலையம் வரை பயணிக்கத்தக்க வகையில் தாண்டிக்குளத்தில் இருந்து ஓமந்தை வரை 10 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ரயில் பாதை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் ஒத்துழைப்புடன் ரயில் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டுள்ள இந்த ரயில் பாதைக்கு 50 கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களத்தின் பிரதித் தலைமைப் பொறியியலாளர் ஏ. அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஓமந்தை ரயில் நிலையம் வரையறுக்கப்பட்ட சிங்கர் நிறுவனத்தின் அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வடக்கு ரயில் மார்க்கத்தில் தனியார் நிறுவனமொன்றினால் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது ரயில் நிலையம் இதுவாகும். ஓமந்தை ரயில் நிலையமும் தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை வரையான ரயில் பாதையும் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

(த-22)

# அவசரகாலச் சட்டத்தை நீக்குவது குறித்து ஆராய்ந்து வருகிறது அரசு

கொழும்பு, மே 11

அவசரகாலச் சட்ட விதிகள் சிலவற்றை அல்லது அவசரகாலச் சட்டத்தை முழுமையாக நீக்குவது குறித்து அரசின் கவனம் திரும்பியுள்ளது.

ஐ.நா செயலாளர் பான்கீ மூனின் தருஸ்மன் குழுவின் அறிக்கை தொடர்பான அரசின் கருத்தைத் தெரிவிப்பதற்கு முன்னர் அவசரகாலச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், அவசரகாலச் சட்டத்தைத் தளர்த்துமாறு அல்லது அதை முழுமையாக நீக்குமாறு அரசின் சில கட்சிகள் ஏற்கனவே ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அவசரகாலச் சட்டத்தை நீக்கி பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக்க் கைதாகித் தடுப்பில் உள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பது குறித்துத் தற்போது அரசு கவனம் செலுத்தி வருவதாகீ அரசின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மீண்டும் அவசரகாலச்சட்டம் ஒருமாத காலத்துக்கு நீடிக்கப்பட்டிருந்தாலும் அடுத்த மாதத்தில் அதில் மாற்றமொன்று நிகழக் கூடும் என்று அரசின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

(த-22)

# வன்னி மனிதாபிமான நடவடிக்கை குறித்து அறிக்கை தயாரிக்கிறது படைத் தலைமை

கொழும்பு, மே 11

வன்னியில் இறுதிக் கட்டத்தில் படையினரின் மனிதாபிமான நடவடிக்கைகளை விளக்கும் விசேட அறிக்கைகளை இராணுவ, கடற்படை தலைமைகள் தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளன.

போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரச படைகள் போர்க்குற்றம் புரிந்தன என ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப் போரில் களத்தில் படையினர் மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகள், மக்களை மீட்க எடுத்த செயற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அறிக்கை ஒன்றை இராணுவத் தலைமை தயாரித்து வருகின்றது.

இதேபோன்று கடலில் மக்கள் பாதுகாப்பு, மீட்பு போன்ற மனிதாபிமான செயற்பாடுகள் குறித்து விசேட அறிக்கையை கடற்படைத் தலைமை தயாரித்து வருகின்றது.

இந்த அறிக்கைகள் அரசிடம் சமர்ப்பிக்கப்படும். ஐ.நாவுக்கு அரசு அனுப்பவுள்ள பதிலோடு இந்த அறிக்கைகளும் இணைக்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேசிய பொலிஸ் கல்விப் பீடத்தை நிறுவ கிடைத்தது அமைச்சரவையின் அனுமதி

கொழும்பு, மே 11

தேசிய பொலிஸ் கல்விப்பீடமொன்றை நிறுவும் அரசின் தீர்மானத்துக்கு அமைய அது தொடர்பான சட்டவிதிகள் உள்ளடக்கிய சட்டமூலத்துக்கு அமைச்சரவையின் அனுமதிகிடைத்துள்ளது.

வெகு விரைவில் இந்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

பொலிஸ் துறையில் குறிப்பிட்ட பதவிகளை வகிப்பதற்குப் பொலிஸ் உத்தியோகத்தர்களினதும், சட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொறுப்பை ஏற்கும் ஏனைய உத்தியோகத்தர்களினதும் தொழில் சார் அறிவு மற்றும் ஆற்றலை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இது நிறுவப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் நிறுவப்படும் இந்த தேசிய பொலிஸ் கல்விப் பீடத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் முகாமைத்துவச் சபையொன்றினால் மேற்கொள்ளப்படும்.

இந்தச் சபைக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர், நிதியமைச்சின் பிரதிச் செயலாளர், பொலிஸ்மா அதிபர், தேசிய பொலிஸ் கல்விப்பீடத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகியோர் அதிகாரபூர்வமாக நியமிக்கப்படவுள்ளனர்.

அத்தோடு தேசிய பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பொது நிர்வாகம் தொடர்பான விசேட அறிவாற்றல் கொண்ட பிரமுகர்கள் இருவரும் இந்தச் சபையில் உள்ளடங்குவர்.

மேற்படி முகாமைத்துவ சபையின் அதிகார பூர்வ தலைவராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே செயற்படுவார்.

தேசிய பொலிஸ் கல்விப்பீடத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரே நியமிக்கப்படுவார்.

இந்தக் கல்விப்பீடத்தின் அதிபராகவும் நிர்வாக உத்தியோகத்தராகவும் பிரதிப் பொலீஸ் மா அதிபரொருவர் அல்லது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரொருவர் நியமிக்கப்படுவார்.

(த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் கடல்; ஆனால் அதில் இறங்க அனுமதியில்லை

## வலித்தூண்டல் மக்களின் அங்கலாய்ப்பு

''கண்ணுக்குத் தெரிந்த தூரத்தில் கடல். அந்தக் கடலில் இறங்கித் தொழில் செய்வதற்கு அனுமதியில்லை. இது தான் எங்கள் மீள்குடியமர்வின் சீத்துவம்'

இப்படி அங்கலாய்ப்பவர்கள் வேறு யாருமில்லை. கடற்கரைக் கிராமமான கீரிமலை வலித்தூண்டலில் மீளக்குடியமர்ந்த மக்கள்தான்.

21 வருடங்களின் பின்னர் மீளக்குடியமர்ந்த அந்த மக்களின் வாழ்வாதாரத் தொழில் கடற்றொழில். அந்தத் தொழிலைவிட்டு, தொழில் உபகரணங்களைக் கைவிட்டுச் சென்றவர்கள் அந்த மக்கள்.





வேறு பிரதேசங்களில் பெரும் கஷ்ட நிலையில் வாழ்ந்து வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்களில் 150 குடும்பங்கள்தான் இப்போது மீள்குடியமர்ந்துள்ளன. எஞ்சிய குடும்பங்கள் கல்வி வசதி, அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் மீள்குடியமராமல் முன்னைய இடங்களிலேயே வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கின்றன.

இந்த மக்களின் அவலங்களைப் பார்வையிடுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எஸ்.சிறீதரன் ஆகியோர் அங்கு சென்றிருந்தனர்.

தமது அவலங்களை அந்த மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சோகத்துடன் எடுத்துக் கூறினர். தமக்கு உதவுமாறு அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மன்றாட்டமாகக் கேட்டனர்.

எமது கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் கடல் உள்ளது. அந்தக் கடலே எமது வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்தது. அந்தக் கடலில் தொழில் செய்தே எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தியிருந்தோம்.

இடம்பெயர்ந்தபோது எமது வள்ளங்களையும் கடற்றொழில் உபகரணங்களையும் கைவிட்டுச் சென்றோம். இன்று எம்மிடம் படகுகளும் இல்லை. வலைகளும் இல்லை. அவற்றைக் கொள்வனவு செய்ய ஒருவருக்கு ஆகக்குறைந்தது 10 லட்சம் ரூபா தேவை.

பெரிய அளவில் தொழிலைச் செய்யாவிட்டாலும் சிறு அளவில் வள்ளங்களில் தொழில் செய்யலாம் என்றால் கடலில் இறங்க அனுமதியில்லை.

சேந்தாங்குளத்தில் இருந்து தொழில் செய்யுமாறு கூறுகின்றனர். அங்கிருந்து தொழில் செய்தாலும், அங்குவைத்து வரும் உபகரணங்கள் திருடப்பட்டுவருகின்றன. எமது பிரதேசத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சேந்தாங்குளத்துக்குத் தினமும் உபகரணங்களை எடுத்துச் சென்று திருப்பிக் கொண்டு வருவதில் கஷ்டம் ஏற்படுகின்றது.

கண்ணுக்குத் தெரிந்த தூரத்தில் கடலில் இறங்க அனுமதி வழங்காத நிலையில் எமது பிரதேச கடல் வழியாக கடற்றொழிலில் ஈடுபடும் வள்ளங்களைப் பார்த்து கொட்டாவி விடுகிறோம்.

எமது உறுப்பினர்களான நீங்கள், நாங்கள் கடலில் இறங்க உதவி செய்யுங்கள். அப்போது தான் எமது வாழ்க்கையை சீராக்க முடியும். வீட்டைக் கட்டமுடியும். மலசல கூட வசதிகளை வளம்படுத்த முடியும்.

இப்படி உருக்கமான வேண்டுகோளை முன்வைத்தனர் அந்தப் பிரதேச மக்கள்.

எமது குமர்ப் பிள்ளைகளைக் கூட்டி வரமுடியாது. வெட்ட வெளியில்தான் மலசலம் கழிக்க வேண்டிய நிலை. இந்த நிலையில் எப்படி குமர்ப் பிள்ளைகளைக் கூட்டி வர முடியும்.

மீளக்குடியமர்ந்துள்ள 150 குடும்பங்களுக்கும் மலசல கூட வசதியேயில்லை. வெட்ட வெளிதான் அவர்களது மலசல கூடமாக உள்ளது என்று முறையிட்டார் நடுத்தர வயதுப் பெண் ஒருவர்.

மழைவந்தால் போதும். எமது வீடுகள் எல்லாம் ஒழுக ஆரம்பித்துவிடும். அந்த மழை ஒழுக்கில் தான் இருக்க வேண்டிய நிலை. எமக்கு பெரிய வீடு என்று இல்லாமல் சிறிய வீடு ஒன்றையாவது அமைத்துத் தரவேண்டும் என கோரினார் மற்றொரு பெண்.

''எனது பேரன் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்ற இருக்கிறார். அவர் குடும்பம் இங்கு வரமுடியாத நிலையில் உள்ளார். இங்கு கல்வி வசதி இல்லை. அப்படியான நிலையில் அவர் இங்கு எப்படி மீளக்குடியமரமுடியும்'' என்று தனது ஏக்கத்தை வெளிப்படுத்தினார் மற்றொரு பெண்.

### கொண்டோடி

மீளக்குடியமர்ந்து மூன்றரை மாதம் ஆகிவிட்டது. ஒரு தடவை மட்டும் உலர் உணவு தந்தார்கள். அதன் பின் எந்த நிவாரணமும் கிட்டவில்லை. ஐயாயிரம் ரூபா மட்டும் தந்தார்கள். அதன் பின் எந்த உதவியும் கிட்டவில்லை என்றார் இன்னொரு குடும்பஸ்தர்.

தமது மண்ணில் மீளக்குடியமர்ந்து விட வேண்டும் என்ற அவாவுடன் குடியமர்ந்த மக்கள் அவலத்துடன் வாழ்க்கையை ஓட்டும் விடயம் வெளியில் வருவதில்லை.

அவர்களை அடிக்கடி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து அவர்கள் குறைகளைக் கேட்டு அவற்றை வெளிக் கொணர்ந்து அந்த மக்களின் வாழ்வு மேம்பட உதவவேண்டும் என்பதே அந்த மக்களின் வேண்டுகோளாகும்.

*

ESOL Diploma in English
City & Guilds
Approved Centre

City & Guilds a Royal Chartered Institution is one of the world's leading vacational qualification awarding bodies. எமது கல்லூரி City & Guilds Rayal Charter இனதும் Cambridge பல்கலைக் கழகத்தினதும் பதிவு செய்த நிலையமாகும்.



Our Lecturers
1. Mr.K.NAGARAJAN. B.A (cey)
M.A (Kelaniya) TKT (Cambridge, UK)
a. 15 வருடங்கள் கிழக்குப் பல்கலைக்கழக ELTU வில் போதனாசிரியராக இருந்தவர்.
b. 20 வருடங்களுக்கு மேலாகத் திறந்த பல்கலைக்கழக வருகை தரு ENGLISH Tutor ஆக இருப்பவர்.
c. Served as a tutor for the promotion of the Quality Improvement of Teachers by Secretary for Education chaired by the State Secretary for Education.
2. Rev.Fr.A.Sahayathasan
M.A (English Language) University of Sydney
M.A (English Litterature) University of Sydney

Why City & Guilds English Qualifications?
Recognized by UK Universities and UK Border Agency
Directly Linked to the Common European Framework
Certificate for Lifetime

We are pleased to announce that City & Guilds IESOL*at B2 (Communicator) and C1 (Expert) levels has been recognised as meeting the requirements of the Home Office Border and Immigration Agency's Points Based System

B2,C1 மட்டங்களில் பல மாணவர்கள் எமது கல்லூரியில் படித்து பரீட்சையில் சித்தியடைந்து City & Guilds ன் சான்றிதழ்களையும் பெற்று வெளிநாடுகளிற்கு சென்றுள்ளனர். பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.



குறுகியகாலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற சரளமாக எந்தச் சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப்பிழைகள் இல்லாமால் எழுத, எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி. அடிப்படையில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்படும்.

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1, A2) மட்டுமே
எல்லா மட்டங்களிலும் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

| Course Schedule | Mon -Tue-Wed-Thu-Fri | Sat & Sun |
|---|---|---|
| Duration | 2 Months (100 hours) | 3 Months (100 hours) |
| Time | 8.30.10.30 a.m 10.30.12.30 p.m | 8.30.11.30 a.m |
| Commencement | 18.05.2011 | 21.05.2011 |

Registration : Rs 500/= Course Fee :100 /= per hour

வகுப்புகள் 18.05.2011 ஆரம்பம்

CITY COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely. T.P 0213216027 / 0778303887

நீங்கா நினைவில் ஆண்டுகள் 6



திருமதி
நகுலேஸ்வரி குகேந்திரன்
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

மண்ணில் 26.05.1950 — விண்ணில் 16.05.2005
திதி: 11.05.2011

அன்புள்ள அம்மாவுக்கு....

நாங்கள் நலம், நீங்களும் அம்மம்மாவும்...

இன்றுடன் (11.05.2011) 6 ஆண்டுகள் ஆகின்றன நீங்கள் எங்களை விட்டு இறைவனிடம் சென்று...

அம்மா! உங்களின் தனிமையை உணர்ந்தோ என்னவோ தெரியவில்லை, உங்களுக்குத் துணையாக இருக்க அம்மம்மா வந்து இன்றுடன் 3 மாதங்கள் ஆகின்றன.

நீங்கள் இருவரும் புண்ணிய பூமியில் மகிழ்வுடன் இருப்பீர்கள் என்று எண்ணுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் நாங்கள்.

*இல. 6, சந்தன மாதா கோயில் வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.

(4051) (28-19-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவுரையாளர் சம்பளப் பிரச்சினையை அடாவடித்தனத்தால் தீர்க்க முடியாது

## கபீர் ஹாஷிம் கூறுகிறார்



கொழும்பு, மே 11

பல்கலைக் கழகவிரிவுரையாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை அடாவடித்தனத்தால் தீர்க்க முடியாது. அவர்களின் கோரிக்கை நியாயமானது.

-இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான கபீர் ஹாஷிம் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்குமேலும் கூறியவை வருமாறு:-

கடந்த 2008ஆம் ஆண்டு ஜனவரிமாதம்31ஆம்திகதிஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்தது. அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மற்றுமொரு உறுதிமொழியை ஜனாதிபதி அவர்களுக்கு வழங்கினார்.

அத்துடன், ஜனாதிபதியின் அப்போதைய ஆலோசகராக செயற்பட்ட அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர், விரிவுரையாளர்களுக்கு டிசெம்பர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நூற்றுக்கு 25 சத வீத சம்பள உயர்வு வழங்கப்படும் என உறுதி அளித்தனர்.

ஆனால், அதற்கான சுற்று நிருபம் வெளியிடப்படாதமையால் பெப்ரவரி மாதத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியது. எனினும் இதுவரை சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் 57 ஆயிரத்து 755 ரூபா சம்பளம் பெறுகின்ற அதேவேளை, மத்திய வங்கியின் ஆளுநர் ஒரு லட்சத்துக்கும் அதிகமான சம்பளம் பெறுகிறார். சாதாரண விரிவுரையாளர் ஒருவர் 33 ஆயிரம் ரூபா பெறுகிறார்.

ஆனால், மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் 70 ஆயிரம் வரை சம்பளம் பெறுகிறார். இருந்தும் பேராசிரியர்களின் சம்பளத்தை இரண்டு லட்சம் வரை உயர்த்துவேன் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். ஆனால், 2011ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்துக்கு மூவாயிரத்து 600 ரூபாவே அதிகரிக்கப்பட்டது.

பல்கலைக்கழக பிரச்சினைகளை மூடி மறைக்க வெளிநாட்டு சூழ்ச்சிகள் மற்றும், பான் கீ-மூன் போன்ற காரணங்களை அரசு முன் நிறுத்துகிறது. எவ்வாறாயினும், பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் விரிவுரையாளர் சங்கத்துடன் பேச்சு நடத்த குழு ஒன்றை நியமித்துள்ளோம். அந்தக் குழுவில் நான் இணைப்பாளராக உள்ளேன். மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, விஜேதாச ராஜபக்ஷ, அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் அந்தக் குழுவில் ஏனையவர்கள வர். விரைவில் சந்திப்பை நடத்தி, நாடாளுமன்றிலும் இது குறித்து குரல் எழுப்புவோம்.- என்றார். (சி)

## இனிப்பு அப்பம் உண்ட 50 மாணவர்கள் வைத்தியசாலையில்

கெக்கிராவை முருங்கா ஹிட்டிகந்த வித்தியாலயத்தில் இனிப்பு அப்பம் உண்ட 50 மாணவர்கள் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாடசாலையில் பகலுணவுக்காக இந்த இனிப்பு அப்பங்கள் தனியார் குத்தகைக்காரர் ஒருவரால் வழங்கப்பட்டுள்ளன. இந்த அப்பத்தை உண்டபின் அவர்களுக்கு வாந்தி, தலைச்சுற்று போன்றவை உண்டானதால் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் உண்ட இனிப்பு அப்பத்தின் மாதிரி இரசாயனப் பகுப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் குத்தகைக்காரரின் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொதுசன சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 13பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனையோர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## ஐ.நாவுக்கான இலங்கை தூதுவராக தமரா குணநாயகத்தை நியமிக்கத் திட்டம்

கொழும்பு, மே 11

ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றிவரும் ஷேனுகா செனவிரத்னவை கொழும்புக்குத் திருப்பியழைக்கவுள்ளதாகவும் கியூபாவில் உள்ள இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகத்தை இந்தப் பதவிக்கு நியமிக்கும் சாத்தியம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


ஐ.நா. நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் தொடர்ந்தும் முக்கியத்துவம் பெற்றுவரும் நிலையில் இந்த நியமனம் அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமரா குணநாயகம் மனித உரிமைப் பணியாளராகவும் பணியாற்றியவர். இலங்கைக்கு எதிராக மனித உரிமை விவகாரங்கள் மேலெழும்போது இலங்கையைப் பாதுகாப்பது குறித்து தமரா முயற்சிப்பார் என்று அரசு எதிர்பார்த்துள்ளது. ஐ.நா. மனித உரிமை கள் பேரவை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில் அணிசேரா அமைப்பில் உள்ள நாடுகளின் ஆதரவைப்பெற்றுக் கொள்வதற்கான முயற்சியிலும் அரசு ஈடுபட்டு வருகின்றது.

லண்டனிலுள்ள வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகளான பொதுநலவாயத்தின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் அன்ட்ரூ பற்றிக், பிரதிப் பணிப்பாளர் வில்லியம் மிடில்ரன், இலங்கைக்குப் பொறுப்பான பிரிவின் தலைவர் திருமதி கிறிஸ்ரின் மைக்மெய்ஸ் ஆகியோர் உலகத் தமிழ் பேரவையின் உறுப்பினர்களை இந்தவாரம் சந்தித்துள்ளது.

இந்தச் சந்திப்பு அருட்தந்தை எஸ்.ஜே. இம்மானுவேல் தலைமையில் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

## எதிர்ப்பு...



அரசினால் முன்மொழியப்பட்டுள்ள தனியார் ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிராக பொதுமக்களின் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் திணைக்களத்திற்கு முன்னால் இடம்பெற்றபோது, மக்கள் கலந்துகொண்டு கையெழுத்திடுகின்றனர். (ச)

### சுய கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில்

# இலங்கை மீது வெளிநாட்டு சக்திகள் குற்றஞ்சாட்டுவதை அனுமதிக்கமுடியாது

## ஹக்கீம்தான் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, மே 11

இலங்கையின் சுயகௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில், தன்னாதிக்கமும் இறைமையும் மிக்க நாடொன்றின் மீது வெளிநாட்டு சக்திகள் குற்றஞ்சாட்டுவதை எம்மால் அனுமதிக்க முடியாது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் அண்மைய நடவடிக்கைகள் கூட இதனையே எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளன.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அதேவேளை, சர்வதேசத்தின் கடப்பாடுகளையும் இலங்கை பொறுப்புடன் நிறைவேற்றி வருகின்றது

- இவ்வாறு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

''குற்றமிழைக்கும் வழிமுறைகளும், சட்டவிரோதமாக மனிதர்களை வேறு நாடுகளுக்கு கடத்தலும்'' என்ற தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஐந்து நாள்கள் செயலமர்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் நீதியமைச்சும், ஆஸ்திரேலியாவின் சட்டமா அதிபர் திணைக்களமும் கூட்டாக இணைந்து இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தன. இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் உட்பட பல உயர் அதிகாரிகளும் கலந்துக் கொண்டனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வேறு நாடுகளுக்கு கள வாக மனிதர்களை கடத்திச் செல்வதை தடுப்பதற்கு இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சட்டத்தை அமுல்படுத்தும் அரச நிறுவனங்களும், நீதித்துறையும், சட்ட மா அதிபர் திணைக்களமும், புலனாய்வுத் துறையும் அதற்கான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன.

ஒரு நாட்டிலிருந்து வளம் கொழிக்கும் வேறொரு நாட்டிற்கு மக்கள் உள்நாட்டு பிரச்சினைகளுக்காகப் புலம் பெயர்ந்து செல்வதாக பொதுவாகக் கூறப்பட்டாலும், பெரும்பாலும் பொருளாதார காரணிகளுக்காகவே ஆபத்தான சூழ்நிலையிலும் கூட அவர்கள் அவ்வாறு வெளிநாடுகளை நோக்கிச் செல்கின்றனர்.

வெளிநாடுகளில் புகலிடம் கோருவோர் விடயத்தில் ஒவ்வொரு நாடும் வெவ்வேறு நடைமுறைகளை கையாண்டு வருகின்றன.

பிராந்தியத்திலும்,சர்வதேச மட்டத்திலும் களவாக மேற்கொள்ளப்படும் மனிதக் கடத்தல்களையும்,ஏனைய குற்றச் செயல்களையும் பொறுத்த வரை அவற்றைத் தடுப்பதற்கு இலங்கை தனது பங்களிப்பைச் சிறப்பாக செய்துவருகின்றது. எனினும், குறித்த விடயத்தோடு நேரடியாகத் தொடர்பற்ற போதிலும் இறையாண்மையும், தன்னாதிக்கமும் உள்ள இந்நாட்டின் மீது வெளிச்சக்திகள் குற்றஞ்சாட்டும் தோரணையில் சுட்டு விரலைக் காட்டுகின்றன.

வல்லரசுகள் விடயத்தில் ஒரு விதமாகவும், இலங்கை போன்ற சிறிய நாடுகள் விடயத்தில் வேறு விதமாகவும் அணுகுமுறைகள் அமைந்திருப்பது வருந்தத்தக்கதும், எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாததும் ஆகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் அண்மைய நடவடிக்கைகள் கூட இதனையே எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளன - என்றார்.

## பாடநூல் அச்சுவேலைக்கு கேள்விகோரல் முறை நீக்கம்

அடுத்த வருடம் அரச பாடசாலைகளுக்குத் தேவையான இலவசப் பாடப் புத்தகங்களை அச்சேற்றும் பொறுப்பு அரச அச்சகத்துக்கும், அரச அச்சக கூட்டுத் தாபனத்துக்கும் பொறுப்பளிக்கப்படும் - என கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்மூலம் இதுவரை இருந்து வந்த கேள்விகோரல் முறை நீக்கப்படும் எனவும், இந்தப் புதிய திட்டம் தொடர்பில் கல்வியமைச்சர் பந்துல குணவர் தன சமர்ப்பித்த பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்துள் ளது எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்குப் பாடப் புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதில் இதுவரை ஏற்பட்டு வந்த தாமதங்களை நீக்குவதற்காகவே இந்தத் தீர்மனம் எடுக்கப்பட்டுள்ளது.

உரிய நேரத்தில் மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்படாவிட்டால் அவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு அரச திணைக்களங்களுக்கு அறிவித்தல்கள் அனைத்தும் தமிழ் மொழியில்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உறுதியளிப்பு

யாழ்ப்பாணம்,மே 11

வடக்கு- கிழக்கில் உள்ள அரச திணைக்களங்களுக்கு விடுக்கப்படுகின்ற அறிவித்தல்கள் யாவும் இனிமேல் தமிழ் மொழியில் மட்டும் அனுப்பப்படும் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உறுதியளித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்திருந்த அமைச்சர் உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரச திணைக்களங்களுக்கு அனுப்பப்படுகின்ற அறிவித்தல்கள் யாவும் சிங்கள மொழியில் உள்ளமையால் அதிகாரிகள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்துப் பல்வேறு தரப்பினரும் இன்று என்னிடம் கூறியுள்ளனர்.

இதற்குத் தீர்வு காணும் வகையில் இனிவரும் காலங்களில் அனுப்பப்படவுள்ள கடிதங்கள், சுற்றுநிருபங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் அனுப்புவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், தமிழ்ப் பிரதேசங்களில் தேசிய கீதமும் சிங்களத்தில் அன்றி தமிழில் பாடிக் கொள்ளலாம். தேசிய நிகழ்வுகளில் மட்டும் முடிவில் சிங்கள மொழியில் இசைக்கப்பட்டுப் பின்னர் தமிழ் மொழியிலும் பாடிக் கொள்ளலாம்.

தமிழ், சிங்களம் அரச கரும மொழியாக்கப்பட்டதன் பின்னரும் இத்தகைய முரண்பாடுகளை முன்வைத்துக் கொள்ளாமல் தேசிய ஒருமைப்பாட்டுடன் எமது நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் அனைத்தும் இனிவரும் காலங்களில் தமிழில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்



கென தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். வெகுவிரைவில் அத்தகைய பிரச்சினைக்கும் தீர்வு எட்டப்படும் - என்றார்.

மொழி தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு கூறும் பொருட்டு எமது அமைச்சின் ஆணைக்குழு அலுவலகம் ஒன்று கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-9-14)

# மாணவர் வழிகாட்டல் கருத்துரை

யாழ்ப்பாணம்,மே 11

மகளிர் அபிவிருத்தி நிலையம் 'ஒழுங்கான சமுதாயத்தின் வழிகாட்டிகள் மாணவர்கள்' என்னும் தலைப்பில் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தரம் 10 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்குக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவசந்திரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் பவானி, யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசன் ஆகியோர் பங்குகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இளம் சமுதாயத்தினர் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பாலியல் ரீதியான அச்சுறுத்தல்கள், இவற்றால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றியும் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சமூகச் சீரழிவுகள் தொடர்பாகவும் இந்தக் கருத்தரங்கில் கருத்துரை வழங்கப்படவுள்ளது.

பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் இந்த நிகழ்வில் ஆளுமை சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளும் இதில் வழங்கப்படும். (த-311)

# வெளிவாரிப் பரீட்சைகள் 16 ஆம் திகதி ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்ட 2008 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கலைமாணி பகுதி II பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 மணிவரை நடைபெறும் இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெற உள்ளன.

இந்தப் பரீட்சைகள் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்திலும் முகாமைத்துவத்துறை மண்டபத்திலும் நடைபெறவுள்ளன என்று வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகின் உதவிப் பதிவாளர் எஸ்.கே.பிரபாகரன் அறிவித்துள்ளார். (த-4)

# காரைநகரிலிருந்து மன்னாருக்கு பஸ்சேவை


யாழ்ப்பாணம்,மே11

காரைநகரில் இருந்து பூநகரி ஊடாக மன்னார் வரையான பஸ் சேவை யாழ்.பேருந்து நிலையத்தில் இருந்து நடைபெறுகின்றது.

தினமும் காலை 7,8 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம்- சாவகச்சேரி - தனங்கிளப்பு ஊடாக பூநகரி - மன்னார் வரை இந்தச் சேவை நடைபெறுகின்றது.

கடந்த 8 ஆம் திகதி முதல் இந்தச் சேவை நடைபெறுகிறது. திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களின் நன்மை கருதி திருக்கேதீஸ்வரம் ஆலயம் வரை இந்த பஸ்சேவை நடைபெறும் என யாழ். பிரதான பிராந்திய முகாமையாளர் கே.கேதீசன் அறிவித்துள்ளார். (த)

## சேவைக்குக் கௌரவம்...



முன்னுதாரணமாக: வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணிக்கு சிறந்த சமூக பாதுகாவலன் விருது அண்மையில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. வலி.மேற்கு பிரதேச சபையின் நிர்வாக உத்தியோகத்தர் க.பாலசுப்பிரமணியம் சமூக பாதுகாவலன் விருதை வழங்கிக் கௌரவிக்கின்றார். (த- 302)

# முயல் வேட்டையில் பொலிஸார்

வலி.வடக்கு; மே 11

திருடர்களைப் பிடிப்பதாகக் கூறிச் சென்ற பொலிஸார் முயல் வேட்டையில் ஈடுபட்டவர்களின் முயல்களைபறித்துச் சென்ற சம்பவம் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் ஆள்கள் அற்ற வளவுகளில் நாயுடன் சென்று முயல் வேட்டையாடித் தமது நாளாந்த உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் திருடர்களைப் பிடிக்க வந்ததாகக் கூறி பொலிஸ் வாகனத்தில் அந்தப் பகுதிக்குச் சென்ற குறிப்பிட்ட பகுதி பொலிஸ் நிலையத்தைச் சேராத பொலிஸார் முயல் வேட்டையில் ஈடுபட்டவர்களைக் கூப்பிட்டு அவர்களிடம் இருந்த முயல்களைப் பெற்றுக்கொண்டு எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என எச்சரித்து விட்டுச் சென்றனர் என்று முயல்களைப் பறிகொடுத்தவர்கள் தெரிவித்தனர். (த-86)

# ஐந்து அருட்சகோதரர்கள் புதிய குருக்களாக அபிஷேகம்

கொழும்புத்துறை, மே 11

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 5 அருட்சகோதரர்கள் எதிர்வரும் 18 ஆம்திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.யாழ்.புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறும் குருத்துவ அபிஷேகத் திருச்சடங்கில் புதிய குருக்களை ஆயர் திருநிலைப்படுத்துவார்.

சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தைச் சேர்ந்த ஜெயராசா எல்மோ அருள்நேசன், மாதகல் புனித தோமையார் ஆலயத்தைச் சேர்ந்த பத்திநாதர் றெனாட் செறில்நெஸ், எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தைச் சேர்ந்த கீதபொன்கலன் லக்ஸ்மன் ஆகியோர் யாழ்.மறை மாவட்டக் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் மூவரும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் குருத்துவக் கல்வியைக் கற்று மெய்யியல், இறையியல் இளங்கலைமாணிப் பட்டங்களைப் பெற்றனர்.

அமலமரித்தியாகிகள் சபையைச்சேர்ந்த திருத்தொண்டர்களான யேசுதாசன் லெபோன்சுதன், சந்தியாப்பிள்ளை பிலிப்றஞ்சன் குமார் ஆகியோர் அன்றைய தினம் குருக்களாக அபிஷேகம் செய்யப்படவுள்ளனர். (த-135)

# குடாநாட்டில் டெங்கு நோய் முழுமையான கட்டுப்பாட்டுக்குள்

## சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், மே 11

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு யாழ். மாட்ட சுகாதாரம் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஆண்டை விட இந்த வருடம் டெங்கு நோயின் தாக்கம் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை டெங்கு நோயால் ஒருவர் மட்டும் உயிரிழந்துள்ளார். அத்துடன், டெங்கு நோயின் தாக்கத்துக்குள்ளாகுவோரின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளது.

சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து பல்வேறு அமைப்புக்கள் மேற்கொண்ட டெங்கு விழிப் புணர்வுச் செயற்பாட்டின் பயனாகவே இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களிலும் டெங்கு நோயின் தாக்கத்தை இல்லாதொழிப்பதற்குப் பொதுமக்கள் மேலும் விழிப்புடன் செயற்படவேண்டும்.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிந்து அவற்றைத் துப்புரவு செய்து வைத்துக் கொள்ளவேண்டும். இதனைப் பொதுச் சுகாதார பரிசோதர்களும் அடிக்கடி மேற்பார்வை செய்து கொள்ள வேண்டும் -என்றார். (த-9-14-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34 கிராம சேவையாளர் பிரிவுகளில் 13 இல் மட்டுமே மக்கள் மீளக்குடியமர்வு

## வலி.வடக்கு நிலை குறித்து அரச அதிபர்

யாழ்ப்பாணம், மே 11

வலி.வடக்கில் கடந்த ஆறு மாதங்களுக்குள் 13 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இன்னும் 21 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமத்தப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வலி.வடக்கின் மீளக்குடியேற்ற முன்னேற்றம் குறித்து அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இளவாலை வடக்கு,இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் பன்னாலை, கொல்லங்கலட்டி, நகுலேஸ்வரம், தெல்லிப்பழை, தந்தை செல்வாபுரம், மாவிட்டபுரம் தெற்கு. பளை வீமன்காமம் வடக்கு, பளை வீமன்காமம் தெற்கு, வறுத்தலைவிளான் ஆகிய இடங்களில் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை மத்தி, காங்கேசன்துறை தெற்கு, கட்டுவன், கட்டுவன்மேற்கு, தென்மயிலை, குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு, வசாவிளான் மேற்கு, வசாவிளான் கிழக்கு, மயிலிட்டி கிழக்கு, தையிட்டி கிழக்கு, மயிலிட்டித்துறை தெற்கு, தையிட்டி வடக்கு, தையிட்டி தெற்கு , மயிலிட்டித்துறை வடக்கு, பலாலி தெற்கு, பலாலி கிழக்கு, பலாலி வடக்கு, பலாலி தென்மேற்கு, பலாலி மேற்கு ஆகிய இடங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் - என்றார். (த-9)

## ஓயவில்லை; இன்னும் அவலம் ஓயவில்லை!!

# இடம்பெயர்ந்த 47,300 பேர் உறவினர், நண்பர் வீடுகளில்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.மாவட்டத்தில் 47 ஆயிரத்து 300 பேர் இதுவரை தமது சொந்த இடத்தில் மீளக்குடியேறாமல் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த காலங்களில் இடம்பெற்ற போரினால் இடம்பெயர்ந்த மக்களைக் குறிப்பிட்ட அளவில் மீளக்குடியமர்த்தி உள்ளோம். இருப்பினும் இன்னும் உறவினர், நண்பர்களின் வீடுகளில் மக்கள் தங்கியுள்ளனர்.

அவற்றின் விவரம் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

வேலணையில் 93 குடும்பங்களைச் சேர்ந்த 376 பேரும், ஊர்காவற்றுறையில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், காரைநகரில் 114 குடும்பங்களைச் சேர்ந்த 350 பேரும், யாழ்ப்பாணத்தில் 641 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து531 பேரும், நல்லூரில் 648 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 584 பேரும், சண்டிலிப்பாயில் 228 குடும்பங்களைச் சேர்ந்த 737 பேரும், சங்கானையில் 660 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 551 பேரும், உடுவிலில் 143 குடும்பங்களைச் சேர்ந்த 559 பேரும், தெல்லிப்பழையில் 6 ஆயிரத்து 443 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 237 பேரும், கோப்பாயில் 211 குடும்பங்களைச் சேர்ந்த 559 பேரும், சாவகச்சேரியில் 616 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 167 பேரும், மருதங்கேணியில் ஆயிரத்து 300 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 608 பேரும் என மொத்தம் 11 ஆயிரத்து 108 குடும்பங்களைச் சேர்ந்த 47 ஆயிரத்து 300 பேர் இவ்வாறு தங்கியுள்ளனர் - என்றார். (த-9)

## நினைவுகள்...



*மீண்டும்:* தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் அமரர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 25 ஆவது ஆண்டு நினைவு நாள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் ஸ்ரீ சபாரத்தினம் கொல்லப்பட்ட கோண்டாவில் கிழக்கு கோகுல வீதியில் அமைந்துள்ள அன்னங்கை தோட்டவெளியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், ரெலோ அமைப்பின் தலைவர் ப.உதயராசா உட்பட ரெலோ அமைப்பின் உறுப்பினர்கள் நினைவுச்சுடரை ஏற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (த-86)

# ஓட்டோ தடம்புரண்டு ஒருவர் காயம்

தென்மராட்சி, மே 11

ஓட்டோ வேகத்தை கட்டுப்படுத்த முடியாததால் தடம்புரண்டதில் அதன் பயிலுநர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த 7 ஆம் திகதி பாலாவி வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சண்முகநாதன் சதீஸ்(வயது-16) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டோ தடம்புரண்டதில் பயிற்சியாளருக்குச் சிறுகாயம் ஏற்பட்டு வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிசிச்சை பெற்றுச் சென்றுள்ளார். (த-207)

# மனைப் பொருளாதார விருத்திக்கு யாழ்.பிரதேச செயலகம் தெரிவு

யாழ்ப்பாணம், மே 11

மனைப்பொருளாதார அபிவிருத்தித்திட்டத்துக்கு யாழ். பிரதேச செயலகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மிகவும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற பயனாளிகள் இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்வுள்ளனர்.

கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் ஊடாக இந்தப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதற்கட்டமாக 25 குடும்பங்கள் இந்தத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற நோக்கத்தில் இத்தகைய திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# எழுதுமட்டுவாழ் மக்களின் மகிழ்ச்சி நீண்ட நேரம் நிலைக்கவில்லை

## வசிப்பிடங்களைப் பார்க்கச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பினர்

தென்மராட்சி, மே. 11

சொந்த வசிப்பிடங்களைப் பார்வையிட்ட எழுதுமட்டுவாழ் பிரதேச மக்களின் மகிழ்ச்சி நீண்ட நேரம் நீடிக்கவில்லை. அவர்கள் வளவுகளைத் துப்புரவு செய்து கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த படையினர் அவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டனர்.

அங்கு நின்ற கிராம அலுவலர்கள் படையினருடன் கலந்துரையாடியபோது மீளக்குடியமர்த்துவது தொடர்பான அறிவித்தல் மேலிடத்திலிருந்து கிடைக்காததால் இந்தப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்க முடியாது எனவும் மேலிட அனுமதி கிடைக்கும் வரை எவரும் உள்ளே வரக்கூடாது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு நின்ற 150 இற்கு மேற்பட்ட அந்தப் பகுதி மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இந்தப் பகுதியில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் ‘ஹலோ ரஸ்ட்’ நிறுவனத்தினரால் பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டதையடுத்து மறுநாள் தென்மராட்சி பிரதேச செயலர் தலைமையிலான உயர் அதிகாரிகளும், ‘ஹலோ ரஸ்ட்’ நிறுவன அதிகாரிகளும், அந்தப் பிரிவு சிவில் நிர்வாக அதிகாரிகளும் அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

இதனை அறிந்தமக்கள் கடந்த சனிக்கிழமை தமது இருப்பிடங்களுக்குச் சென்றபோதே அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-207)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு புதிய மாடிக் கட்டடம் விரைவில்

தென்மராட்சி, மே. 11

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நவீன முறையிலான கிளினிக் மாடிக் கட்டடம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கட்டடம் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசத்தில் உள்ள நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் அனைவரையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-207)

# ‘போலி மருந்துகளில் இருந்து பாதுகாப்பு’ கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 11

“இலங்கைக் குடும்பங்களை போலி மருந்துகளிலிருந்து பாது காத்தல் ” என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்குத் தொடரின் நான்காவது கருத்தரங்கு எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அமெரிக்கத் தூதுவராலயம், அமெரிக்க வர்த்தக சம்மேளனம், இலங்கைப் புலமைச் சொத்துரிமைச் சங்கம் என்பவற்றின் அனுசரணையுடன் இலங்கை மருந்துப் பொருள் வர்த்தகத் துறைசார்ந்த சம்மேளனம் இந்தக் கருத்தரங்குத் தொடரை ஏற்பாடு செய்து நடத்துகின்றது.

எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள டில்கோ சிற்றி ஹோட்டலில் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கில், துறைசார் நிபுணர்கள் பலர் கலந்து கொண்டு போலி மருந்துகளிலிருந்து எவ்வாறு உங்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்பது தொடர்பான பல்வேறு விளக்கங்களைத் தரவுள்ளதாக இலங்கை மருந்துப் பொருள் வர்த்தகத் துறைசார சம்மேளனத்தின் தலைவர் ஆனந்த சமரசிங்க தெரிவித்தார்.

காலை 9 மணி முதல் பிற்பகல் வரை முழுநாள் நிகழ்வாக இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளதாகவும் கருத்தரங்கில் பங்குகொள்ளப் பதிவு செய்துள்ளவர்களுக்குக் கருத்தரங்கின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள மருந்தாளர்கள், மாணவ மருந்தாளர்கள், போலி மருந்துப் பொருள்கள் தொடர்பாகச் சட்ட நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய பாதுகாப்புத் தரப்பினர், மருந்துப்பொருள் பரிசோதனையாளர்கள், மருத்துவர்கள், யாழ்.பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்தோர் என 100 பேர் வரை இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் அதிகரித்துச் செல்லும் சட்டவிரோதச் செயற்பாடுகள்

போர் ஓய்ந்து மக்கள் மீள் குடியமர்ந்த வன்னிப் பிரதேசங்களில் சட்ட விரோதச் செயற்பாடுகள் தினமும் அரங்கேறுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருகால கட்டத்தில் கட்டுப்பாடான ஒழுக்கத்துடன் சட்டத்தை மதித்துச் செயற்பட்ட ஒரு சமுதாயம் இன்று இத்தகைய இழி நிலைக்குள் வீழ்ந்தமைக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யார் என்ற வினாவும் கூடவே எழுகின்றது.

தான்பெற்ற குழந்தைகளைக் கொன்று புதைத்தாள் ஒரு தாய் என்ற செய்தியைப் படித்தவுடன் எமது உடலெங்கும் அதிர்ச்சியலைகள் பரவின. அந்தப் பிஞ்சுகள் செய்த பாவம்தான் என்ன? நெறிகெட்ட ஒரு தாய்க்கும் பிள்ளைகளாகப் பிறவியெடுத்ததுதான் அவர்கள் செய்த பாவமா?

பதினைந்து வயது கூட நிரம்பாத ஒரு சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ஒரு மனித மிருகம் அவளைத் தாய்மைக் கோலத்தில் நிறுத்தியிருக்கிறது. விவரமே புரியாத அந்தச் சிறுமியின் எதிர்காலம் கேள்விக் குறியாக நிற்கின்றது.

அந்தக் கயவனுக்குத் தண்டனை வழங்கினால் மட்டும் இந்தச் சிறுமியின் எதிர்காலம் பிரகாசமாக மாறிவிடுமா?

இளம் பெண்கள் இரவு வேளை

> **வன்னியில் போர் ஓய்ந்ததும் மக்கள் மீளவும் குடியமர்ந்த பிரதேசங்களில் சட்ட விரோதச் செயற்பாடுகள் தினமும் அரங்கேறுவதாகத் தெரிய வருகின்றது. ஆனால் ஒரு கால கட்டத்தில் கட்டுப்பாடான, ஒழுக்கத்துடன் சட்டத்தை மதித்துச் செயற்பட்ட ஒரு சமுதாயம் இன்று தறிகெட்டுப் போய்விட்டது.**

களில் அச்சத்துடனேயே பொழுதைக் கழிப்பதாகத் தெரிய வருகின்றது. யார் வருகின்றார்கள் போகின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் இவர்கள் இல்லை. புரிந்து கொண்டாலும் வெளியில் சொல்வதற்கு முடியாத நிலை.

ஏழைக் குடும்பமொன்றுக்குத் தொண்டு நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கறவைப் பசுமாடு அன்றைய தினமே கொல்லப்பட்டு இறைச்சிக்காக மாற்றப்பட்ட கொடிய சம்பவம் இந்த வன்னி மண்ணில்தான் நிகழ்ந்திருக்கின்றது.

இந்த இழிநிலையை மேற்கொண்ட கீழ்த்தரமான மிருகங்கள் மனிதர்களின் உயிர்களுக்கு மதிப்புத் தருவார்களா என்பது சிந்திப்பதற்கே தேவையற்ற ஒன்று. பசுமாட்டைப் பெற்ற தாய்க்கு ஒப்பிடுவார்கள் சான்றோர்கள். அதனையே கொல்வதற்குத் துணிந்தவர்கள் பஞ்சமாபாதகங்களையும் செய்வதற்கு ஒருபோதுமே தயங்கமாட்டார்கள். இவர்களின் கொடிய பாதங்கள் பட்டாலே புல், பூண்டு, செடிகள் யாவும் கருகி அழிந்து விடும்.

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி குடிசைத் தொழிலாகவே மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகின்றது. பொலிஸார் அவ்வப்போது சிலரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தி அபராதம் விதிக்கப்பட்டாலும் கசிப்பு உற்பத்தி தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவே தெரியவருகின்றது.

இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்படுவது வறிய நிலையிலுள்ள குடும்பங்களே.

இந்தக் குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் ஆண்கள் தாம் சம்பாதிக்கும் பணம் முழுவதையும கசிப்புக்குத் தாரைவார்த்து விட்டு வெறுங் கையுடன் வீடு திரும்புகின்றனர். நாளடைவில் இவர்கள் பல்வேறு நோய்களுக்கும் ஆளாகி விரைவில் மரணத்தையும் எதிர்கொள்கின்றனர். நடுத்தெருவில் நிற்கும் இவர்களின் குடும்பங்கள் மோசமான நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

அண்மையில்கூட இரு வீடுகளுக்குள் புகுந்த கொள்ளையர்கள் பெண்களின் தாலிக் கொடிகளைக் கொள்ளையடித்துச் சென்றதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. கத்தி, பொல்லு போன்றவற்றுடன் ஒரு வீட்டுக்குச் சென்றவர்கள் வீட்டினுள்ளோரைப் பயமுறுத்தித் தமது காரியத்தைச் சாதித்துள்ளனர். இன்னொரு வீட்டில் தனியாளாகப் புகுந்தவன் மிளகாய்த் தூளின் உதவியுடன் தனது காரியத்தை முடித்துள்ளான்.

உண்மையில் முன்னைய காலகட்டமாக இருந்தால் வீட்டிலுள்ளவர்களே இவர்களைச் சமாளித்திருப்பார்கள். ஆனால் இன்றைய நிலை வேறு. வந்தவர்யார் யாரென்பது தெரியாமல் அவர்களைப் பகைத்துக் கொண்டால் எதிர்விளைவு பயங்கரமாக மாறிவிடும் என்ற அச்சத்தில் மக்கள் தயக்கத்துடன் காணப்படுகின்றனர். இந்த நிலையில் கொள்ளையர்களை அவர்களால் எவ்வாறு எதிர் கொள்ள முடியும்?

மேலும் பரந்தன் சந்திலுள்ள வர்த்தக நிலையங்களில் திருட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதனால் வர்த்தகர்களும் கலக்கத்திலுள்ளனர்.

ஆகவே இந்த நிலை தொடர்வதற்குச் சட்டத்தை நிலை நிறுத்துபவர்கள் தடைபோடாது அனுமதிப்பார்களேயானால் வன்னியின் நிலைமை மிகப் பயங்கரமானதாக மாறிவிடுவதை எவராலும் தடுக்கவே முடியாமல் போய்விடும் என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும்.

**-ராஜராஜன்-**

# பிரதான வீதியில் பெரிய குழி

கிளிநொச்சி, மே 11

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதியில் மூன்றாம் வாய்க்கால் சந்தியில் இருந்து வட் க்கச்சி செல்லும் வீதியில் பெரிய குழியொன்று நீண்ட நாள்களாகக் காணப்படுகின்றது.

இந்த வீதி மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்குக் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. அதில் காணப்படும் இந்தப் பெரிய குழி மிகுந்த ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இந்த விடயத்தில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் தொடர்ந்தும் அக்கறையின்றி இருந்தால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் இருக்கும் எனவும் விரைந்து இதனைப் புனரமைக்க வேண்டுமெனவும் மக்கள் கோரியுள்ளனர்.

(க-405)

# இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா

வவுனியா, மே 11

நா. வை. குமரிவேந்தன் (மகேந்திரராசா) எழுதிய "பெய்யெனப் பெய்யும் மழை", "ஒருங்கிருக்கை நெறி" ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டுவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் கொழும்பு றோயல் கல்லூரிப் பிரதி அதிபர் மா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கோப்பாய் ஆசிரியர் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு, அருட்திரு தமிழ்நேசன் அடிகளார், ஆசிரியர் தமிழருவி த. சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

நூலின் முதற் பிரதிகளை முன்னாள் அஞ்சல் அதிபர் க. தம்பிஐயா, து.கனகரத்தினம் ஆகியோர் பெற்றுக் கொள்வார்கள். (க-7)

# மதகு வேலைகள்

கிளிநொச்சி, மே 11

கிளிநொச்சி வட்டக்கச்சி சில்வா வீதியில் உள்ள ஐயனார் கோயிலடிக்கு அருகில் மதகு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த மதகு அமைப்பதனால் வெள்ளநீர் தடையின்றிப் பாய்ந்தோடக் கூடியதாக இருக்குமெனத் தெரிய வருகின்றது.

மேலும் இந்த வீதியின் பல இடங்களிலும் மழை காலத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் இதுபோன்று மதகுகள் அமைக்கப்படவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர்.

(க-405)




**கோழிக் குஞ்சு விநியோகம்**

கடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா கொம்பனி உத்தரவாதத்துடன் தரமான No.1 பிறிமா வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 12.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
(4050) தொ.பே.இல: 021 222 6944

**புதிய கிளை திறப்பு**

06.05.2011 இல் புதிதாக பிரதான வீதி, பருத்தித்துறை வேலாயுதம் கல்லூரிக்கு அருகில் திறக்கப்பட்டுள்ள எமது கிளையில் தரமான No.1 பிறிமா பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், பிறிமா கோழித்தீன் வகைகள், மருந்து வகைகள் விசேட கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

பிறிமா கோழித்தீன் ஏக விநியோகத்தர்.

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
(4049) தொலை.பே. இல 021 222 6944



**சீர்மேவு பச்சிலைப்பள்ளி (பளை) புலோப்பளை பதிதனில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்**
அருள்மிகு அறத்திக் கன்னகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோயில்
வருடாந்த பொங்கல் உற்சவ விஞ்ஞாபனம் [2011]

**அம்பிகை அடியார்களே!**

ஸ்வதிஸ்ரீ மங்கலகரமான கர வருடம் வைகாசித் திங்கள் பௌர்ணமியாந்த விசாகப் பொங்கல் பெருவிழா எதிர்வரும் (17.05.2011) செவ்வாய்க்கிழமை நடைபெற எல்லாம்வல்ல அகில புவன மாதா அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது. எனவே அன்றையதினம் நேர்த்திக்கடன் நிறைவேற்றுபவர்கள் மற்றும் அம்பிகை அடியவர்களுக்கும் மேற்படி விஞ்ஞாபனத்தை அறியத்தருகின்றோம்.

ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமாகிய
சிவஸ்ரீ ந.பிரபாகரக்குருக்கள்
சிவத்திரு காண்டீபன் ஐயர்
மற்றும் ஆலய பரிபாலன சபையினரும்.
(4047)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களின் ஆத்ம சாந்திக்காக வெற்றியைக் காணிக்கையாக்குவோம்

## வினோ நோகராதலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 11

கடந்த இறுதியுத்தத்தின் போது கொல்லப்பட்ட மக்களின் ஆத்மசாந்திக்காக இந்த வெற்றியைக் காணிக்கையாக்குவோம். இவ்வாறு வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்ற போது இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். நாங்கள் பல இன்னல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் இந்தப் பிரதேச சபையைக் கைப்பற்றியுள்ளோம்.

கடந்த ஆண்டு அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த நிலைமை வேறு. இந்தப் பகுதியில் உள்ள நிலைமைகள் வேறு. அதேபோல நாளுக்கு நாள் மாறுபட்ட நிலையில் நாங்கள் வேட்பாளரை நிறுத்தி அதன் மூலம் இந்த வெற்றிகளைப் பெற்றுள்ளோம்.

வேட்பாளர்கள் முதல் வாக்காளர்கள் வரை எல்லோருமே என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு தமது ஜனநாயகத் தீர்ப்பினை வழங்கியுள்ளனர்.

இன்று நாங்கள் ஒற்றுமையுடன் செயற்படும் போதுதான் எமது இலட்சியத்தை எம்மால் அடைய முடியும். ஆயுதப் போராட்டம் மௌனித்திருக்கலாம் அல்லது முடிவுக்கு வந்திருக்கலாம் அல்லது முடக்கப்பட்டிருக்கலாம். ஆனால் எமது அரசியல் ரீதியான போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும். நாங்கள் எமது வெற்றியை அடைந்தே தீருவோம்.

எங்களுக்குக் கிடைத்துள்ள இந்த வெற்றியை கடந்த இறுதி யுத்தத்தின்போது உயிரிழந்த உறவுகளின் ஆன்மாக்களுக்குக் காணிக்கையாகச் செலுத்துவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# சிற்றூழியர் தாக்கப்பட்ட சம்பவம்; மூவர் அடையாளம் காணப்பட்டனர்

மன்னார், மே 11

மன்னார் நகரசபைச் சிற்றூழியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் மூவர் அடையாளம் காணப்பட்டனர்.

கடந்த வாரம் மன்னார் நகர சபையின் சிற்றூழியர் ஒருவர் மன்னார் நகரில் அமைந்துள்ள தனியார் பஸ்தரிப்பிடத்துக்கு அருகில் வைத்து மதுபோதையில் நின்ற ஐந்து பேர் கொண்ட கும்பலால் மோசமாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் மன்னார் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஐந்து பேரைக் கைது செய்தனர். இவர்கள் மன்னார் பதில் நீதிவான் இ.கயஸ் பல்தானோ முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் மூவர் தாக்குதலுக்குள்ளான சிற்றூழியரால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பின்னர் சந்தேக நபர்கள் ஐவரும் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த மன்னார் நீதிமன்ற நீதிவான் திருமதி கே.ஜீவராணி இவர்கள் அனைவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (க-601)

# பரந்தனில் 280 குடும்பங்களுக்கு காணிகள் வழங்க நடவடிக்கை

கிளிநொச்சி, மே 11

கிளிநொச்சி பரந்தன் கிராம அலுவலர் பிரிவில் 700 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளதாகவும் இதில் 280 குடும்பங்களுக்கு காணிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கிராமத்தில் அதிகளவான குடும்பங்கள் காணிகள் இன்றி வாழ்ந்து வருகின்றன. இவர்களுக்குக் காணிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேசத்தில் செயற்பட்டு வரும் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் 300 குடும்பங்களுக்கு ஏற்கனவே காணிகள் இருந்ததால் அவற்றுக்கான காணி ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் மேற்படி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-6)

## மரணக் குழி...



அதிகாரிகளின் கண்கள் திறக்கட்டும்: கிளிநொச்சி மூன்றாம் வாய்க்கால் சந்தியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதியில் பெரிய குழியொன்று மக்களை அச்சுறுத்தும் வகையில் காணப்படுகின்றது. (405)

# உருவச்சிலை திறந்து வைப்பு

மன்னார், மே 11

மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தின் பயிற்றுவிப்பாளரை நினைவு கூர்ந்து அவரது உருவச் சிலையொன்று வவுனியா கல்மடுவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கண்ணிவெடியகற்றும் அமைப்புக்களில் ஒன்றான எம்.எஸ்.டி. என அழைக்கப்படும் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றி உயிரிழந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'மம்மு' என்னும் பயிற்றுவிப்பாளரை நினைவு கூர்ந்து அவரது உருவச் சிலையொன்று நேற்று வவுனியா கல்மடுவில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பயிற்றுவிப்பாளர் கண்ணிவெடியகற்றும் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த வருடம் மே மாதம் 10 ஆம் திகதி கண்ணிவெடி வெடித்ததில் உயிரிழந்தார்.

அவர் உயிரிழந்து ஒரு வருடம் பூர்த்தியான நிலையிலே நேற்று அவரது உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-601)

# கைவிடப்பட்ட கால்நடைகளை உரியவரிடம் ஒப்படைத்தல்

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் கைவிடப்பட்ட கால் நடைகளை உரியவர்களிடம் ஒப்படைக்கும் வேலைத்திட்டத்தை வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்தகால இடப்பெயர்வின் போது பொதுமக்களால் கைவிடப்பட்ட கால்நடைகளைப் பிடித்து உரியவர்களிடம் ஒப்படைக்கும் வேலைத்திட்டத்தை வடமாகாணக் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு கால்நடைகளை உரியவர்களிடம் ஒப்படைப்பதுடன் கால்நடைகளின் காதுகளில் இலக்கத் தகடுகளை இடுதல் மற்றும் தடுப்பு மருந்து ஏற்றுதல் போன்ற செயற்பாடுகளையும் இலவசமாகத் திணைக்களம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# காசுக்கான வேலைத் திட்டம்

கிளிநொச்சி, மே 11

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் கெயர் நிறுவனத்தினால் காசுக்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கிராமத்தில் நலிவுற்ற மற்றும் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 110 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இலகு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் இந்த வேலைத் திட்டத்தில் நாளொன்றுக்கு 550 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின்கீழ் பல வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் உலக உணவுத் திட்டத்தின்கீழ் 200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் மூலமும் சில வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (க-6)

# அடிப்படை வசதிகளற்ற முன்பள்ளி

கிளிநொச்சி, மே 11

கிளிநொச்சி முரசுமோட்டையில் இயங்கி வரும் முன்பள்ளி போதிய வசதிகள் இன்றிக் காணப்படுவதாக பிரதேச மக்களால் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முரசுமோட்டைக் கிராமத்தில் இயங்கி வரும் முன்பள்ளியில் சுமார் 40 சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் இந்த முன்பள்ளிக்கென கட்டடம் இல்லாததால் தனியார் வீடு ஒன்றில் இயங்கி வருகின்றது. கழிப்பறை, குடிதண்ணீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் இந்த முன்பள்ளி இயங்கி வருவதனால் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-6)

# மணல் ஏற்றியவருக்கு அபராதம்

கிளிநொச்சி, பூநகரிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு பதினையாயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பூநகரி வாடியடிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியதாகக் குற்றம்சாட்டப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதையடுத்து இதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதிவான் குறிப்பிட்ட நபர் ஏற்றிச் சென்ற மணலைப் பறிமுதல் செய்யுமாறும் 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடுமாறும் உத்தரவிட்டார். தண்டம் கட்டத் தவறும் பட்சத்தில் இரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-6)

# கணவனுக்கும் மனைவிக்கும் கடிகாயங்கள்; நால்வர் அடங்கிய குழு வெறித்தனம்

பூநகரி, மே 11

குழந்தைக்குப் பால் ஊட்டிக் கொண்டிருந்த தாயை மூன்று பெண்கள் தாக்கியதுடன் மார்பகங்கள் உட்பட பல இடங்களில் கடித்துக் காயப்படுத்தியுள்ள சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பூநகரி வெட்டுக்காட்டுப் பகுதியில் இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:- வளவுக்குள் அத்துமீறி உட்புகுந்த மூன்று பெண்கள் உட்பட நால்வர் அங்கிருந்த கணவனையும் மனைவியையும் அடித்தும், கடித்தும் காயப்படுத்தியுள்ளனர்.

அடிகாயங்களுக்கும் கடிகாயங்களுக்கும் உள்ளான கணவனும் மனைவியும் பூநகரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையையடுத்து கடிகாயங்களுக்கு இலக்கான பெண்ணை சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு பொலிஸார் அனுப்பி வைத்துள்ளனர்.

இதே இடத்தைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் யாழினிதேவி (வயது 25) என்னும் மூன்று பிள்ளைகளின் தாய் உடம்பின் பல இடங்களில் கடிகாயங்களுக்கு இலக்காகியுள்ளார். கணவரான கிருஷ்ணகுமார் பூநகரி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-207)

# சிவசுப்பிரமணிய ஆலய அலங்கார உற்சவம்

கண்டாவளை,மே 11

கண்டாவளை, முரசுமோட்டை அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்திருவிழா நடைபெற்று வருகின்றது. கடந்த 8 ஆம் திகதி காலை விசேட பூசைகளுடன் ஆரம்பமாகிய இந்தத் திருவிழா தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 மே 2011 புதன்கிழமை

# நிபுணர் குழு அறிக்கையில் சந்தேகம்; கேள்வி எழுப்புகிறார் பிரதமர்



கண்டி,மே11

முப்பது வருட காலம் நடந்த யுத்தத்தின்போது நாம் இழந்த லட்சக் கணக்காக உயிர்கள், பொருள்கள் ஆகியவற்றைப் பற்றி ஒரு வசனம் கூட பேசாமல் கடைசி யுத்தத்தின் போது நடந்த தாகக் கூறப்படும் ஐந்து விடயங் களைப் பற்றி மட்டும் விசாரணை நடத்தக் கோரும் ஐ.நா. நிபுணர் குழுவினருக்கு மூளை இருக்கின் றதா என்பது சந்தேகத்திற்குரியது.

இவ்வாறு தெரிவித்தார் பிரத மர் டீ.எம்.ஜயரத்ன.

கண்டி, பொக்காவலை விஹாரையில் கடந்த ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்ற சமய நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்று கையில் தெரிவித்தவை வருமாறு,

முப்பது வருடங்கள் எமது நாடு பயங்கரவாதத்தால் பாதிக் கப்பட்டிருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்கள மன் னர்கள் நாட்டை காத்தது போல பல சிக்கல்களுக்கு மத்தியில் எமது நாட்டைக் காப்பாற்றினார். இன்று அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

கடந்த முப்பது வருட கால யுத்தத்தின் போது எமது நாடு இழந்த உயிர்கள், சொத்துகள் சொல்லில் அடங்காதவை. 80,000 பெண்கள் விதவைகள் ஆகினர். 60,000 இளைஞர்கள் அங்கவீனர்களாகினர். மூன்று லட்சம் பேர் அகதிகளாகினர். நாடு முழுதும் கொல்லப்பட்ட அனைத்து இனங்களையும் சேர்ந்த பொது மக்களின் எண் ணிக்கை குறிப்பிட முடியாத அளவாகும்.

நாம் இழந்த சொத்துகளின் பெறுமதி கணக்கிட முடியாது. இவ்வளவு இழப்புகளை இழந்த போதும் இவைகளைப் பற்றிய ஒரு வசனம் கூட நிபுணர் குழு அறிக் கையில் இடம்பெறவில்லை. எனவே இந்த அறிக்கையைத் தயா ரித்தவர்களுக்கு மூளை இருந்ததா என்பது சந்தேகத்திற்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல, கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எரிக் வீரவர் தன ஆகியோர் கலந்து கொண் டனர். (ச)

# 5 கிராம சேவகர் பிரிவுகளை மீண்டும் ஒட்டமாவடியுடன் இணைக்கக் கோரிக்கை

மட்டக்களப்பு,மே11

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இருந்து பிரித்து கிரான் பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்ட ஐந்து கிராம சேவகர் பிரிவுகளையும் மீண்டும் ஓட்டமாவடி பிரதேச செயலகத்துடன் இணைத் துத் தருமாறு கோரி ஜனாதிபதிக்கான மகஜரை ஓட்டமாவடி பிரதேச செயலாளரிடம் கையளித் தனர்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

புணானை மேற்கு விவசாய கண்டத்தில் ஏறக்குறைய 8500 ஏக்கர் விவசாயக் காணிகள் உள்ளன. 2800 விவசாயிகள் இந்தப்பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இந்தக் காணிகள் அமைந்துள்ள பிரதேசம் கோறளை மேற்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைக் குட்பட்டதும், இந்தப்பிரதேசம் 2005 ஆம் ஆண்டு தற்காலிகமாக ஓட்டமாவடி பிரதேச செயலகத்தி லிருந்து பிரித்தெடுத்து கோறளை தெற்கு கிரான் செயலகத்துடன் சட்டவிரோதமாக இணைக்கப் பட்டதாகும்.

கிரான் பிரதேச செயலகத்துடன் இணைக்கப் பட்ட காலத்திலிருந்து இந்தப்பிரதேச செயலகத் தின் செயலாளர் இந்தப்பகுதியில் நெற்செய்கை யில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் விவசாயிகளை இந் தப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்த முயன்றுள் ளார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக இந்தப்பகுதி விவசாயிகளுக்கு அர சால் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த விதை நெல் லும் தடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயல்கள் இந்தநாட்டில் மீண் டும் தமிழ், முஸ்லிம் இனக்கலவரத்தைத் தூண் டும் செயலென மக்கள் அச்சம் கொள்கின்றனர்- என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆம் ஆண்டு பிறந்த, 7 இல் செவ்வாயுடைய பட்டதாரி மணமகனுக்கு தகுந்த படித்த மணமகளைப் பெற்றோர் தேடு கின்றனர்.

தொடர்பு: 0750481186


# இறைச்சிக் கடை சீல் வைப்பு

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொதுச் சந்தை பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மரக் கறி விற்பனை செய்யும் வியா பாரிகளை அச்சுறுத்தி வியாபா ரம் செய்யவிடாமல் தடுத்த ஆட்டிறைச்சி விற்பனையாளரின் இறைச்சிக் கடைக்கு கோரளைப் பற்று பிரதேச சபை தவிசாள ரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பகுதிக ளிலுள்ள முஸ்லிம் பிரதேசங் களில் அமைதியான முறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட் டது. இதன்போது சிலர் வாழைச் சேனைப் பகுதியில் காய்கறி களைப் பரப்பி விற்பனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த ஆட்டிறைச்சி விற்பனையாளர் ஒருவர் காய்கறி வியாபாரிகளின் விற்பனைப் பொருள்களை வீசி எறிந்து வியாபாரம் செய்யக் கூடாது என அச்சுறுத்தி தங் களை அப்பகுதியிலிருந்து விரட்டி வெளியேற்றியதாக 10 இற்கும் மேற்பட்ட சிறு வியா பாரிகள் கோரளைப் பற்று பிரதேசசபைத் தவிசாளர் தா. ஊதய்ஜீவதாஸிடம் முறைப் பாடு செய்தனர்.

# 10 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

கண்டி,மே11

கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் ஹெரோயின் போதைபொருளை விநியோகம் செய்து வந்த ஒருவரை 10 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோ யின் போதைப் பொருளுடன் அலவத்துகொடை பொலிஸார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின்படி கண்டி, மாத்தளை வீதியின் அக்குரணை ஏழாம் கட்டையில் வைத்து இந்த நபரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடத்திய பொலி ஸார் அவரிடமிருந்து 64.170 கிராம் ஹெரொயின் போதைப் பொருளை கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு பத்தரமுல்லை பிரதேசத்தைச் சேர்ந்த இந்தச் சந்தேக நபர் நீண்ட காலமாக போதைப்பொருள் விநியோகித் துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் அலவத்து கொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த ஹெட் டியாரச்சி தலைமையில் நடை பெற்றுவருகின்றன. (ச)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி சரவணமுத்து சேதுப்பிள்ளை

மலர்வு
14.04.1924



உதிர்வு
11.04.2011

ஓ அம்மாவே எம்மை பூவுலகில் தந்து
பூப்போல பாசமாய் வளர்த்து
பாரினில் பல வளங்களுடனும்
வாழ வைத்ததாயே எம்மைவிட்டு
எங்கே சென்றாய், நாள்கள் 31 ஆனால்
என்ன ஆண்டுகள் பல சென்றாலும்
உன் நினைவு எம் இதயங்களில் இருந்து
பிரிக்கவே முடியாது. உன்நினைவுடனேயே
வாழ்வோம்

தல்லையப்புலம்,
கரவெட்டி. (சி/575945) பிள்ளைகள்.


# உர மூடைகளை கடத்திய இருவர் கைது

தெஹியத்தகண்டியவில் இருந்து வெலிமடைக்கு கடத்தப் பட்ட 107 மானிய விலை உர மூடைகளை ஏற்றிச் சென்ற லொறி யொன்று கோலான சந்தியில் அட்டம்பிட்டிய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு லொறியில் இருந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹியத்த கண்டிய, தியவித் தாகம மற்றும் வந் தனகம பிரதேசவாசி களானஇருவரேஇவ் வாறு கைது செய் யப்பட்டுள்ளனர்.

வீதிச் சோத னைக்கு உட்படுத் தப்பட்ட இந்த லொறியில் இருந்த 107 மூடைகளின் மீது எந்த நிறுவனப் பெயரும் அச்சாகி இருக்கவில்லை.

சந்தேகநபர்களிடம் எந்த மூடைகளுக் கான ஆவணங் கள் எதுவும் இருக்க வில்லை. அதைய டுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவை மானிய விலை உர மூடைகள் எனத் தெரியவந்துள்ளது.

அட்டம்பிட்டிய பொலிஸார் மேல திக விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர். (ச-5)


## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்
806
சீட்டிழுப்பு திகதி
09.05.2011

எழுத்து: A

வெற்றி இலக்கங்கள்: 08 25 26 27

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 13,836,280.80 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 18 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 312 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 626 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15768 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8996 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 224610 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 35444 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,747,720.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 14,336,204.80

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk



## மரண அறிவித்தல்

கந்தையா குகதாசன்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இத்தாலி யில் வசித்தவரும் தற்போது குப்பிளானில் வாழ்ந்தவருமாகிய கந்தையா குகதாசன் கடந்த (08.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந் தையா - கண்மணி தம்பதியரின் அன்பு மக னும் காலஞ்சென்ற நடராசா மற்றும் நகுலாம் பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராஜகுமாரியின் அன்புக் கணவரும் நாகம்மா, இரத்தினம், நடராசா, பரமேஸ் வரி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் செல்வரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயக் குமார் (ஜேர்மனி), ஜெயராசா (கனடா), சந்திரகுமார் (ஆஸ்திரேலியா), ஜெயக்குமாரி (ஜேர்மனி), இந்திரகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
ஏழாலை. (4045)

தகவல்: மனைவி,
திரு.திருமதி நடராஜா குடும்பம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் அத்துமீறிய குடியேற்றம்; நிறுத்துவது குறித்து அரசுடன் பேச்சு

## நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே11

வடக்கு, கிழக்கில் நடைபெற்றுவரும் அத்துமீறிய குடியேற்றங்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரிலான காணி அபகரிப்புகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என அரசுடன் நடைபெறவுள்ள அடுத்தகட்ட பேச்சின் போது வலியுறுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள பேச்சின் போதே இதனைத் தாம் வலியுறுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடக்கு, கிழக்கின் பல பிரதேசங்களில் கட்டாயமாகக் குடியேறி வருவதுடன், அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் காணிகள் அபகரிக்கப்பட்டும் வருகின்றன. அத்துடன் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக காணி அபகரிப்பு திட்டமிட்ட குடியேற்றம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



காணி அபகரிப்புகள் நடைபெற்று வருகின்ற பிரதேசம் ஒன்றில், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க இருந்த பிரதேச செயலாளருக்கு பல்வேறு வகையான அழுத்தங்கள் கொடுக்கப்படுவதுடன், அதற்கெதிராகப் போராட்டங்களும் நடத்தப்படுகின்றன- என்றார். (ச)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தில் 5 ஆயிரம் வீடுகள்

திருகோணமலை, மே 11


யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கான இந்தியாவின் ஐம்பதாயிரம் வீட்டுத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தில் ஐயாயிரம் வீடுகளை கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண வீடமைப்பு அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இந்தத் தகவலை அவர் தெரிவித்தார். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்றனர்.

அந்த மக்களுக்கு இந்த உதவி வழங்கப்பட வேண்டும் என்ற கிழக்கு மாகாண முதலமைச்சர் எஸ்.சந்திரகாந்தனின் கோரிக்கைக்கு இணங்கவே இந்த வீட்டுத்திட்ட உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

கிழக்கிற்கான இந்த வீடுகளில் யுத்த காலத்தில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களுக்கு இரண்டாயிரம் வீடுகளும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகுதி மூவாயிரம் வீடுகளும் வழங்கப்படவுள்ளன. (ச)

## திறப்பு......



திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை செயற்கை சார்பு அவயவங்கள் பொருத்தும் நிலையம் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் இரு கால்களையும் இழந்த சிறுவன் ஒருவன் நிலையத்தை திறந்து வைக்கின்றார். அருகில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர், திருகோணமலை பொது வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஞானகுணாளன் ஆகியோர் நிற்கின்றனர். (ச)

# போதைப்பொருள் நிவாரண வேலைத்திட்டம்

அம்பாறை,மே11

உலக புகைத்தல் நிவாரண தினத்தை முன்னிட்டு போதையிலிருந்து மீட்சிபெறுவோம், வாழ்க்கையினை கட்டியெழுப்புவோம் , நாட்டை பொழிவூட்டுவோம், உலகினை வெல்வோம் என்ற தலைப்பில் இலங்கையிலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் போதைப் பொருள் நிவாரண வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படவுள்ள இந்த வேலைத்திட்டமானது எதிர்வரும் 31ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 16ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்தத் தினங்களில் போதை மற்றும் புகைப் பாவனையிலுள்ள ஆபத்துக்கள் மற்றும் சமூகச் சீரழிவுகள் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வுகள், புகைத்தல் எதிர்ப்பு கொடி விற்பனை வேலைத்திட்டம், புகைத்தல் மற்றும் போதைப் பாவனையினால் பாதிக்கப்பட்டோர்களுக்கான சமூக உதவி வேலைத்திட்டங்கள் போன்றன இடம் பெறவுள்ளன. (ச)

# காத்தான்குடியில் இரண்டு கடைகள் தீ வைத்து எரிப்பு


மட்டக்களப்பு,மே11

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடாவில் இரண்டு கடைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

நாவற்குடா பிரதான வீதியிலுள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யும் கடைகளே தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# அக்கரைப்பற்று நகரில் மணிக்கூட்டுக்குப் பதிலாக மேயர் படம்



மட்டக்களப்பு,மே11

அக்கரைப்பற்று நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் மணிக்கூடு அமைந்திருந்த பகுதியில் இப்போது மணிக்கூட்டுக்குப் பதிலாக அக்கரைப்பற்று மாநகர மேயரின் புகைப்படம் வைக்கப்பட்டுள்ளது.

இதனால் அதில் நேரம் பார்க்க முடியாதுள்ளது என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவின் மகன் சக்தி அதாவுல்லாவே அக்கரைப்பற்று மாநகர மேயர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# களஞ்சியசாலைகளின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு,மே11

கிழக்கு மாகாணத்திலுள்ள 11 கூட்டுறவு சங்கங்களின் களஞ்சியசாலைகளின் புனரமைப்புப் பணிகளுக்கென 22 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 கூட்டுறவுச் சங்கங்களுக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 4 கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அம்பாறை மாவட்டத்தில் 4 கூட்டுறவு சங்கங்களையும் புனரமைப்புச் செய்வதற்கு இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# மட்டு.வைத்தியசாலையிலிருந்து கர்ப்பிணிகள் வெளியேற்றம்

## விசாரணை நடத்த உத்தரவு

மட்டக்களப்பு,மே11

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மருத்துவ விடுதியிலிருந்து கர்ப்பிணித் தாய்மார்கள் இருவர் வெளியேற்றப்பட்டமை குறித்து விசாரணை நடத்துமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அஜித் மெண்டிஸ் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளதாக அவரின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை 7 ஆம் விடுதியில் கடந்த 5 ஆம் திகதி காலை மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்ட இரு கர்ப்பிணித் தாய்மார்கள் புதிதாக இந்த வைத்தியசாலையில் பதவியேற்ற மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவரால் 6ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் விடுதியில் இருந்து வெளியேற்றப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ரீ.சரவணனால் இவர்கள் பரிசோதிக்கப்பட்டு 6 ஆம் திகதி பிரசவம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 6 ஆம் திகதி அவர்களை மற்றொரு மருத்துவ நிபுணர் வெளியேற்றியுள்ளார்.

அதன்பின் சிறிது நேரத்தில் இந்தக்கர்ப்பிணித் [illegible] களுக்கு பிரசவ வலி [illegible] தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு குழந்தை பிரசவித்தனர். சம்பவ தினம் மேலும் பல கர்ப்பிணித் தாய்மார்கள், குறித்த மருத்துவரால் வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தவிடயம் தொடர்பாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே.முருகானந்தம் தலைமையில், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களான பொ. ரவீந்திரன் உட்படப் பலர் கூடி ஆராய்ந்தனர்.

இந்தக் கூட்டத்தில் டாக்டர் [illegible] போதனா வைத்தியசாலைக்கான இடமாற்ற உத்தரவு இரத்துச் செய்யப்பட வேண்டும், அவரை இந்த வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கக்கூடாது. விடுதி 7 ஐ மீண்டும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த விடயம் சுகாதார அமைச்சின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதியொருவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தங்கள் இந்தவிடயம் தொடர்பாக அறிந்துள்ளதாகவும், உரிய மக்களுக்கும், நோயாளிகளுக்கும் நன்மை ஏற்படக் கூடிய முடிவு எடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 லட்சம் வீட்டுத் தோட்டம்: புத்தளம் விவசாயிகள் ஆர்வம்

புத்தளம், மே11

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் 10 லட்சம் வீட்டுத் தோட்டங்களை அமைக்கும் வேலைத் திட்டம் புத்தளத்தில் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது.

புத்தளம் மாவட்டத்திலுள்ள அட்டவில்லு கிராம விவசாயிகள் இந்தத் திட்டத்தை ஆர்வத்துடன் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தக்கிராமம் வாழைச் செய்கைக்கு உகந்த இடமாக இருப்பதால் மாவட்ட விவசாய அலுவலகம் இந்தப்பகுதியிலுள்ள வீட்டுக் காணிகளில் வாழையை அறிமுகம் செய்து வருகின்றது. மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் கே.எம். சுக்கூர் தலைமையிலான அதிகாரிகள் நேரடியாக கிராமவாசிகளின் வீடுகளுக்குச் சென்று வாழைச்செய்கை குறித்து விளக்கமளித்து வருகின்றனர். (ச)

# ஆளும் கட்சிகள் ஏற்பாடு செய்த மேதினக் கூட்டத்தில் தொழிலாளர் பிரச்சினை பற்றிப் பேசப்படவில்லை

### நிபுணர் குழு அறிக்கைக்கே முன்னுரிமை என்கிறது ஐ.தே.க.



கொழும்பு, மே 11

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மே தின மேடையில் தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாகப் பேசப்படவில்லை. பான் கீ- மூன் அறிக்கை தொடர்பாகவும் உத்தேச தனியார் ஓய்வூதிய சட்டமூலம் தொடர்பாகவுமே பேசப்பட்டன. தொழிலாளர்களுக்கான தினத்தில் தொழிலாளர்களை அரசு வெறுங்கையோடு வீட்டுக்கு அனுப்பியது. - இப்படி ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் விசனம் தெரிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் இதுவரை ஆட்சியிலிருந்த அரசுகள் வெளிநாடுகளிடமிருந்து பெற்ற வட்டி வீதத்துடன் ஒப்பிடுகையில் அதிகளவான வட்டிவீதத்துடன் அதிக தொகைக் கடனைத் தற்போதைய அரசு பெற்றுள்ளது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிறுவனங்களில் அரசு அவர்களின் கொள்கைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு அதிக வட்டியுடனான கடனைப் பெற்றுள்ளது.

அந்த நிறுவனங்கள் இலங்கையை விழுங்குவது போல் உள்ளன. மக்கள் மனதில் எதிராளிகளாகக் கருதும் வகையில் குறித்த நிதி நிறுவனங்கள் மாறி வருகின்றன.

அரசிடம் நிலையானதொரு கொள்கை இல்லை. இதன் பிரதிபலனாகத்தான் தற்போது பொருள்களினதும், எரிவாயுக்களினதும் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன. கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலின் போது, பெற்றோலின் விலை இந்தத் தேர்தலின் பின்னர் அதிகரிக்கும் எனக் கூறினோம். அவ்வாறு அதிகரிக்கப்படமாட்டாது என அரசு கூறியது. பின்னர் என்ன நடந்தது? பெற்றோலின் விலையை அரசு அதிகரித்தது. 1970 மற்றும் 1977ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக மாணவர் அடக்குமுறை மற்றும் புத்திஜீவிகள் அடக்குமுறை போன்றே இன்றும் அரசு பல்வேறு அடக்குமுறைகளைக் கையாண்டு வருகின்றது - என்றார். (சி)

### உரையாடல்....



'ஆள்கடத்தலை இலங்கையில் தடுத்தல்' எனும் தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையின்போது நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் கதி குலுக்ம ஆகியோர் உரையாடுகின்றனர். (ச)

# ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்கு விரிவுரையாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே 11

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இராஜினாமா செய்வதானால் மூன்று மாதங்களுக்கு முன் அவர்கள் முன்னறிவித்தல் கடிதம் கொடுக்க வேண்டும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்ட சுற்று நிருபத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வோம் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரஸ்தாப சுற்று நிருபத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மே மாதம் 3ஆம் திகதி வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுற்று நிருபம் 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 51 (iii) பிரிவுக்கு முரண்ானது என்று அந்தச் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் இராஜினாமாக் கடிதங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கும் செயலானது சட்ட விரோதமானதாகும் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தின் தலைவர் கலாநிதி நிமல்தேவசிறி தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் தனது சம்பளக் கோரிக்கைகளை முன்வைத்தே இவ்வாறான அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இவர்களின் இந்தக் கோரிக்கைக்கு பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.கவும், ஜே.வி.பியும் ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2600 கைதிகளை விடுதலை செய்யுமாறு அமைச்சர் ஜனாதிபதியிடம் கோரிக்கை

ஜயந்தியை முன்னிட்டு இவ்வருடம் வெசாக் தினத்தன்று ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் ஊடாக 2,600 சிறைக் கைதிகளை விடுதலை செய்யுமாறு சிறைச்சாலைகள் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்மூலம் குறுகியகாலச் சிறைத் தண்டனையை அனுபவித்துவரும் சிறைக் கைதிகளுக்கு விடுதலை பெற்றுக்கொடுக்க முடியும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் 1,000 சிறைக் கைதிகளுக்கு விடுதலை வழங்கப்படுவது குறிப்பிடதக்கதாகும். இந்தமுறை வெசாக் தினம் விசேட தினமாதலால் சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பினூடாக விடுதலை வழங்குவதற்கு அனுமதி வழங்குமாறு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கல்

கொழும்பு, மே 11

தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரி நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதற் கான சட்டமூலத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், அது விரைவில் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படுமெனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸ்துறையில் பொருத்தமான பதவிகளை நிரப்புவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் இதர சட்டங்கள் சம்பந்தப்பட்டவர்களினதும் தகுதியை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்தக் கல்லூரி நிறுவப்படவுள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகத்தின் கீழ்வரும் இந்தக் கல்லூரியின் நிர்வாகத்துக்கு முகாமைத்துவக் குழுவொன்று அமைக்கப்படும்.

இந்தக்குழுவில் பாதுகாப்புச் செயலாளர், மேலதிக செயலாளர், நிதியமைச்சின் பிரதி செயலாளர் , பொலிஸ்மா அதிபர், தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகியோர் இடம்பெறுவர்.

இவர்களுடன் தேசிய பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அரச நிர்வாகம் போன்றவற்றில் விசேட நிபுணத்துவம் பெற்றுள்ள இருவரும் குழுவில் அங்கம் வகிப்பர்.

இந்தக்குழுவின் உத்தியோகபூர்வ அதிகாரங்களைப் பெற்ற தலைவராக தேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இருப்பார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அல்லது பிரதிப் பொலிஸ்மா அதிபரொருவர் இந்த வித்தியாபீடத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இயங்குவார். கல்லூரியின் அதிபராகவும் நிர்வாக உத்தியோகத்தராகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரோ அல்லது பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரோ நியமிக்கப்படுவர் - என அரச வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-5)

# ஜனாதிபதியைப் பாதுகாக்கும் பொறுப்பு முஸ்லிம்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு

### அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

கொழும்பு, மே 11

நிபுணர் குழு அறிக்கையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முற்றுமுழுதாக எதிர்க்கின்றதெனவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு முஸ்லிங்களுக்கும் உள்ளதெனவும் கைத்தொழில் வணிக அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற வைபவமொன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் ஒரு லட்சம் முஸ்லிம் மக்கள் அகதிகளாக வாழ்ந்தனர். அவர்களின் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் அல்லற்பட்டனர். பள்ளி வாசல்களும் உடைக்கப்பட்டன: இப்போது அவர்கள் சொந்த மண்ணுக்கு நிம்மதியாகப் போய் வருகின்றனர்.

மூதூர் மற்றும் கிண்ணியா வீதியிலே மக்கள் பயமின்றிப் பயணிக்கின்றார்கள். இதற்கு நாம் இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். இந்த நாட்டிற்கு ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்க வந்த போது அவர் எடுத்த தைரியமான - துணிச்சலான நடவடிக்கையின் பொருட்டு இன்று மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். பயங்கரவாதத்தை ஒழித்ததினால்தான் அவரை மேற்குலகம் அவமானப்படுத்த முயற்சிக்கிறது.

ஜனாதிபதி கடந்த காலத்தில் சரியான நடவடிக்கையை எடுத்ததால்தான் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் ஜனாதிபதியை நாம் பாராட்ட வேண்டும்.

இந்த விடயத்தில் மிக அக்கறையுடன் உன்னிப்பாக இருக்கவேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. இங்குள்ள இளைஞர், யுவதிகளின் தேவைகளை நாம் தீர்த்து வைப்போம். எமது சமுதாயம் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். எங்கள் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க எங்கள் கட்சிக்கு உங்களது பூரண ஆதரவினைத் தாருங்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட. இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய உடற்பயிற்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வகுமார் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். அருகில் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.பாலேந்திரா அமர்ந்திருக்கின்றார். (வ)

# பிள்ளைகளின் வளர்ச்சி நிலையில் முன்பள்ளிப் பருவம் மிகவும் முக்கியமானது

காரைநகர்,மே11

முன்பள்ளிப் பருவம் பிள்ளைகளின் வளர்ச்சியில் முக்கியமான பருவமாகும். இந்தக் காலத்தில் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் அறிவே பிற்காலத்தில் அவர்கள் நல்லவழியில் செல்ல அடிப்படையாக அமையும். மழலைப் பருவத்தில் இருந்தே ஆங்கில மொழி மூலம் கல்வி புகட்டுவது எதிர்காலத்தில் நவீன சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய சமுதாயத்தை உருவாக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம்.

காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் ஆண்டு விழாவும் கலை விழாவும் அண்மையில் காரைநகர் யாழ்ற்றரன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது:

சர்வதேச தொடர்பாடலுக்கு மட்டுமன்றி உள்ளூர் நகரத் தொடர்பாடலுக்கும் ஆங்கில அறிவு அவசியம். எந்த ஒரு வேலையையும் இலகுவாகச் செய்வதற்கு கணினி அறிவு தேவை. ஆங்கிலமும் கணினி அறிவும் இன்றி எதிர்காலத்தில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதும் கடினமாகும். எனவே, சிறு பராயத்தில் இருந்தே ஆங்கிலத்திலும் கணினியிலும் தமது பிள்ளைகள் முன்னேறப் பெற்றோர்கள் வழிகாட்டவேண்டும்.

முன்பள்ளியின் முக்கியத்துவம் உணரப்பட்டு அதற்கு மெருகூட்டும் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். நிர்வாகிகள், பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கிடையே நல்ல ஒத்துழைப்பும் நல்லுறவும் இருக்க வேண்டும்.

இது சிறந்த முன்பள்ளியின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமையும் - என்றார்.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ற்றன் கல்லூரி அதிபர் இ.சோமசேகரம் உரையாற்றுகையில் -

ஆங்கிலம், தமிழ் மொழிகளில் சிறுவயதில் இருந்தே பிள்ளைகளை அறிவு மிக்கவர்களாக வளர்ப்பதிலும், ஒழுக்கசீலர்களாக வளர்ப்பதிலும் இந்த அமைப்பு முன்னின்று உழைக்கிறது. ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சி அதன் ஆரம்பத்தில் வழங்கப்படுகின்ற கல்வியிலேயே தங்கியுள்ளது.

சர்வதேச சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் இந்தச் சிறார்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இவர்களுக்கு ஆங்கிலத்துடன் அடிப்படைக் கணினி அறிவும் ஊட்டப்படவேண்டும். இங்கு கணினி, தொலைக்காட்சி போன்ற நவீன கற்பித்தல் தொடர்பாடல் சாதனங்கள் பயன்படுத்தப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

ஏனைய பிதேசங்களில் இயங்கும் முன்பள்ளிகளும் சிறந்த முறையில் சிறுவர்களுக்கு நல்ல விடயங்களை நவீன முறையில் வழங்க வேண்டும். பிள்ளைகளின் பிஞ்சு மனங்களில் அறநெறி விழுமியங்கள் பதியும் வண்ணம் சொல்லிக் கொடுப்பதும் முன்பள்ளி ஆசிரியர்களின் கடமையாகும். - என்றார்.

(ம-250)

# மாற்றுவலுவுள்ளோருக்கு உதவும் பொறுப்பு சமூகப் பொறுப்புள்ள சகலருக்கும் உண்டு

## சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் உரை

நாவற்குழி,மே 11

நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 14 சத வீதமாக உள்ள மாற்றுவலுவுள்ளோருக்கு உதவ வேண்டிய சமூகப் பொறுப்பு ஏனையவர்களுக்குச் சுமத்தப்பட்டுள்ளது என்று சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் கிறிஸ்ரி பெர்னாண்டோ தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுவலுவுள்ளோர் புனர்வாழ்வு தொடர்பான ஒரு நாள் கருத்தரங்கு இடம் பெற்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்:

எமது நாட்டில் யுத்தம், விபத்து, பிறப்பு, நோய் காரணமாக மாற்றுவலுவுள்ளோராகிய சனத்தொகையின் எண்ணிக்கை 14 வீதம் என்று கணிப்புக்கள் கூறுகின்றன. இவர்களில் பலர் பிறரது உதவியுடன் வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய சமூகப் பொறுப்பு அரச உத்தியோகத்தர்களாகிய எங்களுக்கும், சமூகத்தில் வாழும் ஏனைய பிரஜைகளுக்குமே உள்ளது.

எமது நாட்டில் இன்று மொத்தச் சனத்தொகையில் சிறுவர், முதியோர் மாற்றுவலுவுள்ளோர் போன்றவர்களில் பிரித்துப் பார்த்தால் 24 வீதமானோரே உழைக்கும் வயதுடையவர்களாக உள்ளனர். இந்த உழைக்கும் சனத்தொகையினர் தம்மைப்போல 3 மடங்கு சனத்தொகையினரைத் தாங்கும் சுமை தாங்கிகளாக உள்ளனர்.

அதேபோல 86 வீதமான மக்கள், நாட்டில் உள்ள 14 வீதமான மாற்றுவலுவுள்ளோரைக் கவனிக்கும் பொறுப்புடையவர்களாக உள்ளனர்.

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் ஒரு கால் கட்டையானவர். ரோமானியப் பெரும் சக்கரவர்த்தி யூலியஸ் சீசரும் காக்காவலிப்பு வரும் ஒரு மாற்று வலுவுள்ளவர். ஆயினும், இவர்கள் தமது மன உறுதியாலும் விடா முயற்சியாலும் சாதனை படைத்துள்ளனர். இதுபோல மாற்றுவலுவுள்ளோர் பலர் தலைவர்களாகவும், திறமைசாலிகளாகவும் உலகில் உள்ளனர்.

எமது நாட்டிலும் மாற்றுவலுவுள்ளோரில் சாதனை புரிந்தவர்கள்பலர் இருந்திருக்கின்றனர். இப்போதும் இருக்கின்றனர்.

இவர்கள் தொடர்பில் அக்கறை எடுக்க வேண்டிய உளப்பாங்கு விருத்தி எம்மவருக்கு ஏற்படுத்தப்படல் வேண்டும். இந்தப் பணியில் ஈடுபட்டு வரும் உத்தியோகத்தர்களும், பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்டுள்ள தொண்டர்களும் பொறுப்பு மிக்க பணிகளை முன்னெடுக்க வேண்டும். சமூக சேவைகள் அமைச்சின் இந்தத் திட்டத்தை சரியான முறையில் முன்னெடுத்தால் இவர்கள் வாழ்வில் ஒளியூட்ட முடியும் - என்றார் அவர். (வ-121)

# வீதிகளின் நடுவே மரக்கறி செய்கை

கொழும்பு,மே11

கொழும்பு நகர வீதிகளுக்கு மத்தியில் காணப்படும் புல் தரைகளில் மரக்கறிப் பயிர்ச்செய்கைத் திட்டம் ஒன்றை கொழும்பு மாநகர சபை மேற்கொள்ளவுள்ளது என்று கொழும்பு மாநகரசபையின் விசேட ஆணையாளர் ஓமர் காமில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மரக்கறிப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் அரசின் கொள்கையைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வெண்டி, கத்தரி, பாகல் ஆகியவை வீதிகளின் நடுவே பயிரிடப்படவுள்ளன.

மக்கள் அவற்றைப் பறித்தெடுப்பதைத் தவிர்க்கும் முகமாக அவர்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்வுகள் இடம் பெறும் என்றும் அவர் கூறினார். (உ-சி)

# தொடர்பாடல் தொழில் நுட்ப பயிற்சி நெறி

நவாலி,மே11

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை காரைநகர்ப் பிரதேச செயலர் பிரிவில் தொடர்பாடல், கணினி தொழில்நுட்பம் ஆகிய பயிற்சிகளை வழங்குவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள் சார்பில் கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருப்பதுடன், 17 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இந்தப் பயிற்சி நெறி ஆறு மாத காலம் நடைபெறும். பயிற்சியின் நிறைவில் சித்தியெய்திய மாணவர்களுக்கு என்.வி.கியூ பட்டச் சான்றிதழ் வழங்கப்படும்.

முதல் சேர விரும்புபவர்கள் பொறுபப்பதிகாரி, இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, தொழிற்பயிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் அறிவித்துள்ளார். (த-100)

# நல்லூர் கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே11

நல்லூர் கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டிகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் இடம்பெற்றன. இந்தப் போட்டி முடிவுகளின் ஒரு தொகுதி நேற்றைய உதயனில் வெளியாகின அவற்றின் தொடர்ச்சி வருமாறு:-

**தனிஇசை -(பிரிவு-2)**

நி.சுஜீவன் (யாழ்.இந்துக்கல்லூரி), ந.நர்மதா ( கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), சு.துவாரவி (கொக்குவில் இந்துக்கல்லூரி), பா.ஹரிதர்சன்(முத்துத்தம்பி மகாவித்தியாலயம்).

**தனிஇசை (பிரிவு - 3)**

ச.ஜஜீவா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), யோ.கஜானன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), ச.ஜெயதர்சி (செங்குந்தா இந்துக்கல்லூரி).

**தனிஇசை (பிரிவு-4)**

தி.வருணியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஜெ.மதூஷிகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.சிவசங்கர்(யாழ்.இந்துக்கல்லூரி).

**தனி இசை (பிரிவு-5)**

ச.கனுசிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ம.சர[illegible] (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீ சுரேகா (கனகரத்தினம் மத்திய ம.வித்தியாலயம்).

**குழு இசை (குழு-I)**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**குழு இசை (குழு-II)**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

**தனி நடனம் (பிரிவு-1)**

ப.[illegible] (யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி), ஜெ.சாருந்தினி (யாழ்.கனகரத்தினம் ம.ம.வி), பி.தமிழினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**தனி நடனம் (பிரிவு-3)**

ஜெ.சுபானுஜா(கொக்குவில் இந்துக்கல்லூரி), வி.ஜனனி (கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), ஜெ.துசாந்தினி (கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்).

**தனி நடனம் (பிரிவு-4)**

சி.கௌசலா (யாழ்.கனகரத்தினம் ம.ம.வி.), உ.ஜனுஷிகா (யாழ்.இ.ம. கல்லூரி), ம.அபிலக் ஷினா (யாழ்.கோண்டாவில் இந்து ம.வி.).

**தனி நடனம் (பிரிவு-5)**

ச.பவிதா (யாழ்.கனகரத்தினம் ம.ம.வி), ச.சாம்பவி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**குழு நடனம் (பிரிவு-1)**

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ். இந்துக்கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

**நாட்டிய நாடகம்** (திறந்த போட்டி)

கொக்குவில் இந்துக் கல்லூரி

**மேடை நாடகம் (திறந்த போட்டி)**

2011 பின்னிணைப்பு சுற்று நிருபத்துக்கு அமைய நடைபெறும். யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யா[illegible] ல்லூரி, யாழ். செங்கு[illegible] க் கல்லூரி. (311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
பணியில் அதிக கவனம், அக்கறையாகச் செயற்பட வேண்டிய நாள். தாய்வழி உறவுகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். பெண்கள் பிள்ளைகளை நினைத்துப் பெருமை அடைவர். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

**இடபம்:**
சில வேலைகளை அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே முடித்துக் கொள்வீர்கள். பெண்கள் உடன் பிறப்புகள் நலனில் அக்கறை காட்டுவர். கோபமாக இருந்த குடும்ப உறுப்பினர்கள் சமாதானம் அடைவர். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்யலாம்.

**மிதுனம்:**
கடும் முயற்சி எடுத்தும், சில காரியங்கள் முழுமையாக முடியாமல் இடைநடுவில் தடைப்படலாம். குடும்ப உறுப்பினர்கள் வாக்குவாதங்கள் செய்யலாம். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். வியாபாரிகள் கடுமையான போட்டிகளை எதிர்கொள்ளலாம். வீண் பழி, அவப்பெயரைத் தவிர்க்க, அனைவரிடமும் அனுசரித்துச் செல்லவும்.

**கடகம்:**
சொல்வாக்கும், செல்வாக்கும் அதிகரிக்கும் நாள். குடும்பத்திற்கு தேவையான வசதிகளை அதிகரித்துக் கொள்வீர்கள். பெண்கள் உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவர். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த பொருள் ஒன்றை வாங்கலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டுகளை பெறும் வாய்ப்பு உண்டு. ஆதாயகரமான நாள்.

**சிங்கம்:**
எதிர்பாராத தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். மற்றவர்களுக்காக பிணை கொடுக்கலாம். நீண்ட நாள்களாக உங்களுடன் இருந்த ஒருவர் வெளியூர் செல்லலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையலாம். விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்கலாம். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளுக்காக அலையலாம்.

**கன்னி:**
முன்னேற்றத்திற்கு தடையாக இருந்தவர்கள் விலகுவர். வியாபாரத்தை விரிவுபடுத்தும் வேலைகளில் வர்த்தகர்கள் ஈடுபடலாம். குடும்பத்தில் நிலவிய பணப்பிரச்சினைகள் தீரும். பழைய நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிட்டும். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று, பனி போல விலகி விடும். விருப்பமான உணவைச் சாப்பிடலாம்.

**துலாம்:**
எதிர்பார்த்த பணவரவுகளைப் பெற்றாலும், ஏதாவது ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு அலைச்சல் கூடும். மாற்று மதத்தினர் வழியில் மனதிற்கு இனிய உதவி கிடைக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களைத் தேடி வரலாம். இழுபறியாக இருந்த காரியம் ஒன்று முடிவுக்கு வரலாம்.

**விருச்சிகம்:**
விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணிபுரியலாம். மாமன், மைத்துனர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். குடும்ப நன்மை கருதி, சில முக்கிய முடிவுகளை எடுக்கலாம். நீங்கள் செல்லும் இடத்தில் உங்களுக்குப் பிடிக்காத ஒருவரை சந்திக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம்.

**தனுசு:**
பிரச்சினைகளை சாமர்த்தியமாக வெற்றி கொண்டு சமாளிக்க வேண்டிய நாள். சேமித்த பணம் ஒன்றை திடீரென செலவிடும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். பெண்கள் ஆடம்பரப் பொருள்கள் வாங்குவர். திட்டமிட்ட காரியம் ஒன்றில் மாற்றங்கள் செய்யலாம். மனஉறுதி குலையும்.

**மகரம்:**
நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடக்கும் நாள். உறவினர்கள் வகையில் உருவான மனக்கசப்பு தீர்விற்கு வரும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். நாவன்மை அதிகரிக்கும்.

**கும்பம்:**
தடை, தாமதங்கள் இல்லாமல் எந்த காரியமும் சிறப்பாக நடைபெறும் நாள். அயலார் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தொழில் ரீதியான விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களைப் பெறும் வாய்ப்பு உருவாகலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கிடைக்கும்.

**மீனம்:**
திட்டமிட்டதை விட சில விடயங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். சக ஊழியர்களே விரோதமாகச் செயற்படுவது கண்டு எரிச்சல் அடையலாம். யாருக்கும் தேவை இல்லாமல் வாக்குக் கொடுப்பதை தவிர்க்க வேண்டும். கடந்த காலத்தில் செய்த தவறு ஒன்றை நினைத்து மனவருத்தம் அடைவீர்கள். மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள்.

# உரத்துப் பேசுங்கள்

எல்லாமே கையை விட்டுப் போன பின்னரே கவலைப் படுவது அல்லது தலையைக் குனிவது என்பனவே தமிழ்அரசியல் வாதிகளிடையே காலாதிகாலமாகப் பேணப்பட்டு வருகின்றது.

*'எல்லாம் எங்களுக்கு மட்டும்தான் தெரியும்'*

*'நாங்கள் தான் மக்களின் ஏகப் பிரதி நிதிகள்'*

*'மக்களின் ஆணை எங்களுக்குத் தான் கிடைத்துள்ளது'*

. என்னும் நினைப்புகளே பிழைப்பைக் கெடுத்து விடுகின்றன. அவர்களின் நினைப்பிலும் தவறில்லைத்தான். தமது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள் என்ற நம்பிக்கையில் மக்களால் ஏகோபித்து தெரிவுசெய்யப்பட்டு நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டவர்கள்தான் இந்த அரசியல்வாதிகள்.தேர்தல் காலத்தில் ''ஆயுதப் போராட்டம் தோற்றுப்போன நிலையில் அரசியல் ரீதியான போராட்டமே இப்போதுள்ள தெரிவு'' என்று கூறி தாம் நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டால் என்னென்ன செய்வோம் என்று கின்னஸில் இடம்பிடிக்கும் நீளம் கொண்ட பட்டியல்களை இவர்கள் பரப்பினார்கள். ஆயுதங்கள் மௌனித்துப்போன காலத்தில் இவர்களின் வாய்களில் இருந்து வருகின்ற வார்த்தைகள் 'மல்ரி பரலை' விடவும் பலம் வாய்ந்தவையாக இருந்தன. ஆனால் பிரசார மேடைகளில் இவர்கள் செய்வதாகக் கூறிய பலவற்றை நாடாளுமன்ற பதவி கிடைத்தவுடன் மறந்துபோய்விட்டனர். அல்லது அவற்றைச் செயற்படுத்துவதில் மந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். இதற்கு இராஜதந்திரம், மென்போக்கு, மக்கள் நலன் எனும் புதுப்புதுப் பெயர்களைச் சூட்டி தமது செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்க முனைகின்றனர். எப்போதுமே தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான் என்பதை நிரூபிப்பதில் தமிழ் அரசியல்வாதிகள் கெட்டிக்காரர்கள்.

தமிழர்களின் தலைவிதியை அரசியல் ரீதியாகத் தீர்மானிக்கும் சக்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு நிறையவே உண்டு. புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் பொறுப்பு கூட்டமைப்பின் கைகளில் வந்து சேர்ந்தது. அதிகளவான நாடாளுமன்ற ஆசனங் களை பெற்றுக் கொள்ளச் செய்ததன் மூலம் அதனை தமிழ் மக்களும் அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தினர். அந்த நம்பிக்கையைக் கெடுக்காத வண்ணம் தமிழ் மக்களுக்கு எதிரான அரச யந்திரத்தின் நடவடிக்கைகள் பலவற்றை எதிர்த்து தனது கொள்கைப் பிடிப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிரூபித்தது. நாடாளுமன்றங்களில் அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக ஆவேசமாக முழங்கியது. தமிழர்களுக்கான தன்மானக் குரலாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இன்று எம்மிடம் எஞ்சியுள்ளது. ஆனால் மிக முக்கியமான தருணங்களில் சரியான முடிவுகளை எடுப்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தடுமாறுவதும் வாடிக்கையாகிவிட்டது. இந்தத் தடுமாற்றம் தமிழர் நலனில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதை கூட்டமைப்பு உணர்வதில்லை. அதற்கு நல்ல உதாரணம் ஐ. நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாய்மூடி மௌனியாக இருப்பதைச் சொல்லலாம்.

பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள், தமிழர் நலன்சார் அமைப்புக்கள், புலம்பெயரிகள், இணையங்கள், சர்வதேச நாடுகள் என்பவற்றின் அழுத்தம் காரணமாக உருப்பெற்ற ஐ.நா.நிபுணர் குழு ஒரு அறிக்கையை இப்போது தான் ஈன்றெடுத்து ள்ளது. அதில் அரசு மீதும் புலிகள் மீதும் வீசப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அறிக்கை விட்டதோடு அடங்கிப் போய்விட்டது. ஆனால் புலம் பெயர் நாடுகளிலும், தமிழகத்திலும் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை வெளி வந்த பின்னர் அது தொடர்பாக எழுந்த அதிர் வலைகள் இன்னமும் அடங்கவில்லை. தமிழகத்தில் கிருஷ்ணமூர்த்தி என்ற ஓர் இளம் பொறியியலாளர், போர்க் குற்றவாளியான இலங்கைக்கு இந்தியா இனியும் உதவக்கூடாது என்ற கோரிக்கை எழுதி வைத்துவிட்டு தன்னைத் தானே எரித்து மாண்டுபோனார். இது தவிர இலங்கை அரசு மீது போர்க் குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண் டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கையெழுத்து வேட்டையும் அமோகமாக நடந்து வருகின்றது. ஆனால் இங்கு - நெருப்பெரிந்த நிலத்தில் - ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு ஆதரவாக எந்தவொரு முணுமுணுப்பும் கூட இல்லை. அண்மையில் இலங்கைக்கு வந்த றொபேர்ட் ஓ பிளேக்கிடம் எவரும் போர்க்குற்றம் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒரு வார்த்தைதானும் பேசவில்லை. ஏதோ கண்ணுக்குத் தெரியாத நாடொன்றில் நடந்த நிகழ்வைப் போல ஐ.நா. அறிக்கை பற்றி அக்கறை இல்லாமல் இருக்கிறோம்.

இதேவேளை, ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையைக் கண்டித்து சிங்கள அரசியல் தரப்புகள் தமது தொண்டர்களை முழு வீச்சில் களத்தில் இறக்கியுள்ளது. பல்வேறு வகைகளில் ஐ.நா. அறிக்கைக்கு எதிரான நடவடிக்கைகளைப் பேரினவாதிகள் முன்னெடுக்கிறார்கள். மேதினக் கூட்டத்தில் கூட ஐ.நா செயலர் பான் கீ மூனின் உருவப் பொம்மையை எரித்து தன் கொலரை இழுத்துவிட்டுக் கொண்டார் விமல் வீரவன்ஸ. பிரதி அமைச்சர் ரத்னாயக்கா ஒரு படி மேலே போய் தமிழர் பகுதிகளுக்குள் நுழைந்து, சிவனே என்று வீதியில் போய்கொண்டிருந்த தமிழர்களை ஓட ஓட விரட்டிப் பிடித்து பலவந்தமாக கையொப்பங்களை ஐ.நா அறிக்கைக்கு எதிராகப் பெற்றிருக்கிறார். தன் அடிப்பொடிகள் சகிதம் பிரதியமைச்சர் மேற்கொண்ட இந்த ஜனநாயகக்(?) கூத்துக்கு படையினரும் பொலிஸாரும் பக்கவாத்தியமாக பாதுகாப்பும் வழங்கினர்.

ஆனால் தமிழர் தரப்பு ஐ.நா. அறிக்கை தொடர்பாக என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது? இதற்குப் பதில் பூச்சியம் என்பதாகவே இருக்கும். தமிழகத்தைப் போல இங்கும் தீக்குளித்துத்தான் போராட வேண்டும் என்றில்லை. தமது கருத்துக்களை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் முன்வைக்கவேண்டியது எம்மவர்களின் கடமை. நீதி கிடைக்காவிட்டாலும், நீதிக்காகப் போராடினோம் என்ற வரலாறாவது மிஞ்சும். இல்லாவிட்டால் முள்ளிவாய்க்காலில் சிக்குண்டு வெளியுலகுக்கே தெரியாமல் புதையுண்டு போன ஆயிரக்கணக்கான மக்களின் ஆன்மாக்களின் கேள்விகளுக்கு பதில்சொல்ல முடியாதவர்களாகிவிடுவோம்.

மக்களை அரசியல் ரீதியான முன்னெடுப்புகளுக்கு கொண்டுசெல்லவேண்டிய 'நாமே மக்களின் பிரதிநிதிகள்' என்று அடிக்கடி ஞாபகப்படுத்துகின்ற அரசியல்வாதிகளின் கடமை. பெரும்பாலன அரசியல்வாதிகள் அரசுடன் ஒத்து ஊதும் பண்பினையே கொண்டிருப்பதால், தமிழ்க் கூட்டமைப்பு மாத்திரமே மக்களை இத்தகைய அரசியல் போராட்டங்களுக்கு இட்டுச் செல்லவேண்டிய தகுதியுடைய கட்சியாக இருக்கிறது. ஆனால் மிக முக்கியமான முடிவினை எடுத்து, நடந்து முடிந்த அவலங்களுக்கு நீதி கேட்க வேண்டிய தருணத்தில் ''நாங்கள் மென் போக்காகச் செயற்படுகின்றோம்'' என்ற ஒற்றைச் சொல்லை உதிர்த்துவிட்டு வாளா விருக்கிறார்கள் கூட்டமைப்பினர்.

கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையே நடைபெறத் தொடங்கியுள்ள பேச்சுப் வார்த்தைகளின் பின்னரே 'மென் போக்கு' போன்ற வார்த்தைகளுக்குள் ஒளிந்துகொள்ளும் விளையாட்டில் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது. இத்தனைக்கும் நாலைந்து முறை அரசும் கூட்ட மைப்பும் கூடிக் கூடிப் பேசியும் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. ''தடுப்பிலுள்ளவர்களின் விவரங்களை வெளியிடுகிறோம். வாருங்கள்!'' என்று கூட்டமைப்பினரை வரவழைத்து மூன்று முறை அவர்களை அரசாங்கம் 'பேய்க் காட்டியது'தான் மிச்சம். அப்படியிருந்தும் எம்மவர்களுக்கு கோபம் வருவதற்குப் பதிலாக ''திரும்பவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேசலாம். அதையும் அக்கம் பக்கத்துக்குத் தெரியாமல் இரகசியமாகப் பேசலாம்'' என்று அரசு அழைத்ததும் மறுபேச்சுப் பேசாமல் இதற்காகவே காத்திருந்தது போல 'பச்சைக்கொடி' கூட்டமைப்பில் இருந்து காட் டப்பட்டிருக்கின்றது.

அரசாங்கம் குட்டக் குட்டக் குனிந்து கொண்டே செல்லும் கூட்டமைப்பின் 'மென்போக்கு'(?) ராஜ தந்திரத்தின் மர்மம் மக்களை குழப்பமடையச் செய் துள்ளது. இப்படித்தான் ரணிலை அடிக்கடி அலரி மாளிகைக்கு அழைத்து, ஒரு கப் வெறுங்கோப்பி யைக் கொடுத்து ஏமாற்றிவிட்டு, அந்த 'ஊட்டுக்குள்' அவர் பக்கம் இருந்த ஹக்கீமையும் பிரபா கணே சனையும் வளைத்துப் போட்டவர் மஹிந்த. அவரின் பிரித்தாளும் தந்திரத்தின் பிடியில் கூட்டமைப்பை யும் கொண்டுவருவதற்காகவே இவ்வாறான பேச்சு வார்த்தைகள் நடைபெறு கின்றனவோ? என்ற ஐயம் அவர்களுக்கு வாக்களித்தவர்களுக்கு ஏற்பட் டுள்ளது. அவர்களின் ஐயத்துக்கு பலம் சேர்ப்பது போல ''கூட்டமைப்பை பிளவுபடுத்தி, அதில் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களை தன்பக்கம் ஈர்க்க அரசு சதி செய்கிறது'' என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயசிறி தயாசேகர அங்கலாய்த்துள்ளார். அவரின் இந்தக் குற்றச்சாட்டு தமிழ் கூட்டமைப்பைச் சிதைத்தால் தமிழ் மக்களின் உரிமைக்குரலும் சிதைந்து விடுமே என்ற ஆதங்கத்தால் வந்தது அல்ல. கூட்டமைப்பில் உள்ளவர்களில் சிலர் அரசின் பக்கம் தாவினால் ஏற்கனவே வீங்கிப் போயுள்ள அரச யந் திரம் இன்னும் பலமாகிவிடுமோ என்ற அச்சத்தால் எழுந்தது தான். எப்படி இருந்தாலும் கூட்டமைப்பை பிளவுபடுத்தவே மூடிய அறைக்குள் அரசு பேச்சு மேசையைக் கொண்டு செல்கின்றது. என்பதை ஐ.தே.க வும் உறுதிப்படுத்து கின்றது. ஏனெனில் அது ஏற்கனவே சூடுகண்ட பூனை.

அடுத்த பேச்சுக்கான நாள் குறித்தல், இடத்தெரிவு என்பவை பற்றி அதிகமாக அக்கறை கொள்ளும் கூட்டமைப்பு, நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் ஆக்க பூர்வமான எந்தவிதமான செயற்பாடு தொடர் பாகவும் அசைவற்று இருக்கின்றது. ஐ.நா. அறிக்கை யில் எதிர்பாராமல் கிடைத்த ஒரு சந்தர்ப்பம். ''நாங்கள் பல நல்ல சந்தர்ப்பங்களை தவறவிட்டதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்'' என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் புலம்பித் தீர்த்திருந்தார். ஆனால் கைக்கெட்டியிருக்கும் நிபுணர் குழு அறிக்கையால் உருவாகியிருக்கும் சந்தர்ப்பத்தை சம்பந்தன் தலை மையிலான கூட்டமைப்பினர் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. கடைசியாக எஞ்சியிருக்கும் ஒரே ஓர் ஆயுதம் எம்மிடம் நிபுணர் குழு அறிக்கை மட்டும் தான். ஆனால் அந்த ஆயுதத்தை தக்க தரு ணத்தில், உரியமுறையில் பயன்படுத்தத் தெரியாமல் விழிக்கி றது கூட்டமைப்பு. இப்போது சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டு பின்னொரு காலத்தில் ''ஐயோ! அருமந்த சந்தர்ப்பத்தை அநியாயமாக்கிவிட்டோமே!'' என்று தலையில் முக்காடிட்டு அழுவதால் என்ன பயன்?

ஒரு வாரத்திற்கு முன்னர் வரை இலங்கை அரசு மீது நிபுணர் குழு அறிக்கை முன் வைத்திருந்த போர்க் குற்றச்சாட்டுக்களே உலகின் உதடுகளில் அதிக மாக உச்சரிக்கப்பட்டன. இப்போது ஒஸாமாவின் மரணம் தன்பக்கம் உலகின் கவனத்தை இழுத்துக் கொண்டு விட்டது. நிபுணர் குழு அறிக்கை என்ற சிறிய கோட்டை, ஒஸாமாவின் மரணம் என்ற பெரிய கோடு மறக்கப் பண்ணிவிட்டது. இப்போது உல குக்கு நிபுணர் குழு அறிக்கை ஆறிய கஞ்சிதான். அதைச் சூடாக்கி, மீண்டும் இங்கு நிகழ்ந்த ஊழியின் கொடுமைகளுக்கு நியாயம் கேட்பது, தமிழ் மக்களின் அரசியல் ஏகப்பிரதிநிதிகள் என்று அடிக்கொரு முறை மார்தட்டிக் கொள்கின்ற கூட்ட மைப்பினரின் கடமை. அந்தக் கடமை யைத் தட்டிக் கழிப்பது 'தமிழ் மக்களுக்கு - போரால் வெந்து போனவர்களுக்கு - செய்கின்ற துரோகமாகவே நோக்கப்படும் அபாய மும் உண்டு.

## ஔண்யன்

மற்ற அரசியல்வாதிகள்போல மக்களுக்கு வேலை வாய்ப்பு, பொருள் உதவி என்பவற்றைச் செய்யாமலே கூட்டமைப்புக்கு தமிழ் மக்களின் பெரும்பான்மையானோர் வாக்களிப்பது, அது இன்னமும் தமிழர் தேசிய நலனை முன்னிறுத்தி வருவதால்தான். ஆனால் தமிழர்களின் ஆன்மா வையே சிதைத்துவிட்ட மாபெரும் மனிதப் பேரவ லத்துக்கு நீதி கேட்கக் கிடைத்துள்ள வாய்ப்பை கூட்டமைப்பு பயன்படுத்தாமல் இருப்பதால் அத னுடைய தமிழ்த் தேசிய கொள்கையை கேள்விக் குள்ளாக்குகின்றது. இந்தக் கேள்விகள் பெரிதாக உருவெடுத்து ஆழப்பதிந்து போனால், அடுத்த தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 'நாங்களே ஏகப்பிரதிநிதிகள்' என்று பெருமையடித்துக் கொள்ளமுடியாமல் போய் விடும். அதைத்தான் பேரினவாதிகள் விரும்புகின்றனர். அதை நிறை வேற்றத்தான் அடுக்கடுக்கான பேச்சுவார்த்தைகள். ஆளும் தரப்போடு பேசுவதோ, அவர்களின் கருத்துக்களுக்கு காது கொடுப்பதோ தவறான அணுகு முறைகளாகிவிடா. ஆனால் பேசுகின் றோம் என்று கூறிக்கொண்டு எமது இருப்பையும் எஞ்சியிருக்கின்ற உரிமை களையும் முனகலாக வேனும் வெளிப்படுகின்ற குரலையும் அடகு வைக்கக் கூடாது.

ஒஸாமாவை ஒழித்த புளுகத்தில் நிபுணர் குழு அறிக்கையை மறந்து போய் இருக்கின்ற சர்வதேசத் தின் காதுகளில் வலிகளைச் சுமந்து நிற்கும் எங்கள் குரல்கள் கேட்க வேண்டும். அப் போதுதான் கொஞ்ச மேனும் அவர்களின் பார்வை இங்கு திரும்பும். அதற் காக கூட்டமைப்பு மென்போக்காக - விட்டுக் கொடுப்புகளோடு - சளாப்பல் அரசியல் செய்வதை தூக்கி எறிய வேண்டும். 'நீதிக்காக - மக்களின் உரிமைகளுக்காக உரத்த குரலில் பேசவேண்டும்.

# பிரம்மம்!



''பிரமத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான்'' என்று ஒரு பெரியவர் பேசினார் ஒரு கோயிலில். தைத்திரிய உபநிடதம் அப்படிக் கூறுகிறதாம். இதைக் கேட்கும் பொழுது எமக்கு ஒரு சந்தேகம் வரும்.

''அது எப்படி? பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான்'' அப்படியென்றால் . சிங்கத்தை அறிந்தவன் சிங்கம் ஆகின்றானா? தோசையை அறிந்தவன் தோசை ஆகின்றானா? இப்படிப்பட்ட சந்தேகம் எமக்கு வருவதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இது இயற்கையானது. இதற்கும் அந்தப் பெரியவரே பதில் கூறுகிறார்.

''சிங்கம் வேறு; நாம் வேறு. அதனால் சிங்கத்தை அறிந்தவன் சிங்கமாக மாட்டான். ஆனால் பிரம்பம் வேறு நாம் வேறு அல்ல. அதனால் பிரமத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகிறான். இவ்வாறு அமைகிறது அவர் விளக்கம்.

மனிதனுக்குத் தான் தான் பிரமம் என்பது தெரியாததனால் அதை வேறு எங்கேயோ தேடிக் கொண்டிருக்கிறான். கடைசியில் அது தான் என்பதைப் புரிந்து கொள்கிற போது அவன் பிரம்மம் ஆகிவிடுகிறான்.

இதை விளக்குவதற்கு ஒரு உபநிடதக் கதையே இருக்கிறது. அது எமக்குத் தெரிந்த கதைதான் ஆனால் அதை வேறு அர்த்தத்தில் விளையாட்டாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு சமயம் பத்து நண்பர்கள் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். குறுக்கே ஒரு நதி. அதைக் கடந்து அடுத்த பக்கத்திற்குப் போக வேண்டும். எல்லோரும் ஒரு வழியாக அதைக் கடந்து அடுத்த கரைக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

அங்கே போய்ச் சேர்ந்த பின்னர் எல்லோரும் வந்து சேர்ந்து விட்டோமா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக எண்ணிப் பார்க்கிறான் அந்தக் கூட்டத் தலைவன். அவர்கள் மொத்தம் பத்துப் பேர். ஆனால் இவன் எண்ணிப் பார்த்த போது ஒன்பது தான் வருகிறது. ஏனென்றால் அவன் தன்னை விட்டுவிட்டு எதிரில் நிற்கிறவர்களை மட்டும் எண்ணுகிறான். ''ஐயோ பத்தாவது ஆள் எங்கே என்று பதறுகிறான்.

''சரி, நீ இரு; நான் எண்ணுகிறேன் என்று சொல்லிவிட்டு இன்னொருத்தன் வந்து எண்ணினான். அவனும் தன்னை விட்டு எண்ணுகிறான். ஒன்பது தான் வருகிறது. எல்லோரும் அலற ஆரம்பித்தார்கள். அந்த சமயத்தில் அந்தப் பக்கமாக வந்த ஒரு பெரியவர் என்ன விசயம் என்று விசாரித்தார். ''பத்தாவது ஆளை ஆறு அடித்துக் கொண்டு போய்விட்டது'' என்று சொல்லி இவர்கள் அழுகிறார்கள்.

''சரி, அழாதீர்கள் என்று சொல்லி அந்தக் தலைவனைப் பார்த்து ''இப்போது எனக்கு முன்னால் ஒரு முறை எண்ணு பார்க்கலாம்'' என்றார். ஒன்று, இரண்டு வந்து 9 இல் முடிந்தது. உடனே பெரியவர் ''நீ தான் அந்தப் பத்தாவது ஆள்'' என்கிறார். இது தான் உண்மை.

நாம் தான் பிரமம் என்பது புரியாமல் வேறெங்கேயோ தேடிக் கொண்டிருக்கிறோம். அந்தப் பிரமம் நாம் தான். இப்படி ஒரு பெரிய உண்மையை விளக்குவதற்காகத் தான் அப்படி ஒரு கதை சொல்லப்பட்டது.

ஆனால் அதை நாம் வேறு விதமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். எப்படித் தெரியுமா? ஓர் ஆற்றங்கரையில் ஒரு பத்துப் பேர் முழித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கமாக வந்த ஒருத்தன் ''ஏன் இப்படி முழித்துக் கொண்டு நிற்கிறீர்கள்'' என்று கேட்டான்.

''எங்களுக்கு நீச்சல் தெரியாது! நாங்கள் எல்லாம் அடுத்த கரைக்குப் போய்ச் சேர வேண்டும்'' என்றார்கள்.

''சரி நான் கொண்டு போய் விட்டுவிடுகிறேன். எல்லோரும் அக்கரைக்குப் போய்ச் சேர்ந்தவுடன் ஒருவருக்கு ஒரு ரூபா வீதமாக மொத்தம் 10 ரூபா கொடுக்க வேண்டும்'' என்றான். சரி என்று எல்லோரும் கூறினார்கள். இவன் ஒவ்வொருத்தராகக் கையைப் பிடித்து மெதுவாக ஆற்றிலே இறக்கி அழைத்துக் கொண்டு போனான்.

9 பேரைக் கரை சேர்த்து விட்டான். பத்தாவது ஆளுடன் பாதி ஆற்றில் போய்க் கொண்டிருந்த போது திடீரென்று வெள்ளம் வந்து விட்டது. பிடி நழுவிப் போய் கையை விட்டு விட்டான். வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. அழைத்துக் கொண்டு வந்தவன் நீச்சலடித்துத் தட்டுத்தடுமாறி கரைக்கு வந்து சேர்ந்து விட்டான்.

கரையில் இருந்தவர்களுக்கு இந்த விசயம் தெரியாது. இருந்தா லும் இவன் உடம்பு பூராகவும் நனைந்து கொஞ்சம் அதிகமாகவே மூச்சு வாங்க நின்றான்.

''ஏன் இப்படி மூச்சு வாங்குகிறது? என்ன விசயம்?'' என்று கேட்டார்கள். அதற்கு அவன் கொஞ்சமும் தடுமாறாமல் ''வேறு ஒன்றுமில்லை! நீங்கள் கொடுக்க வேண்டிய 10 ரூபாயில் ஒரு ரூபா குறைந்து விட்டது. அவ்வளவு தான்'' என்றான்.

கோ. சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மக்களே!... நிலத்தை மாசடையச் செய்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை?

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பதினெட்டாவது அமர்வு கடந்த மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. ஆறாம் திகதிய அமர்வின்போது 'பொதுச் சுகாதாரமும் நிலையான அபிவிருத்தியும்' என்ற தொனிப்பொருளில் வைத்திய கலாநிதி ந.சிவராஜா நிகழ்த்திய உரையின் (தமிழாக்கத்தின்) சுருக்கம் இங்கே தரப்படுகின்றது.**

நிலையான அபிவிருத்தி என்பது, அபிவிருத்திச் செயற்பாடுகளின் பின் இந்த அபிவிருத்தி தொடர்ந்தும் நிலையாக இருக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, அந்த அபிவிருத்தி அடுத்த சந்ததி நடைமுறைபடுத்தப் போகும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கவும் கூடாது.

சுகாதார அபிவிருத்தியானது சூழல், சமூக, பொருளியல் சார்ந்த சகல அபிவிருத்திகளிலும் ஒரு பகுதியாக இணைந்து உள்ளது. சூழல் மாசடைவதால் சுகாதாரம் பாதிப்படைகிறது. சுகாதாரப் பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் பாதகமாக இருக்கும் பட்சத்தில் சூழல் மாசடைகின்றது. யாழ்ப்பாணத்தில் மக்கள் தொகை அதிகரிக்கும்போது சுகாதார வசதிகளும் அதிகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும்.

சுகாதார அபிவிருத்திக்குச் சுகாதார சேவையின் முயற்சி மாத்திரம் போதாது. உள்ளூராட்சி மன்றங்கள், கல்வி, விவசாயத் திணைக்களங்கள், பிரதேசசபைகள், காவற்றுறை போன்றவற்றின் முழுப் பங்களிப்பும் தேவை. அபிவிருத்தித் திட்டங்கள் தற்போதும், எதிர்காலத்திலும் சுகாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை மனதில் கொள்ள வேண்டும்.

> **'இந்த நிலம் உனக்குக் கொடுக்கப்பட்ட முதுசமோ அல்லது சீதனமோ அல்ல. உனது பிள்ளைகள் இரவலாக உனக்குக் கொடுத்தது. அதைப் பாதுகாப்பாக அவர்களிடம் ஒப்படைப்பது உனது கடமை' என்பது அமெரிக்கப் பழங்குடி மக்களின் ஒரு பழமொழி. இதை நாம் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்திருந்து இந்த நிலத்தையும் சூழலையும் மாசுபடுத்தப்படாமல் காப்பாற்றி எமது அடுத்த சந்ததியினருக்கு ஒப்படைப்பது எமது தலையான கடமையாகும்.**

நிலையான அபிவிருத்திக்கு முன்னோடியாக உலக சுகாதார நிறுவனத்தால் 1978இல் ஆரம்ப சுகாதார பராமரிப்பு என்ற பதம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பின் அடிப்படை நிலையான அபிவிருத்தியை எண்ணக் கருவாகக்கொண்டது. சுகாதாரம் நிலையான அபிவிருத்திக்கு ஒரு வளமாகவும் அதன் பயனாகவும் உள்ளது.

நீண்டகால நோய்களும் வறுமையும் இருக்கும் ஒரு சமூகத்தில் எந்த ஓர் அபிவிருத்தியையும் செயற்படுத்த முடியாது. ஒரு சமூகத்தை சுக நிலையில் வைத்திருப்பதற்கு சுகாதார சேவையும், சூழலும் வளர்ச்சியடைந்த நிலையில் இருப்பது அவசியம்.

சுகாதாரத் துறையினரிடையேயும் அதிகளவு ஒத்துழைப்புத் தேவை. சுகாதாரத்துறை இரண்டு அமைச்சுக்களுக்குக் கீழ் உள்ளதால் திட்டங்களை நடைமுறையில் செயற்படுத்தலில் பல பிரச்சினைகள் உள்ளன.

சுகாதாரத் துறையினரிடையே ஒத்துழைப்பையும் மற்றைய துறையினருடன் ஒத்துழைப்பையும் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## நிலையான அபிவிருத்திக்குத் தடையாக இருக்காதீர்!

### யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்கு அவசியமானவை எவை?

1.வைத்தியசாலைகளுக்கு உள்வரும் நோயாளர்களில் முதலிடம் வகிப்பது விபத்துக்கள், காயங்களுக்குள்ளாகும் நோயாளர்களே. ஆகவே விபத்துக்கள் (முக்கியமாக வீதி விபத்துக்களையும், வீட்டு விபத்துக்களையும்) குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். இதற்கு வீதி அபிவிருத்தித் துறையினரது உதவியும் கல்வித்துறையினரது பங்களிப்பும் தேவை. விபத்துக்களுக்கு முக்கிய காரணமாக அமைவது சீரற்ற வீதிகளும், வீதி ஒழுங்குமுறைக்கு மாறாக வாகனங்களை ஓட்டுவதும், பாதைகளைப் பாவிப்பதுமாகும். வீதிகளைச் சீர்செய்வது முக்கியம். வீதி ஒழுங்குகளைப் பேண வைக்க வேண்டியது காவல்துறையினரின் கடமை. வாகனப் போக்குவரத்துச் சான்றிதழ், ஓட்டுநர் உரிமங்களில் கூடிய கவனம் செலுத்தாமை, வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்காதவர்களைத் தடுப்பது குறைவு என்பன போன்ற காரணங்கள் வீதி விபத்துக்களுக்கு காரணம், வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காது செலுத்துகிறார்கள். சான்றிதழ்கள் இல்லாதது அல்ல.

2.யாழ்ப்பாணத்தில் மனித வளம் ஒரு பெரிய சவாலாக உள்ளது. வைத்தியர்களின் பற்றாக்குறையுடன் மற்றைய மருத்துவ உதவியாளர் பற்றாக்குறையும் கூடுதலாக உள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளும் மனிதவளத்தைப் பங்கீடு செய்தல் திருப்திகரமாக இல்லை. பெரும்பாலான வைத்தியர்கள் (180இற்கு மேல்) யாழ். போதனா வைத்தியசாலையில் வேலை செய்கின்றார்கள்.யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஏனைய 42 வைத்தியசாலைகளில் 30 வைத்தியர்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மக்களில் 82 சத வீதத்தினர் இந்தச் சிகிச்சை நிலையங்களுக்கே வெளிநோயாளர்கள் சேவையை நாடிச் செல்கின்றார்கள்.

வைத்தியர்களின் பற்றாக்குறையால் இந்த வைத்தியசாலைகளில் உள்நோயாளர்கள் குறைவாக இருக்க, யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர்களால் நிரம்பி வழிகின்றது.

(தொடரும்)



வைத்திய கலாநிதி ந.சிவராஜா

# 40 வயதிலும் இளமை நீடிக்க இனிய தகவல்



40 வயதைத் தொட்டுவிட்டாலே மனித வாழ்க்கையில் பல உடல் உபாதைகள் எட்டிப் பார்க்கத் தொடங்கிவிடும்.

இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், உடல் பருமன், மூட்டு வலி எனப் பல பிரச்சினைகளின் தொடக்கம் இந்த 40 வயதுதான். இவ்வாறு 40 வயதில் பிரச்சினைகளைச் சந்திப்பதோ அல்லது எவ்வித உபாதையும் இல்லாமல் ஆரோக்கியமாக இருப்பதோ உங்களது 20 வயதுகளில் நீங்கள் என்ன மாதிரியான உணவுகளைச் சாப்பிட்டீர்கள், எந்த மாதிரியான வாழ்க்கை முறை யைப் பின்பற்றுகி றீர்கள் என்பதைப் பொறுத்துதான் அமையும் என்கின்றனர் மருத்துவ மற்றும் கட் டுடல் ஆலோசனை நிபுணர்கள்.

40 வயதுகளில் ஆரோக்கியமாக இருக்க 20 வயதிலிருந்தாவது நடைப் பயிற்சி போன்றவற்றை கட்டாயம் தொடங்கிவிட வேண்டும் என்று கூறுகின்றனர் நிபுணர்கள். மேலும் இந்த நிபுணர்கள் பல யோசனைகள் கூறியுள்ளனர். அவைகளுள் ஒன்று உடற்பயிற்சி.

ஒரு வாரத்திற்கு குறைந்தது மூன்று முதல் ஆறு மணி நேரமாவது கட்டாயம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். நடைப்பயிற்சியோ அல்லது ஓட்டப் பயிற்சியோ செய்யவேண்டும்.இவ்வாறு செய்யும் உடற்பயிற்சி மூலம் உங்களை சுறுசுறுப்பாக வைத்திருப்பதோடு மட்டுமல்லாது உங்களது தசை மற்றும் தாங்கு திறன் மேலும் பலப்படும்.மிக முக்கியமாக 40 வயதுகளில் ஏற்படுகிற பல பிரச்சினைகளுக்கு மூலகாரணமான உங்களது மன அழுத்தம் குறையும். இதனால் மாரடைப்பு மற்றும் இருதய நோய் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் குறையும்.நீங்கள் எடுத்துக்கொள்ளும் உணவில் கட்டாயம் பல விற்றமின்கள் மற்றும் தாதுச் சத்துக்கள் அடங்கியிருக்கவேண்டும். போதுமான விற்றமின்களை எடுத்துக்கொள்ளாமல் போனால் ஆரோக்கியத்திலிருந்து நீங்கள் வெகுதூரம் விலகிச் சென்றுவிடுவீர்கள்.

# குழந்தைகள் உறக்கத்தில்தான் வளரும்



குழந்தைகள் உறக்கத்தில்தான் வளரும் என்று விஞ்ஞானிகள் ஆய்வொன்றின் மூலம் கண்டறிந்துள்ளனர்.

இந்த வகையில் நடத்தப்பட்டுள்ள முதலாவது விஞ்ஞான ஆய்வில் இது தெரிய வந்துள்ளது.

குழந்தைகள் அன்றாடம் தூங்கும் நேரம், அவற்றின் உடல் வளர்ச்சி ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை.

அதிக நேரம் தூங்குவது உடலின் வளர்ச்சியை அதிகரிக்கின்றது என்பதை விஞ்ஞானிகள் முதற் தடவையாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

புதிதாகப் பிறந்த குழந்தைகள் பற்றி ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தவும், அவற்றின் உடல் வளர்ச்சி பற்றித் தாய்மார் அறிந்து கொள்ளவும் இந்தப் புதிய ஆய்வின் முடிவுகள் வழிசமைத்துள்ளன.

அமெரிக்க விஞ்ஞானிகளே இந்த ஆய்வை நடத்தியுள்ளனர். குழந்தைகளை அதிகம் உறங்கச் செய்வது அவர்களின் உடல் வளர்ச்சியை உறுதி செய்கின்றது. தினசரி 4.5 மணிநேரம் மேலதிகமாக உறங்கும் குழந்தைகளில் அதிக உடல் வளர்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

இங்கு உடல் வளர்ச்சி என்பது உடலின் நீளத்தை அல்லது உயரத்தைக் குறிக்கின்றது. 12 நாட்களான 23 குழந்தைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் உறக்க நேரம், மேலதிக உறக்கம் என்பன அவர்களின் பெற்றோரால் பதிவு செய்யப்பட்டு 17 மாதங்கள் அவற்றின் வளர்ச்சி வேகம் பதிவு செய்யப்பட்டு இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

குழந்தைகள் ஆழமாக உறங்குகின்ற போதும், ஓரளவு கண் அயருகின்ற போதும் உடல் வளர்ச்சிக்குக் காரணமான ஹோர்மோன்கள் அதிகம் செயற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.



# சொக்லேட் சாப்பிட்டால் ஆரோக்கியமாக வாழலாம்

சொக்லேட் குழந்தைகள் மட்டுமல்லாது பெரியவர்களைக்கூட மயக்கி வைத்துள்ளது என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் சொக்லேட் சாப்பிட்டால் உடல் எடை கூடிவிடும் என்று பெண்கள் ஆசைப்பட்டாலும் சொக்லேட் சாப்பிடுவதை நிறுத்திக் கொள்வார்கள். ஆனால் அதற்கு அவசியமே இல்லை. சொக்லேட் சாப்பிட்டால் இருதயத்துக்கு நல்லது. அதனால் உடல் எடையும் அதிகரிக்காது என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர். சொக்லேட்டில் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும் மூலக் கூறுகள் உள்ளன. இவை அதிகப்படியா சேரும் கொழுப்புக்களை விரைந்து கரைத்து விடுகின்றன. அத்துடன் விரைவாகப் பசியெடுப்பதையும் சற்றுத் தள்ளிப்போடுகிறது. கருஞ் சிவப்பு திராட்சை ரசத்தில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்தியைக் காட்டிலும் இரு மடங்கு சக்தி சொக்லேட்டில் உள்ளன. பிரதான மூலக்கூறான சொக்லேட்டில் உள்ள கொக்கோவில் உன்னத அல்கலாயிட் எனப்படும் பொருள் தசைகளை ஊக்குவித்து உடலுக்கு சக்தியை அளிக்கிறது. இரத்த நாளங்களை விரிவடையச் செய்து இரத்த அழுத்தம் ஏற்படுவதைக் குறைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுவேளையில் வெள்ளை நாம்பன் காட்சி தரும் மருதடி வீரகத்தி விநாயகரின் அருள்

சைவமும் தமிழும் செழிப்புற்று விளங்கும் காரைநகரின் மருதடியில் மருத மரத்தின் கீழ் இருந்து அருளாட்சி புரியும் விநாயகருடைய ஆலயம் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம் என அழைக்கப்படுகின்றது.

களபூமிக் குறிச்சியிலே திசை விளங்கு மாப்பான முதலி பரம்பரையில் வந்த வியாக் குருபாதரின் மூத்த பெண்பிள்ளை மருதடியிலே வீடு கட்டி இல்லறம் நடத்தி வந்தார்.

இந்தப் பெண்மணி குழந்தைப் பேறின்றி விதவையானதும் தீட்சை கேட்டு விநாயகரை வழிபட்டு வந்தார். காலக் கிரமத்தில் ஒரு விநாயகர் படத்துக்கு முன்பு தான் ஆக்கிய சாதம், கறி ஆகியவற்றைப் படைத்து பிரார்த்தனை செய்து விட்டு பிரசாதத்தை எடுத்து உண்டு வந்தார். சில நாள்கள் செல்ல இரவு சொற்பணத்தில் விநாயகர் தோன்றி இந்த வீட்டில் வடபால் இருக்கும் மருத மரத்தடியில் தான் இருப்பதாகவும் அங்கு ஒரு கொட்டில் அமைத்து வழிபட்டு வரும்படியும் சொல்லி மறைந்தார்.

அதன் பிரகாரம் கொட்டில் போட்டு விநாயகர் படத்தை வைத்து அதற்கு முன் தான் சமைத்தவற்றைப் படைத்து விநாயகர் வழிபாட்டைத் தொடர்ந்து நடத்தி வந்தார். காலம் செல்ல இந்தியாவில் இருந்து வந்த சந்தன மரத்தில் செதுக்கப்பட்ட விநாயகர் சிலையை வைத்து நைவேத்தியம் படைத்து வழிபட்டு வந்தார்.

வருடம் தோறும் பிரதி கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரம் முதல் 21 நாள்கள் விநாயகரது பெருங்கதைப் படிப்பு நடக்கும். அந்தக் கிராம மக்கள் நோன்பு இருந்து இந்தக் கதையைக் கேட்டு விர தத்தை முடிப்பர். இந்தப் பெண் திருநீறு போட்டும் நூல் கட்டியும் சிறு பிள்ளைகளின் நோய்களையும் குறைபாடுகளையும் விநாயகரது அருளால் நீக்கி வைத்தார். இதனால் விநாயகர் வழிபாடு இந்தக் கோயிலின் மூலம் சிறப்படைந்தது.

இந்தப் பெண்மணி விநாயகரது திருவடி நிழலை அடைந்த பின்னர் அவரது சகோதரன் வியாக்குருபாதர் இராமநாதன் அந்தத் திருக்கோயில் வளவு மண்டயவளை காணி ஆகியவற்றில் கிடைக்கும் வருமானங்களைக் கொண்டு நிர்வகித்து வந்தார். இவருக்கு முருகர், பேரம்பலம் ஆகிய இரு ஆண் பிள்ளைகள் இருந்தார்கள். முருகர் திருக்கோயிலையும் அதற்குரிய அசைவுள்ள அசைவற்ற பொருள்களையும் ஏற்று நித்திய பூசைகளையும் திருவிழாக்களையும் நடத்தி வந்ததார்.

இவருக்கு சுப்பிரமணியம் காசிநாதர் என்ற ஆண்பிள்ளைகள் இருந்தனர்.

அதுமட்டுமன்றி, களபூமியிலுள்ள கண்ட கல்லாலும் களிமண்ணாலும் கர்ப்பக்கிரகத்தையும், அர்த்த மண்டபத்தையும் இந்த மருத மரத்தின் மேற்குப் பக்கத்தில் மேற்கு நோக்கிய வாசலுடன் கட்டி முடித்தார். அதன்பின் திருக்கோயிலுக்கென மூலமூர்த்தி விநாயகரை இந்தியாவிலிருந்து சிலை வடிப்பித்துக் கொண்டு வந்து தற்போதிருக்கும் விநாயகரை பிரதிட்டை செய்வித்தார். பண்டாரி முருகற்ரை மருதடிப் பிள்ளையார் கோயில் என்ற பிள்ளை நாமத்தையும் பெற்றது. இந்தச் சிலை

1892 ஆம் ஆண்டு அரசால் சேகரித்து பதியப்பட்ட விவரங்களின் படி இந்தக் கோயில் 1750 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது என்றும் நிறுவியவர் இராமநாதன் சுப்பிரமணியம் என்றும் ஆலயப் பதிவேட்டில் சொல்லப்பட்டிருக் கின்றது. பதியப்பட்ட காலத்தில் முகாமையாளராக விருந் தவர் இராமநாதன் காசி நாதன் என்று ஆலய பதிவேடு பகர் கின்றது.

மேலும் இந்தக் கோயிலில் புராண படன மும் பூசைகளும் நடைபெற்று வந்தன என்றும் 250 அடியவர்களுக்கு மேல் கூடி வழிபட்டு வந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

இரவு வேளைகளில் மருத மரத்தில் வெளிச்சங்கள் இலைகள் தோறும் இருப்பதையும் இரவு வேளைகளில் துகில் போன்ற வெள்ளை நாம்பன் கன்று இரண்டாம் வீதியாக இருக்கும் பொதுசனப் பாவிப்பு ஒழுங்கைகளிலே தோன்றி அன்பர்கள் தரிசிக்கக் காட்சி அளித்துவிட்டு மறைவதும், அயலில் உள்ள வீடுகளில் இருக்கும் தோட்டத்தில் இளம் தென்னை மரங்களை ஆட்டி அசைத்துப் பேரிரைச்சல் உண்டாக்கிவிட்டு மறைவதும், அர்த்த சாமத்தில் உள்வீதியால் நன்கு அலங்கரிக்கப்பட்டு நல்ல நாதஸ்வர இசையுடன் கூடியமேளக் கச்சேரியுடன் குடை, கொடி, ஆலவட்டம் சகிதம் பக்தர்கள் குழாம் சூழ்ந்துவர வீதி உலா வரும் காட்சியும், கண்டதாக அருகில் உள்ளவர்கள் கூறிய செய்திகள் பழைய காலங்களில் கேட்டதுண்டு. இப்படியாக மேற்படி கோயிலில் பல அற்புதங்கள் நடக்கத் தொடங்கின.

கோயில் அர்ச்சகர்கள் கொடுக்கும் திருநீற்றிலிருந்து பல பிணியாளர்கள் நோய் குணமடைந்து சுகசீவியாய் வாழ்ந்தனர். பலருக்கு நூல் கட்டி அவர்களுடைய குறைபாடுகள் நீங்கக் கண்டனர். இதனால் சமயப்பற்று அந்தப் பகுதிகளில் பரவத் தொடங்கியது. இவ்வாறாக 125 ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்று வரலாயின.

19 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை ஸ்தாபகரான சுப்பிரமணியம் என்பவரால் மேற்படி ஆலய அபிஷேகக் கிணறு வெட்டிக் கட்டப்பட்ட அமைப்புடன் இன்றும் உள் வீதியில் காணப்படுகின்றது.

கலாநிதி விசுவநாதர் வீரகத்திப்பிள்ளை இந்தியாவில் வார்ப்பித்த இரு எழுந்தருளி விக்கிரகங்களையும் பிரதிட்டைசெய்ய காரைதீவுக்கு வந்தார். அந்தச் சமயம் திருக்கோயில் பராமரிப்புக்காரர் இராமநாதர் காசிநாதர் இறந்து விட்டார். புதிய திருக்கோயில் பராமரிப்புக்காரராகிய சுந்தரர் அருணாசலமும், கந்தப்பர் சிற்றம்பலமும் இதனை ஏற்க மறுத்து விட்டனர். கலாநிதி பெரிய மணலில் தனது பெரியதாய் வீட்டில் உள்ள பெட்டகத்துள் எழுந்தருளி விக்கிரகங்களைப் பூட்டி வைத்துவிட்டு தனது தம்பியார் கனகசபையையும் கூட்டிக் கொண்டு மலேசியா திரும்பினார்.

அங்கு சென்றதும் அவருக்குச் சுகவீனம் வந்து கஷ்ரப்படுத்தியது. சுகவீனம் தொடர்ந்து தன்னை வருத்துவதைக் கண்டு சில சாஸ்திரிகளைக் கண்டு விசாரித்தார். அவர்கள் எழுந்தருளியை பிரதிஷ்டை செய்தால் நோய் தீரும் என்றனர். உடனே தாயாருக்கும் அவரது தாயின் சகோதரியின் மகனாகிய (மடையற்றை கதிரி) கந்தப்பர் வைத்திலிங்கத்திற்கும் கடிதம் எழுதினார். அவர் கந்தப்பர் சிற்றம்பலமிடமும் சுந்தரர் அருணாச்சலத்திடமும் சில நாள்கள் சென்ற பின்பு அவர்களின் சம்மதத்தை பெற்றார். அதன் பிரகாரம் கந்தப்பர் வைத்தியலிங்கம் தற்பை வாங்கி கந்தப்பர் குமாரகுருபரமுவின் மக்களின்றி அரணி விசுவரின் மனைவியின் செலவில் பிரதிஷ்டை செய்து வைத்தனர். இதுவே 1918 ஆம் ஆண்டு இந்தத் திருக்கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேகம். இதனை உத்தரகோசமங்கையில் இருந்து வந்த மங்களேஸ்வரக் குருக்கள் பரம்பரையில் வந்தவரும் அந்தக்காலத்து ஈழத்து சிதம்பர தேவஸ்தான பிரதம குருவாகவும் இருந்த சரவணபவக் குருக்கள் சர்வபோதகராக இருந்து நடத்தி வைத்தார்.

பின்னர் கோயிலைப் புனரமைப்பதற்கு 1976 இல் வழிபடுவோர் சபை என்ற ஒரு சபையை உண்டாக்கி அது தற்போது பொறுப்புரிமையாளர் சபை எனக் கோயிலைப் பராமரித்து வருகின்றது. 1982 ஆம் ஆண்டு கும்பா பிஷேகத்தினையும் செய்தனர். இதனை நயினை சிவஸ்ரீ சுவாமி நாதகுருக்கள் பிரதம குருவாக இருந்து நடப்பித்தார்.

1982 ஆம் ஆண்டில் நடைபெற்ற மகா கும்பாபி ஷேகத்தை அடுத்து பத்து நாள்கள் நடந்து வந்த அலங்கார உற்சவத்தை மகோற்சவமாக நடத்துவதற்கு அடியவர்கள் விரும்பிய வண்ணம் கந்தசுவாமி தலைமையில் இயங்கிய பொறுப்புரிமையாளர் சபையினர் யாகசாலை, பாகசாலை, களஞ்சிய அறை, வைரவர் கோயில் புதிதாக கட்டியதுடன் கோயிலில் உள்வீதி முழுவதும் கொட்டகைகளுடன் கொடித்தம்பமும் தாமிரகலசத்துடன் அழகாகச் செய்வித்து நிறைவேற்றினர். மகோற்சவம் 1988 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வந்தது. பிள்ளையாருக்கும் புதுத்தேர் கட்டுவதற்காக வி.மு. சண்முகம் பல லட்சம் ரூபா செலவழித்துப் புதுத் தேருடன் புதுத்தேர் முட்டியும் கட்டிமுடித்தார். க.கு.ச. இரத்தினம் அவர்களும் சண்முகத்தாருக்குப் பக்கபலமாக பொருளுதவி செய்து உதவினார்.



**டர்ஷிகன்**

புதுத்தேர் வெளி வீதி ஓடுவதற்கு வசதியாக வடமேற்கு மூலையில் இருந்த ஒரு வளவையும் பல்லாயிரம் ரூபா கொடுத்து வாங்கியும் தெற்கு வீதியால் தேர் ஓடுவதற்கு வசதியாக திருக்குள வடகரையை மண் கொட்டி நிரப்பி அடியில் இருந்து நில மட்ட வரை சிமெந்துக் கற்களாலும் சுவர் எழுப்பி தெற்கு வீதியை விசாலமாக்கி அதற்கும் பல்லாயிரக் கணக்காகச் செலவு செய்து ஒப்பேற்றியவர் வி.மு. சண்முகம் ஆவர். அவருக்கு முழு உதவியாக இரவு பகல் பாராது வேலைகளை முன்னின்று பொறுப்பெடுத்து நடத்தியவர் அ.மு. அம்பல வாணர் ஆவர்.

(தொடரும்)

# சமயப் பணியும் சமூகப் பணியும் இணைந்து வழங்கும் நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபைத் தேவாலயம்

(சென்றவாரத் தொடர்சசி)

ஆரம்ப உறுப்பினர்களாக உடையார் க.குமாரசாமி குடும்பத்தினரும் டாக்டர் க. சந்திரபால் குடும்பத்தின ரும் தற்சமயம் ஆஸ்திரேலியாவில் வசித்துவரும் முன்னாள் ஆசிரியர்களான கே. எஸ். திசை ராஜா, இரா. ஜெயராசா, இரா. ஜெயசீலன், நெடுந்தீவுப் பிரதேச சபைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எ. அருந்தவசீலன், உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. கணேசதாசன், ஆசிரியர் ப.சந்திரசேகரம் போன்றவர்களும் அவ்வப்போது வேண்டிய உதவிகளை வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தை அண்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஒன்றும் இயங்கிவந்தது. இதன் அதிபராக இருந்த அமரர் த. இராமநாதர் தலைமையில் சிறந்த ஆசிரியர்களின் அனுசரணையுடன் கல்விச் செயற்பாடு கள் சிறப்பாக இடம்பெற்று வந்தன. இங்கு கல்வி கற்றவர்கள் அரசின் உயர் பதவிகளில் இருந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. தற்போது இந்தப் பாடசாலை நெடுந்தீவு மகாவித்தியாலயத்துடன் இணைந்துள்ளது.

இந்த ஆலயத்தின் அனைத்து சமூகப் பணிகளுக்கும் சமூகத் தொண்டுகளுக்கும் பிரசங்கங்களுக்கும் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயரக ளான ஏ. குலேந்திரன், டி.ஜே. அம்பல வாணர், கலாநிதி எஸ். ஜெபனேசன், தற்போதைய பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா ஆகியோரின் சிறந்த வழிகாட்டல்கள் கிடைத்து வருகின்றமை இங்குள்ள புரட்டஸ்தாந்து மக்களுக்கு மனநிறைவைத் தருகின்றது. தற்போதைய குருவான வண. தாவீது அடிகள் மக்களுடன் சிறந்த முறையில் அணுகுவதுடன் புதிய ஆலயம் ஒன்றைக் கட்டி முடிப்பதிலும் கவனம் செலுத்தி வருகின்றார்.



நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை தனது 150 ஆவது வருடத்தை அண்மையில் பூர்த்தி செய்துள்ளது.


**லக்ஸ்மன்**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமய சந்நிதிகளில்



யாழ்ப்பாணம், மே 11

திருவண்ணைநகர், கில்னர் ஒழுங்கை மகாமாரி அம்பாள் ஆலயத்தின் அலங்கார உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விசேட உற்சவங்கள் நடைபெறும். உற்சவ காலங்களில் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பரத் திருவிழாவும் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து ஜூன் மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதிய கும்பாபிஷேகமும் நடைபெறும். (ற-313)

* * *

யாழ்ப்பாணம், மே 11

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இந்தத் திருவிழாக் காலங்களில் தினமும் இரவு 8.30 மணிக்கு பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா சக்தி லீலை எனும் தலைப்பில் விசேட தொடர் இசைச் சொற்பொழிவை நிகழ்த்தி வருகின்றார். (ற-313)

* * *

யாழ்ப்பாணம், மே 11

வேலணை மேற்கு பெரியபுலப்பதி மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றுடன் ஆரம்பமாகித் திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாக்களில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இந்தத் திருவிழாத் தினங்களில் பிற்பகல் 4 மணிக்கு முடிப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரினதும் கூட்டுப் பிரார்த்தனைகள் இடம்பெறும். (ற-313)

* * *

வண்ணை, மே 11

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஏகாதசித் தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனையுடன் பூசைகள் ஆரம்பமாகி 9 மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து ஸ்ரீமத் நாராயணர் பூமாதேவி, சிறிதேவி புடை சூழ திருவீதி வலம் வந்து அருள்பாலிப்பார். நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும். (ற-160)


## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா கொம்பனி உத்தரவாதத்துடன் தரமான பிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (80/=) 12.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.
நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.

## நாய் விற்பனைக்கு

2 ½ வயதுடைய ஜேர்மன் சப்பேட் ஆண் நாய் மற்றும் 3 மாதம் நிரம்பிய டாசோன் ஆண்நாய், பொம்மேனியன் ஆண்குட்டிகள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: க.நடராசா, எளி கோரிலா, கோக்குவில் கிழக்கு, கோக்குவில்.

## JCB OPERATOR
(JCB இயக்குநர்)

மேற்கூறிய வேலைக்கு அனுபவம் நிறைந்த ஆள்கள் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துடன் உடன் தொடர்பு கொண்டு நேரில் வரவும்.

Pillayar Inn,
31, Manipay Road,
Jaffna. (4042) (38)

Tel: 021 222 2829
Fax: 021 222 4449
Mobile: 0777 222715.

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு பஸ் டிப்போவுக்கு வடக்குப் பக்கமாய் செல்லும் வீதியில் பலாலி வீதியில் இருந்து கிழக்காக ¼ மைல் தூரத்தில் சகல வாகனங்களும் செல்லக்கூடிய பாதையுடைய விவசாயத்துக்கோ, வீடுகட்டவோ சகல வசதிகளும் கொண்ட 13 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0774166565.

## வவுனியா, மன்னார் மாவட்ட பிரதேச செய்தியாளர்கள்

கீழ்க்காணும் பிரதேசங்களுக்கு செய்தியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.
முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



★ செட்டிகுளம் ★ நெடுங்கேணி
★ கனகராயன் குளம் ★ ஓமந்தை
★ வவுனியா நகரம் ★ பூவரசங்குளம்
★ முருங்கன் ★ மடு
★ நானாட்டான் ★ அடம்பன்
★ மன்னார் ★ தலைமன்னார்

தகுதியானவர்கள் விவரங்களுடன் கீழ்க் காணும் விலாசத்துக்கு 15.05.2011 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

பிரதம ஆசிரியர்
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# நீங்காத நினைவில்

## 4 ஆம் ஆண்டு

தோற்றம்
29.10.1951
மறைவு
25.04.2007



## திருமதி உமாதேவி நடராசா

(ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி)

திதி: 11.05.2011

காலையும் வெந்தது மாலையும் வெந்தது
ஆறாப் புண்ணில் மாறாக் காயமாய்
எரிந்தது தீயாய் நின் நினைவு
கண்ணியம் காக்கும் தாயே!
புண்ணியம் போற்றப் பிறந்தவளே!
மூன்றாண்டு காலம் ஓடிப்போனாலும்
உம் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது
நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்து விட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாத-நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்

கணவர்:- சி.நடராசா (அதிபர்).
திருமதி Dr. அனுஷா யோகநாதன் (பெறாமகள்-
(யாழ் போதனா வைத்தியசாலை) மற்றும்
[illegible] மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
T.P: 0776176861, 0212240316.

(49.27)

(3815)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலக்கேஷனும் அடிபாடுகளும்

திரும்பவும் பல்கலைக்கழகத்தின் பெயர் பத்திரிகைகளில் அடிக்கடி அடிபட ஆரம்பித்திருக்கிறது. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவராகப் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட மாணவர் மூன்று மாதங்களுக்கு முன்னர் பகிடிவதையில் ஈடுபட்டார் என்று கூறி அவர் பல்கலைக்கழகத்துக்கு வருவதற்குத் தடை போடப்பட்டதால் பகிஷ்கரிப்பில் மாணவர்கள் குதித்திருந்தனர். அதன் போது நடந்த களேபரத்தில் ஊடகவியலாளர் ஒருவரும் தாக்கப்பட்டிருந்தார்.

இப்போது மாணவர்கள் தமக்குள் மோதிக் கொண்டதில் பல்கலை வளாகத்தில் பொலிஸ் உள்நுழையும் அளவுக்கு நிலைமை கட்டுமீறியிருக்கிறது. பொதுவாகவே 'கம்பஸில்' வருடா வருடம் நடைபெறுகின்ற 'வெல்கம் பார்ட்டிகளின்' போது மாணவர்கள் பலரும் தண்ணியில் மிதப்பது ஊரறிந்த இரகசியம். அதுவும் 'வெல்கம்' பார்ட்டிக்கு முதல் நாளிரவு 'அலெக்கேஷன்' பணத்தில் குடித்துக் கும்மாளமிட்டு, பின்னர் அடிதடியில் இறங்குவது காலம் காலமாக நடைபெற்றே வருகிறது. ஆனால் அது பொலிஸ் நிலையம் வரை சென்றிருப்பது இதுவே முதல்தடவை.

வரவேற்புபசார நிகழ்வுக்காக (வெல்கம் பார்ட்டிக்காக) மாணவர்களிடம் இருந்து ஒரு குறித்த தொகைப்பணம் வசூலிக்கப்படும். பின்னர் அதில் பெரும் பகுதி ஒவ்வொரு வருட மாணவர்களுக்கும் தண்ணிச் செலவுக்காக ஒதுக்கப்படும். இதுவே 'அலக்கேஷன்' என மாணவர்களால் செல்லமாகச் சொல்லப்படுகின்றது. இந்த 'அலக்கேஷன்' பணத்துடன் தம் கைக்காசையும் போட்டு மப்பில் மிதக்கும் மாணவர்கள் ஏற்கனவே பல்கலையில் தம்முடன் முரண்டுபிடித்த மாணவர்கள் மீதுள்ள 'கறளை' வெறியின் திரையில் அரங்கேற்ற முனைவர். இதனால் ஒவ்வொருமுறையும் 'வெல்கம்' பார்ட்டிகள் சண்டை இல்லாமல் முடிந்ததில்லை.

இந்த முறையும் அந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கும்(?) நோக்குடன் முகாமைத்துவ வணிகபீட மாணவர்கள் 'வெல்கம் பார்ட்டி'க்கு முதல் நாளிரவு பல்கலையில் கூடினர். இரண்டாம் வருட மாணவர்கள் அலங்கார வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்க மூன்றாம், நான்காம் வருட மாணவர்கள் 'அலக்கேஷனை' பகிர்ந்து கொண்டனர். வழமையாக 'அலக்கேஷனுக்கு' ஒதுக்கப்படும் பணத்தில் மதுபானங்களை வாங்கி அவற்றைப் பகிர்ந்து 'அடிப்பர்'. ஆனால் இம்முறை ஒவ்வொருவருக்கும் 'அலக்கேஷன்' சரிவரப் பிரிக்கப்பட்டு ஆளுக்கு 800 ரூபா வீதம் கொடுக்கப்பட்டது. இந்த 800 ரூபா அவர்களுக்கு எந்த மூலைக்குக் காணும்? எனவே தங்கள் பணத்தையும் போட்டு 'கேஸ்' கணக்கில் போத்தல் களை உள்ளே கொண்டு வந்து மங்களகரமாக 'பார்ட்டியை' ஆரம்பித்தனர். 'ஓப்பினிங்' எல்லாம் நன்றாகவே இருந்தது. ஆனால் 'பினிஷிங்' படுபயங்கரமாக மாறிவிட்டது.

பழைய 'கொடுக்கல் -வாங்கல்கள்' மூன்றாம் வருடத்துக்கும் இறுதி வருடத்துக்கும் இருந்தது. அந்தக் கணக்குகளைத் தீர்ப்பதற்கு இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடையாது. ஆரம்பத்தில் வெறும் வார்த்தைப் பிரயோகங்களுடன் தொடங்கிய முறுகல், மப்பு ஏற ஏற கைகலப்பாக மாறியது. இந்தக் கைகலப்பு கைகளுடன் மாத்திரம் நின்றுவிடாது, இரும்புக் கம்பிகள், பொல்லுகள் என்று விரிவடையத் தொடங்கியது. மூன்றாம் வருட மாணவர்களின் மூர்க்கமான தாக்குதலில் நிலைகுலைந்து போன இறுதிவருட மாணவர்கள், 'தந்திரோ

## கோணல் கோலங்கள்

பாயப் பின்வாங்கலை' மேற்கொண்டு பிடரியில் கால்பட ஓடி மறைந்தனர் என்று களத்தில் நிதானத்துடன் நின்ற மாணவர்கள் சிலர் தெரிவிக்கின்றனர். என்றாலும் மூன்றாம் வருட மாணவர்களின் 'வெறி' அடங்கவில்லை. வெற்றிக் கூச்சலோடு கைப்பற்றிய பிரதேசங்களில் தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கினர். அப்பாவிகளான ஜன்னல் கண்ணாடிகளும் 'ஸ்ரோன் பெஞ்'சுகளும் வாட கைக்கு எடுத்த பிளாஸ்டிக் கதிரைகளும் இந்தத் தாக்குதலில் சிக்கிச் சின்னா பின்னமாகின. இவர்களின் தாக்குதல் 'சர்வதேச போர்விதிகளை' மீறியதுடன், மோதல் தவிர்ப்பு வலயங்களுக்குள்ளும் 'பியர்' போத்தல்கள், கொத்துக் குண்டுகள் போல பறந்து வரத் தொடங்கியதால், அதனைக் கண்டு பாதுகாப்பு ஊழியர்கள் உயிரைக் காப்பாற்ற சுவரோரமாக நிலையெடுத்தனர்.

ஆனாலும் பிரயோசனமில்லை. வேறு

### ஓடுகாலி

வழியின்றி பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. பல்கலைக்கழகத்துக்குள் சீறிக்கொண்டு வந்த பொலிஸார் மாணவர்கள் மீது சரமாரியான தடியடிகளுடன் கூடிய பல்கலைக்கழகத்தை மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கையில் இறங்கினர். அவ்வளவு நேரமும் வெறியாட்டம் ஆடிய மாணர்களின் மப்பு வாங்கிய அடிகளால் முறிய தப்பித்து தலை தெறிக்க ஓடினர். அடுத்தநாள் திடீரென கனவு கண்டவர்கள் போல மீண்டும் 'கம் பஸுக்கு' வந்த பொலிஸார் அங்கு அநா தரவாக நின்ற மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பவற்றை அள்ளியெடுத்துச் சென்றனர். அவற்றைப் பெறுவ தற்காகச் சென்ற இரு மாணவர்கள் கைது செய்யப்பட்டு நடந்த நிகழ்வுகள் தொடர்பாக விசாரிக்கப்படுகின்றனர்.

'நாளைய உலகின் வழிகாட்டிகள்' என நம்பப்படுகின்ற பல்கலை மாணவர்கள் மது தலைக்கேறி, பொலிஸ் நிலையம் செல்லும் அளவுக்கு அடி தடிகளில் இறங்குவது அவர்கள் மீதான எல்லா நம்பிக்கைகளையும் பொய்த்துப் போகச் செய்துவிடும். அத்துடன் மிச்சசொச்சமாக இருக்கின்ற நன்மதிப்பையும் இதுபோன்ற சம்பவங்கள் இல்லாமலே செய்துவிடும். இனியேனும் போதை தெளியுமா மாணவர்களுக்கு...?

# நிபுணர் குழுவின் அறிக்கைக்கு இலங்கை பதிலளிப்பது உகந்ததல்ல

## சட்டத்தரணி தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, மே 11

ஐ.நா . செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் இலங்கை அரசு பதிலளிப்பது உகந்ததல்ல. அந்த அறிக்கையிலுள்ள பிழையான தகவல்கள் குறித்து சர்வதேச சமூகத்துக்கு அரசு தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார். நிபுணர் குழு சட்ட பூர்வமானது அல்ல வென இலங்கை அரசு அறிவித்துள்ள நிலையில் அதன் அறிக்கை தொடர்பில் பதிலளிப்பதன் மூலம் அரசின் நிலைப் பாட்டில் மாற்றம் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிகாட்டியுள்ளார். நிபுணர் குழு அறிக்கையில் பல்வேறுபிழைகள் உள்ளன என்றும் அது குறித்து சர்வதேச சமூகத்தை தெளிவு படுத்துவதற்கானநடவடிக்கைகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்தெரிவித்துள்ளார்.




# எழுத்துப் பரீட்சை நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 11

பாடசாலை மட்ட 'உங்களுக்குத் தெரியுமா?' எழுத்துப் பரீட்சையை எதிர்வரும் 25ஆம் திகதி உயர்தர மாணவர்களுக்கு நடத்துமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இந்தப்பரீட்சைக்கான வினாப் பத்திரங்களை எதிர்வரும் 25ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ்.கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் பரீட் சையில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் 5 மாணவர்களின் பெயர் விவரங்களை யாழ்.கல்வி வலய அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் IIற்கு பதவியுயர்வு பெற்ற எமது வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல் பிரிவு) மதிப்புக்குரிய

திருஞானம் ஜோன் குயின்ரஸ்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் அவரின் பணி சிறக்க எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தீவக வலயக் கல்வி அலுவலக அலுவலர்கள்.

(சி/575940)

STUDY IN CHINA - சீனாவில் கல்வி

ENGLISH MEDIUM - ஆங்கிலத்தில் (1500 - 4000 USD / year)

SPOT ADMISSION AT JAFFNA CITY HOTEL ON 15TH MAY 2011

- M.B.B.S (SLMC Recognized)
- Engineering (Aeronautical & Telecommunication)
- Business Administration
- Trade Economy & Finance
- Chinese Language

FREE ADMISSION

இலவச அனுமதி

WIN LANKA WORLD (PVT) LTD.

TEL: 0777 813450, 077 514 99 65

E-MAIL : winlanka@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் மீதான தாக்குதல்களுக்குப் பதிலடி

## பிரதமர் கிலானி அறிவிப்பு

இஸ்லாமபாத், மே 11

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் அமெரிக்க படைகளால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

இந்த கொலையைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு நெருக்கடி ஏற் பட்டுள்ளது. இந்நிலையில் பின் லேடன் மரணம் குறித்து பாகிஸ் தான் நாடாளுமன்றத்தில் அந் நாட்டு பிரதமர் யூசுப் ரசா கிலானி உரையாற்றினார்.

அவர் தனது பேச்சில் நாம் நமது நாட்டின் பெருமை மற்றும் கௌரவத்தை உறுதிப்படுத்த வேண்டும். தோல்வியடைந்த கொள்கைகளுக்கு பாகிஸ்தான் பொறுப்பேற்க முடியாது.

அல்குவைதா அமைப் பையோ, பின்லேடனையோ நாங்கள் பாகிஸ்தானுக்கு அழைக்க வில்லை. பின்லேடனை நாங் கள் ஆதரிக்கவில்லை. அல் குவைதா அமைப்பை ஒடுக்க ஐ.எஸ்.ஐ அமைப்பு முயற்சி செய்தது. ஐ.எஸ்.ஐ மீது கூறப் படும் குற்றச்சாட்டுக்கள் போலி யானவை.

பாகிஸ்தானின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதை அனு மதிக்க முடியாது. பின்லேடன் கொல்லப்பட்டது தொடர்பாக வெளிவரும் கட்டுக்கதைகள் அனைத்தும் தவிர்க்க வேண் டும். பின்லேடன் கொல்லப்பட்ட தன் மூலம் நீதி நிலைநிறுத் தப்பட்டுள்ளது. ஆனால் இந்த வெற்றியை கொண்டாட பாகிஸ் தானுக்கு ஆவல் இல்லை.

பின்லேடனை கண்டு பிடிக்க முடியாதது சர்வதேச நாடு களின் உளவுத்துறைகளுக்கு ஏற்பட்ட தோல்வி. பாகிஸ்தான் மீது நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடுக்கப் படும் தாக்குதல்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும். அமெ ரிக்காவுடனான உறவு பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை அடிப்படையில் உள்ளது.

பாகிஸ்தானுக்கு தெரியா மலே பின்லேடன் மீது அமெரிக்க தன்னிச்சையாக நடவடிக்கை எடுத்தது. இந்த தன்னிச்சை யான நடவடிக்கையால் பாகிஸ் தானுக்கு வருத்தம் ஏற்பட்டுள் ளது - என்றார். (த)

## பின்லேடனைக் கொலைசெய்ய உதவிய வீரர்கள்

பாகிஸ்தானின் அபோதாபாத் பகுதியில் வசித்த பின்லேடன் மீது தாக்குதல் நடத்தியது அமெ ரிக்கப்படை என கூறப்பட்டது.

ஆனால் பின்லேடனை பிடிக் கும் அல்லது சுட்டுக் கொல்லும் நடவடிக்கையான ஜெரோனிமா திட்டத்துக்கு இங்கிலாந்து ராணு வத்தில் கப்டன் மற்றும் மேஜர் போன்ற உயரிய பதவிகளில் பணியாற்றும் இரு அதிகாரிகள் முக்கிய பங்காற்றியுள்ளனர் என்பது தற்போது தெரியவந் துள்ளது.

# சர்கோசியின் செல்வாக்கு சரிவு

2012ஆம் ஆண்டு பிரான்சில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறு கிறது. இந்த தேர்தலில் நடப்பு ஜனாதிபதியான நிக்கோலஸ் சர்கோசி போட்டியிட்டு மீண்டும் பதவியில் அமர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

ஜனாதிபதி தேர்தல் குறித்து மக்கள் மனநிலை என்ன என்ற ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இதில் சர்வதேச நிதியத் தலை வர் ஸ்ட்ராஸ்கான் முதல் சுற்று வாக்கெடுப்பில் இரண்டு சதவீத வாக்குகளைப் பெற்று முன்னணியில் உள்ளார்.

வலதுசாரி இயக்கத்தலைவர் மரினேலே பென் 17 சதவீத வாக்கு களையும், சர்கோசி 16 சதவீத வாக்குகளையும் பெற் றுள்ளனர். எல்.எச் 2 கணிப்புப்படி இந்த தகவல் வெளியாகியுள் ளது. 2007 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது சர்கோ சிக்கு வெற்றி கிடைத்தது.

2012ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் சோசலிஸ்ட் வேட் பாளராக செகோலேனே ஹொயல் தேர்வு செய்யப்பட்டால் சர்கோசியிடமும் லேபென்னிடமும் ஹொயல் தோல்வியை சந்திப் பார் என கூறப்படுகிறது.

ஸ்ட்ராஸ்கான் போட்டியிட்டால் 35 சதவீத வாக்குகளை சர்கோசி இழக்க வேண்டி இருக்கும். மீண்டும் தேர்தலில் போட்டி யிடுவது குறித்து சர்கோசி வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. இருப் பினும் பிரதமர் பரான்கய்ஸ் பலான் கூறுகையில்,

சர்கோசி மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படுவார் என்றார்.

மே 6 மற்றும் 7ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட தொலைபேசி கணிப்பில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் நடத் தப்பட்ட ஆய்வில் இந்த தகவல் தெரிய வந்தது. சர்வதேச நிதியத் தலைவர் கான் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னும் அறிவிக்கவில்லை. (த)

# பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் பின்லேடனின் மனைவிமார்

அல்குவைதா தலைவர் பின் லேடனுக்கு 3 மனைவிகள் உள்ள னர். அவர்கள் மூலம் பின்லேட னுக்கு 11 குழந்தைகள் பிறந்தனர்.

அமெரிக்க ராணுவம் கடந்த 2ஆம் திகதி அபோதாபாத் நகரில் அதிரடி தாக்குதல் நடத்திய போது பின்லேடனுடன் 3 மனைவிகள், 11 மகன்கள், மகள்கள் உடன் இருந்தனர்.

பின்லேடன் சுட்டுக் கொல் லப்படும் முன்பு தடுப்பு நட வடிக்கைகளில் ஈடுபட்ட அவரது ஒரு மகன், ஒரு மகள் அமெரிக்க வீரர்களால் சுட்டுக் கொல்லப் பட்டனர். பின்லேடனின் மனை விகளில் இளம் மனைவி ஒருவர் மட்டும் பின்லேடனை காப்பாற்ற ஓடினார். அவரது காலில் ராணுவ வீரர்கள் சுட்டனர். இதனால் அவர் மயங்கி விழுந்து விட்டார்.

பெண்கள், சிறுவர், சிறுமி கள் மீது துப்பாக்கியால் சுடுவ தைத் தவிர்த்த அமெரிக்க ராணு வத்தினர் அவர்கள் அனைவரை யும் விசாரணைக்காக தங்களு டன் ஹெலிகொப்டரில் அழைத் துச் செல்ல திட்டமிட்டனர்.

ஆனால் எதிர்பாராதவிதமாக ஒரு ஹெலிகொப்டர் விபத்துக் குள்ளானதால் அவர்களது திட்டம் தோல்வியில் முடிந்தது. எனவே அவர்கள் பின்லேடன் உடலை யும் அவரது மகன் உடலையும் மட்டும் எடுத்துச் சென்றனர்.

பின்லேடன் பயன்படுத்திய பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட தால் பின்லேடனின் மனைவி களையும் மகன், மகள்களையும் விட்டுச் சென்று விட்டனர்.

அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தி சென்ற பிறகே அந்த பங் களாவுக்கு பாகிஸ்தான் ராணுவம் சென்றது. அங்கு இருந்த பின்லே டனின் 3 மனைவிகள் மற்றும் குழந்தைகளை தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தற்போது அவர்கள் ராணுவ முகாம் ஒன்றில் வைக்கப்பட்டுள் ளனர். பாகிஸ்தான் கமாண்டோ வீரர்கள் அவர்களுக்குப் பாது காப்பாக நிறுத்தப்பட்டுள்ளனர். பின்லேடனின் மனைவிகளிடம் விசாரணை நடத்த விரும்பு வதால் அவர்களை தங்களிடம் ஒப்படைக்கும்படி அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் பின்லேடன் உறவி னர்கள் யாரையும் ஒப்படைக்கப் போவதில்லை என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது. (த)

# ஆபிரிக்க அழகியுடன் இளவரசர் ஹரி

லண்டன், மே 11

இளவரசர் வில்லியமின் திருமணம் ஓய்ந்த ஙகையோடு ஊடகங்களின் பார்வை இப்போது இளவரசர் ஹரியின் பக்கம் திரும்பி இருக்கின்றது.

ஹரி வழமையாக செல்ஸி டேவி என்ற பெண்ணுடன் அடிக்கடி காணப் படுவார். இவரை ஹரியின் தற்காலிகக் காதலி என்றும் ஊடகங்கள் குறிப்பிடுவ துண்டு.

ஆனால் அவர் நேற்றுமுன்தினம் ஒரு போலோ விளையாட்டு மைதானத்தில் 'ஒஸ்கார்' விருது வென்ற நடிகை சார் ளிஸ் தெரனுடன் காணப்பட்டார். 26 வயதான ஹரி 35 வயதான தென்னா பிரிக்காவின் முன்னாள் அழகு ராணி யான இந்த நடிகையுடன் மிகவும் சகஜ மாகக் காணப்பட்டார். பேர்க்ஷயரில் உள்ள போலோ மைதானத்தில் இந்த ஜோடி மிகவும் குதூகலத்துடன் காணப் பட்டது.

இருவருக்கும் இடையில் பல பொது விடயங்களில் இணக்கம் காணப்படுவ தாகவும், தர்ம செயற்பாடுகள் குறித்து இருவரும் அதிகம் பேசிக் கொண்ட தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருவ வயதினர் மத்தியில் எச்.ஐ.வி பரவல் பற்றிய விழிப்புணர்வு வேலைத் திட்டம் ஒன்றை தெரன் தானாகவே தொடங்கி நடத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

**கடை வாடகைக்கு**

பருத்தித்துறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தைக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள புதிய கடைத் தொகுதியில் இரண்டு கடைகள் பூர்த் தியாக்கப்பட்ட நிலையில் வாடகைக்குக் கொடுக் கப்படும்.

விரும்பியவர்கள் 0772470590, 0778543106 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (4058)

**உடன் தொடர்பு கொள்ளவும்**

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், 58 A, North Road, Southhall, Middlesex (U.K) இனை வதிவிடமாகவும் கொண்ட பாக்கியநாதன் நந்தபால் 16.05.2009 அன்று பெரிய பிரித்தானியாவில் அகாலமரண மடைந்தார். அன்னாரது ஆயுள் காப்புறுதி பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிய நடவடிக்கையினை பெரிய பிரித்தானிய நீதிமன்றில் மேற்கொள்வதற்கு, அவரது பின் உரித்தாளராகிய தந்தையான சித்தன்கேணியைச் சேர்ந்த பாக்கியநாதன் உடனடியாக என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

ச.பிரபாகரன், சட்டத்தரணி.
0773696829, 0112725588,
021 321 5104

(சி/578317)

**கண்ணீர் அஞ்சலி**



**சிவஸ்ரீ யோ.பிரபாகரக்குருக்கள்**

08.05.2011 இறைவனடி சேர்ந்த எமது மைத்துனர் பிரபா அவர்களின் பிரிவில் தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, மைத்துனரின் ஆத்மா நிலையான சாந்தி பெற பிரார்த்தனை செய்கிறோம்.

சிவஸ்ரீ ராம் கெங்காதரக்குருக்கள்,
சிவஸ்ரீ ராம் சபாநாதக்குருக்கள்,
சிவஸ்ரீ ராம் சர்வலோகேஸ்வரக்குருக்கள்,
சராதாபீடம், துன்னாலை, அல்லையம்பதி.

(சி/575948)

**கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)**

*பதவி வெற்றிடம்: லொறிச் சாரதி 312/13*

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தினை 28.05.2011 இற்கு முன் தலைவர், கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம், பரந்தன் என்ற முக வரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண் டும்.

பதவி: லொறிச் சாரதி
சம்பளக் குறிமீட்டு எண்: 312/13

சம்பள அளவுத் திட்டம்: 9950 - 11700 / 85x10 - 90x10

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

வயதெல்லை: 25 - 45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

தகைமை: ஐந்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழ், பஸ்/லொறி/உழவு இயந்திரம் பெட்டியுடன் ஓடக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரமும், நான்கு வருட அனுபவச் சான்றிதழும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தலைவர்:
கரைச்சி வடக்குப் ப.நோ.கூ. சங்கம், பரந்தன்.

YMCA JAFFNA

**கேள்விக் கோரிக்கை**

யாழ். வை.எம்.சி.ஏயின் கண்டி வீதிக் கடைத்தொகுதியின் முதலாம் மாடிக்கடை (1st Floor) 01.06.2011 முதல் (12 மாதங்களுக்கு) வாடகைக்கு விடப்படும். விண்ணப்ப முடிவு திகதி 18.05.2011. கோரிக்கைகளை அனுப்பவேண்டிய முகவரி, பொதுச்செயலாளர், Y.M.C.A., 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2222499

**கண்ணீர் அஞ்சலி**

*எமது சபையின் சக உத்தியோகத்தர்*
*திரு.சின்னத்துரை இராசரத்தினம்*
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் பொன்னர் சின்னத்துரை**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலி.வடக்குப் பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லப்படவேண்டிய தீவிரவாதிகள் இன்னும் பலர் பாகிஸ்தானில் பதுங்கல்

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சீற்றம்



வாஷிங்டன்,மே 11

''ஒசாமா பின்லேடனுக்கு உதவி செய்தவர்கள் பாகிஸ்தான் அரசுக்குள் இருக்கின்றனரா என்பது பற்றி தெரியாவிட்டாலும், இதுகுறித்து அமெரிக்காவும், பாகிஸ்தானும் விசாரணை மேற்கொள்ளும். பாகிஸ்தானில் கொல்லப்படவேண்டிய தீவிரவாதிகள் மேலும் பலர் உள்ளனர்'' என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட விவகாரத்தில், அவர் அபோதாபாத்தில் ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக தங்கியிருந்தமை பற்றி அமெரிக்கா தொடர்ந்து சந்தேகங்களை எழுப்பி வருகிறது.

இதுகுறித்து திங்கட்கிழமை பேட்டியளித்த ஜனாதிபதி ஒபாமா கூறியதாவது:

ஒசாமா பாகிஸ்தானில் தங்கியிருக்க உதவியவர்கள் அந்நாட்டுக்குள் இருக்கின்றனரா அல்லது வெளியில் உள்ளனரா என்பது பற்றி தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், இதுகுறித்து இருதரப்பு அரசுகளும் விசாரிக்க வேண்டியுள்ளது.

பாகிஸ்தானில் ஒசாமாவுக்கு சிலர் உதவி செய்துள்ளனர். அவர்கள் யார் என்று தெரியவில்லை. ஒசாமாவுக்கு உதவியது யார் என்பதை கண்டுபிடிப்பதிலும், விசாரிப்பதிலும் தாங்களும் ஆர்வமாக இருக்கின்றனர் என பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

இதற்கு சிலகாலம் ஆகலாம். நான்கைந்து நாள்களுக்குள் விடை கிடைத்துவிடாது. இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்குப் பின்னர் பயங்கரவாத எதிர்ப்பில் எங்களுடன் இணைந்து பாகிஸ்தான் செயல்பட்டு வருகிறது.

இருதரப்புக்கும் இடையில் சில கருத்து வேறுபாடுகள் வந்தன. அவையனைத்தும் உண்மை; இன்றும் தொடர்கின்றன. அதே நேரம், பாகிஸ்தான் மண்ணிலுள்ள சில தீவிரவாதிகளைக் கொல்ல வேண்டியிருக்கிறது. இதற்குப் பாகிஸ்தான் ஒத்துழைப்பும் வேண்டியுள்ளது.

பாகிஸ்தானில் அமெரிக்காவுக்கு எதிரான ஆழமான மனநிலை இருக்கிறது. அதனால், அங்கு அமெரிக்கா தீவிரமாக செயல்படுவது சிறிது கடினம்தான்.

- இவ்வாறு ஒபாமா தெரிவித்தார்.

# பின்லேடனின் மனைவிகள் மூவரிடமும் அமெ.விசாரணை நடத்த பாக். அனுமதி

இஸ்லாமாபாத்,மே11

பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் உயிருடன் இருக்கும் 3 மனைவிகள் பாகிஸ்தான் அரசால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் விசாரணை நடத்துவதற்கான அமெரிக்காவின் கோரிக்கையை பாகிஸ்தான் அரசு ஏற்றுக்கொண்டது.

பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த பின்லேடன் அமெரிக்க படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்லேடன் பதுங்கியிருந்த மாளிகையில் அவரது 4 மனைவிகளும், 9 குழந்தைகளும் இருந்தனர்.

அவர்களில் ஒருவர் அமெரிக்க இராணுவத்தின் தாக்குதலின் போது பலியானார். பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் உயிருடன் இருக்கும் 3 மனைவிகள் பாகிஸ்தான் அரசால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது.

விசாரணையில் அவர்களது பெயர் உம் ஒ ஹமாஷ், உம் ஒ ஹாலித், அமல் அல் சதா என தெரியவந்துள்ளது. அவர்களிடம் விசாரணை நடத்த அனுமதி வழங்கும்படி பாகிஸ்தானிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்தது.

அதன்மூலம் பின்லேடன் வகுத்திருந்த தீவிரவாதத் திட்டங்கள், அல்-குவைதா இயக்கத்தின் செயல்பாடுகள் ஆகியவை உள்ளிட்ட முக்கிய தகவல்கள் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அமெரிக்காவின் இக்கோரிக்கையை பாகிஸ்தான் அரசு ஏற்றுக்கொண்டது.

இதைத்தொடர்ந்து அவர்கள் 3 பேரிடமும் விரைவில் விசாரணை நடத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இத்தகவலை வெள்ளை மாளிகையின் பத்திரிகைச் செயலாளர் ஜெய் கார்னே தெரிவித்துள்ளார்.

# ஏமன் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் தீவிரம்

சனா, மே 11

ஏமனில், ஜனாதிபதி சலே பதவி விலகக் கோரி திங்கட்கிழமை நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது, பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார்.

அரபு தீபகற்ப நாடான ஏமனில், ஜனாதிபதி அலி அப்துல்லா சலே 1978 முதல் ஜனாதிபதியாக இருந்து வருகிறார். அவர் பதவி விலகக் கோரி கடந்த ஜனவரி மாத இறுதி முதல் அங்கு போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடந்து வருகின்றன.

டாயிஸ் நகரில் திங்கட்கிழமை காலை கல்வி அமைச்சகத்தின் முன்பு ஆசிரியர்கள் அமர்ந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நல்ல சம்பளம், பாடசாலை இறுதித் தேர்வுகளை ஒத்திவைக்க வேண்டும் ஆகிய கோரிக்கைளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

கூட்டத்தைக் கலைப்பதற்காக, பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார். ஐந்து பேர் காயமடைந்தனர்.



மொஸ்கோவில் நடந்த 2ஆம் உலகப்போர் வெற்றி தின நிகழ்ச்சியில் முன்னாள் ராணுவ அதிகாரிகளுடன் கலந்து பேசிய அந்நாட்டு பிரதமர்.

# ஜோர்தான் மன்னர்-ஒபாமா சந்திப்பு

வாஷிங்டன்,மே.11

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை ஜோர்தான் மன்னர் அப்துல்லா - 2 விரைவில் சந்திக்கவிருக்கிறார். எதிர்வரும் 17ஆம் திகதியன்று வெள்ளை மாளிகையில் இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது.

இரு தலைவர்களின் சந்திப்பின்போது, அமெரிக்கா - ஜோர்தான் இடையேயான அரசியல், பொருளாதார நல்லுறவை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படும் என வெள்ளை மாளிகை செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

# பின்லேடனைப் பிடிக்க 10 ஆண்டுகளுக்கு முன்னரே புஷ்-முபாரக் ரகசிய ஒப்பந்தம்

லண்டன், மே 11

பின்லேடனை பிடிக்க பாகிஸ்தானுடன் கடந்த 10 ஆண்டுக்கு முன்பே அமெரிக்கா இரகசிய ஒப்பந்தம் செய்துள்ள தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

அல்-குவைதா தீவிரவாதி ஒசாமா பின்லேடன் (வயது - 54) பாகிஸ்தானில் அபோதாபாத்தில் அமெரிக்க இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். இது தங்களுக்குத் தெரியாது.

முன் கூட்டியே தகவல் தெரிவிக்காமல் அமெரிக்கா உளவுத்துறை பின்லேடனை சுட்டுக் கொன்றது என பாகிஸ்தான் தெரிவித்து வருகிறது.

ஆனால், பின்லேடனை உயிருடனோ, அல்லது பிணமாகவோ பிடிக்க பாகிஸ்தானுடன் கடந்த 10 ஆண்டுக்கு முன்பே அமெரிக்கா இரகசிய ஒப்பந்தம் செய்துள்ள தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டில் அமெரிக்கா மீது அல்-குவைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருந்த பின்லேடனை அமெரிக்க இராணுவம் வேட்டையாட ஆரம்பித்தது.

அப்போது தோரா போரா மலைப்பகுதியில் பதுங்கியிருந்த பின்லேடன் அங்கிருந்து தப்பி பாகிஸ்தானுக்குள் புகுந்துவிட்டார். இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பார்வை பாகிஸ்தான் மீது விழுந்தது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், பாகிஸ்தானில் ஜனாதிபதியாக இருந்த பர்வேஷ் முஷரப்புடன் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்தார்.

அதன்படி பின் லேடனையும், அவரது உதவியாளர் அய்மான் அல்-ஜவாரியையும் உயிருடனோ அல்லது பிணமாகவோ தன்னிச்சையாகப் பிடிக்க அமெரிக்காவுக்குப் பாகிஸ்தான் அரசு அதிகாரம் வழங்கியது.

10 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் தற்போது அமெரிக்கா தன்னிசையாகப் பின்லேடனை சுட்டுக் கொன்று இருக்கிறது என பாகிஸ்தானின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இது குறித்து போடப்பட்ட ஒப்பந்தம் கடந்த 2008ஆம் ஆண்டுடன் காலாவதியான நிலையில் அப்போது ஜனாதிபதியாக இருந்த முஷரப்புடன் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

நிலைமை இவ்வாறு இருக்க இப்பிரச்சினையை பொதுமக்களிடமிருந்து சமாளிக்க பாகிஸ்தான் ஒன்றும் தெரியாததுபோல் நாடகமாடி அமெரிக்கா மீது பழி சுமத்துகிறது. அதைப்பற்றி எங்களுக்கு கவலை இல்லை என அமெரிக்க முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை லண்டனிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகை வெளியிட்டுள்ளது.

# ஒசாமாவின் இளைய மனைவி சொந்த நாட்டுக்கு அனுப்பப்படுவார்

## பாக். துணைத் தூதுவர் தகவல்

டுபாய்,மே11

''விசாரணை முடிந்த பின்னர் ஒசாமா பின்லேடனின் இளைய மனைவி உள்ளிட்ட அவரது உறவினர்கள் அனைவரும் அவரவர் சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவர்'' என்று ஏமனுக்கான பாகிஸ்தானின் துணைத் தூதர் தெரிவித்துள்ளார்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் ஏமனைச் சேர்ந்த அவரது இளைய மனைவி அமல் அகமது அப்துல் பத்தா (வயது - 29) உள்ளிட்ட மூன்று மனைவியரும், அவர்களது குழந்தைகள் உள்ளிட்ட 16 பேரும் பாகிஸ்தான் பாதுகாப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏமனுக்கான பாகிஸ்தான் துணைத் தூதர் தியார் கான் திங்கட்கிழமை அளித்த பேட்டியில் இதுகுறித்து குறிப்பிடுகையில்,''அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர். ஆரம்பக்கட்ட விசாரணை முடிந்த பின்னர் அவரவர் தாய்நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவர்'' என்று தெரிவித்தார்.

ஏமனின், இம்மாகாணத்தைச் சேர்ந்த அல்-சய்யானி மாவட்டத்தில் பிறந்தவர்தான் ஒசாமாவின் இளைய மனைவி அமல் அகமது. 2000ஆம் ஆண்டில் அவருக்கும் ஒசாமாவுக்கும் மணமானது. அப்போது, அவருக்கு வயது 18.

அவர்தான் ஒசாமாவின் ஐந்தாவது மனைவி. வயதில் மிகவும் இளையவர். ஒசாமாவின் மனைவியர் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்த உதவி செய்யும்படி பாகிஸ்தானிடம் அமெரிக்கா கேட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெள்ளை மாளிகை தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் டோம் டோனிலான் கூறுகையில், ''பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகளிடம் தற்போது ஒசாமாவின் மனைவியர் உள்ளிட்டோர் உள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்த உதவும்படி கேட்டுக்கொண்டுள்ளோம்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 மே 2011 புதன்கிழமை

# பயங்கரவாதத்தை ஒடுக்கும் சக்தி காங்.கூட்டணி அரசுக்கு இல்லை

## பா.ஜ.க. இல.கணேசன் குற்றச்சாட்டு

திருப்பூர், மே 11

பயங்கரவாதத்தை ஒடுக்கும் சக்தியை காங்கிரஸ் கூட்டணி அரசிடம் எதிர்பார்க்க முடியாது - என்று பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினர் இல. கணேசன் கூறினார்.

தேர்தல் பணி, வாக்குப்பதிவு ஆய்வு குறித்தும் அடுத்து வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் திருப்பூர் மாவட்ட பா.ஜ.க. நிர்வாகிகளுடனான ஆய்வுக் கூட்டம் திருப்பூரில் ஞாயிற்றுக் கிழமை நடந்தது. கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன் தலைமை வகித்தார்.

முன்னதாக அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு

ஒசாமா பின்லேடனை அமெரிக்கா கொன்றதிலிருந்து இந்தியா பாடம் கற்க வேண்டும். எந்தவொரு நாடும் பாதுகாப்புக்காக வேறொரு நாட்டை எதிர்நோக்கக் கூடாது. அது எவ்வளவு பெரிய வல்லரசு நாடாக இருந்தாலும் சரி. நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து துணிச்சலுடன் திட்டமிட வேண்டியது அரசின் கடமை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை தன் நாட்டின் மீது தாக்குதல் நடத்திய குற்றவாளிகளைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே எஞ்சியிருக்கிறது. அதன் விளைவாக, அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தல் வரும் என்று கருதி தொடர்ந்து அல் குவைதா அமைப்பு மீது அமெரிக்கா கவனம் செலுத்தி வருகிறது.

எனினும் உலக அளவில் பயங்கரவாதத்திற்கு அமெரிக்கா எதிரானது என்று முடிவுக்கு வர முடியாது.

பாகிஸ்தான் இன்றும்கூட பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தியா மற்றும் சர்வதேச பொலிஸாரால் தேடப்படும் தாவூத் இப்ராகிமை பாதுகாப்பாக வேறு நாட்டுக்கு அனுப்ப பாகிஸ்தான் துணை புரிந்துள்ளது. பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தற்போதும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான முகாம்கள் இயங்கி வருகின்றன.

நம்மிடம் திறமையான உளவுத்துறை, அணு ஆயுதம் தயாரிக்கக்கூடிய திறமைமிக்க விஞ்ஞானிகள் உள்ளனர். ஆளுமை உள்ள தலைமை வருமானால் இந்தியாவும் 40 நிமிடங்களில் நாட்டைச் சூழ்ந்துள்ள பயங்கரவாதத்தை முறியடிக்க முடியும். அந்தத் திறமையை காங்கிரஸ் கூட்டணி அர்சிடம் எதிர்பார்க்க முடியாது.

தமிழக பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும் பான்மை கிடைக்காது.

இந்தத் தேர்தலில் பா.ஜ.க. 10 தொகுதிகளில் வெற்றி பெறும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வாக்கு எண்ணிக்கையைக் கண்காணிக்க 55 கூடுதல் பார்வையாளர்கள் வருகை

## பிரவீண்குமார் தெரிவிப்பு

சென்னை, மே 11

தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட 55 கூடுதல் பார்வையாளர்கள் வருகை தரவுள்ளனர் என மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீண் குமார் தெரிவித்தார்.

சட்டப் பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை தொடர்பாக அரசியல் கட்சிகளுக்கு விளக்கும் கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வாக்கு எண்ணிக்கையின் போது வேட்பாளர்கள், முகவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், வாக்கு எண்ணிக்கைக்கான புதிய விதிமுறைகள் ஆகியவை குறித்து கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீண் குமார் இந்தக் கூட்டத்தில் விளக்கினார்.

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பிரவீண் குமார் கூறியவை வருமாறு -

வாக்கு எண்ணிக்கையின் போது ஒரு தொகுதிக்கு ஒரு பார்வையாளர் வீதம் தேவை என்று மத்திய தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை வைக்கப் பட்டது. இதை ஏற்று வெளி மாநிலங்களைச் சேர்ந்த 55 கூடுதல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் அனுப்புகிறது. தமிழகத்துக்கு இவர்கள் 12 ஆம் திகதி வரவுள்ளனர்.

ஏற்கனவே இப்போது 122 பொது பார்வையாளர்கள், 57 செலவினப் பார்வையாளர்கள் என 179 பேர் உள்ளனர்.

மே 13 ஆம் திகதி காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியவுடன் தபால் வாக்குகள் முதலில் எண்ணப்படும்.

அதன் பின்னர் 30 நிமிடங்கள் கழித்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும்.

ஒரு சுற்று வாக்குகள் முழுமையாக முடிந்த பிறகே அடுத்த சுற்றுக்கான வாக்குகள் எண்ணப்படும். ஒவ்வொரு தொகுதியிலும் கடைசி 2 சுற்றுகளுக்கு முன்னதாகவே தபால் வாக்குகள் எண்ணப்பட்டு விட வேண்டும்.

வேட்பாளர்கள், முகவர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் அவர்களுக்கென்று ஒதுக்கப் பட்ட இடங்களில் மட்டுமே செல்போன் பயன்படுத்தலாம்.

-இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# இந்திய-அமெரிக்க உறவை வலுப்படுத்த இருநாட்டுத் தலைவர்கள் பேச்சு

இந்திய-அமெரிக்க உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகவும் இரு பிராந்தியங்களிலும் நிலவும் தற்போதைய சூழ்நிலை ஆகியவை குறித்தும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுடன் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் தொலைபேசி மூலம் பேச்சு நடத்தியுள்ளதாக பிரதமர் அலுவலக செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இரு தலைவர்களுக்கும் இடையிலான மேற்கண்ட பேச்சு மிகவும் சுமுகமான முறையில் இருந்தது எனவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை பாகிஸ்தானின் அபோட்டாபாத் நகரில் தங்கியிருந்த அல் கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்க சிறப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு ஒருவாரம் ஆன நிலையில், இரு நாட்டுத் தலைவர்களும் அந்தச்சம்பவம் குறித்து விவாதித் தார்களா என எதுவும் தெரிவிக்கப் படவில்லை.

பின்லேடனுக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் கூறப்படும் விவகாரத்தில், பாகிஸ்தான் அரசு அதிகாரிகள் யாருக்கேனும் தொடர்பு இருக்கலாமோ என்ற கேள்வி எழுந்துள்ளது.

அவர்கள் அரச அதிகாரத்தில் உள்ளவர்களா, வெளியே இருப்பவர்களா என்று விசாரிக்க வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக பாகிஸ்தான் இதைச் செய்ய வேண்டும் என்று தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அமெரிக்க அதிபர் ஒபாமா நேற்று முன்தினம் பேட்டி அளித்துள்ளார்.

இந்தநிலையில் அதே தினத்தில் இரு நாட்டுத் தலைவர்களும் தொலைபேசியில் ஆலோசனை நடத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே, பின்லேடனுக்கு அடைக்கலம் கொடுத்ததாக பாகிஸ்தானைத் தொடர்புபடுத்திக் கூறப்படும் விமர்சனங்கள் குறித்து அந்த நாட்டு பிரதமர் யூசுப் ராசா கிலானி கூறுகையில், பின்லேடன் விவகாரத்தில் பாகிஸ்தானை மட்டும் குற்றம் சுமத்த முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

**தவறிவிட்டது**

NO.5, சீனியர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய மதலி கறுப்புசாமி செல்வக்குமார் என்பவரது NPVP- 5577 இலக்க முடைய மோட்டார் சைக்கிளின் காப்புறுதி, வரிப்பத்திரங்கள் பண்ணைக்கும் அராலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். 0776428927

**மலிவு விற்பனை**

புதிய பாவித்த SONY wega flat 21", 25", 29" T.V கள் (13000/=முதல்), குளிர்சாதனப் பெட்டிகள் DVD அம்பிளிபயர் Box, Rx Radio, Cassette, Computer என்பன மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு-0771393670, 0778449829
R.S.பாலேஸ்வரன் (அப்பாகோம்பனி) சிவிப்புளியடி (ஆரிய பாடசாலை அருகில்), K.K.S.வீதி இணுவில்.

**வாடகைக்கு/ குத்தகைக்குத் தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் 5 அறைகள் கொண்ட விசாலமான வீடுகள் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு அல்லது வாடகைக்குத் தேவை. வீடுகள் கோயில் பாடசாலைகளிலிருந்து 500 மீற்றருக்கு மேற் பட்ட தூரத்தில் உள்ள இடமாக இருக்க வேண்டும். குத்தகைக்கு அல்லது வாடகைக்குக் கொடுக்க விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 0776042647, 0776212047
(4055)

**கண்ணீர் அஞ்சலி**



கடந்த 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை
இறைபதம் அடைந்த
அமரர் யோகீஸ்வரக் குருக்கள்
பிரபாகரேஸ்வரக் குருக்கள்
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
சுப்பிரமணியம் பாஸ்கரன் ஆச்சாரி,
(ச/575947) தொ.பே: 0212223515 479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு: 29.05.1923
இறப்பு: 14.04.2008



அமரர்
ஏகாம்பரம் சோமசுந்தரம்
(சோமையா)

ஆண்டுகள் மூன்று உருண்டோடியும்
இன்னும் என் மனம் ஆறவில்லை ஐயா!
பூண்ட விரதம் எல்லாம்-புவியில்
வீணாகிப் போனதையா!
தூண்டும் என் சிந்தை உம்மைக்
காணத் துடிக்குதையா
மீண்டும் எப்போ வருவீர்-இங்கு
வேண்டுகின்றேன் குல தெய்வங்களை.

மனைவி
சோ.[illegible]
([illegible])
[illegible],
வதிரி. (சி/575946)(39-21-23)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
செல்வரட்ணம் சிவரூபன்
தோற்றம்: 03.07.1983
மறைவு: 23.04.2010

எம்மிரு விழிகளிலும் கண்ணீர் ஓயவில்லை
ஓராண்டு பறந்ததுவோ நொடிப் பொழுதில்
எங்களைவிட்டு எங்கு சென்றீர்?
என்றென்றும் நின் நினைவு எம்முடனே!

91/1, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்.
(4056(39-19-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நடந்தது இனப்படுகொலை; மஹிந்தவையே ஐ.நா. விசாரிக்கவேண்டும்

## அவரே பொதுக்குற்றவாளி; திருமா எம்.பி. ஆவேசம்



இராமநாதபுரம்,மே 11

இலங்கையில் நடந்திருப்பது பயங்கரமானஇனப்படுகொலை. இந்த மனித இனப்படுகொலை குறித்து ஐ.நா. சபை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மட்டுமே பொதுக்குற்றவாளி என்று விசாரிக்க வேண்டும். மஹிந்த ராஜ பக்ஷ, ஐ.நா. சபையை மதிக்கவில்லை.

- இவ்வாறு விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவரும் எம்.பியுமான திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கை மாறாத வரையில் ஈழத் தமிழர்களை யாராலும் காப்பாற்ற முடியாது. இந்திய அரசின் ஈழத்தமிழர் விரோதக் கொள்கையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று முதல்வர் கருணாநிதி நேரிலும், கடிதம் மூலமாகவும் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இதை மத்திய அரசு கண்டும் காணாமல் போல் உள்ளது. ஐ.நா. நிபுணர்கள் குழு வெளியிட்டுள்ள அறிக்கை தமிழர்களுக்குப் பாதகமாக உள்ளது. மஹிந்த ராஜபக்ஷவை மட்டுமே பொதுக்குற்றவாளி என்று விசாரிக்க வேண்டும். இலங்கை இராணுவத்தினரையும் மற்றும் விடுதலைப் புலிகளையும் விசாரிப்பது தவறானது.

இலங்கையில் நடந்து இருப்பது பயங்கரமான இனப் படுகொலை. இந்த மனித இனப் படுகொலை குறித்து ஐக்கிய நாடுகள் சபை மஹிந்த ராஜபக்ஷவை மட்டும் விசாரிக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் சபையை மதிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபைப் பிரதிநிதிகள் இலங்கைக்குச் சென்றபோதும் அவர்களை இலங்கைக்குள் விட அவர் மறுத்து விட்டார்.

இன்று இலங்கையை இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் ஆதரிக்கின்றன. எனவே இவர்களின் ஆதரவை வைத்துக் கொண்டு மஹிந்த ராஜபக்ஷ அனைவரையும் உதாசீனப் படுத்தி வருகிறார். எனவே, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை மஹிந்தவை விசாரிக்க வேண்டும். அப்போதுதான் மஹிந்த ராஜபக்ஷவின் மனித இனப் படுகொலை வெளியே தெரிய வரும். நடைபெற உள்ள இந்திய நாடாளுமன்றக் கூட்டத்தில் இதுகுறித்து பிரச்சினை எழுப்பப்படும்.

மஹிந்த ராஜபக்ஷவை கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்கள். அவர்கள் ஈழ தமிழர்கள் என்ற வார்த்தையை பயன்படுத்துவது இல்லை.

அமெரிக்கா அத்துமீறி பாகிஸ்தானுக்குள் நுழைந்து பின்லேடனைக் கொன்று பிணத்தை கடலில் வீசியது உலக இறையாண்மைக்கு எதிரானது.

- இப்படி அவர் தெரிவித்தார். (வ)

# ஜேர்மன் பிரதமருக்கு நேரு விருது



ஜவஹர்லால் நேரு விருதுக்கு ஜெர்மன் நாட்டுப் பிரதமர் ஏஞ்சலா மெர்கெல் தேர்ந் தெடுக்கப்பட்டார். 2009ஆம் ஆண்டுக்கான இந்த விருதுக்கு உரியவரைத் தேர்வு செய்ய துணைக் குடியரசுத் தலைவர் முகமது ஹமீது அன்சாரி தலைமையிலான குழு டில்லியில் கூடி ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கெலைத் தேர்ந் தெடுத்துள்ளதாக வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருதில் ஒரு கோடி ரூபா ரொக்கப் பணம் மற்றும் கேடயம் மற்றும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

# அள்ளி வழங்குகிறது தாஜ்மஹால் மாதத்துக்கு ரூபா 2 கோடி வசூல்!

சென்னை,மே11

ஆக்ராவில் உள்ள தாஜ்மகால் உள்ளிட்ட நினைவுச்சின்னங்களைப் பார்க்க வந்த பார்வையாளர்கள் மூலம் கடந்த ஜனவரியில் மட்டும் 3 கோடியே 76 லட்சம் ரூபா டிக்கெட் கட்டணம் வசூலானது.

இதில் தாஜ்மகாலுக்குக் கிடைத்த வருமானம் 2 கோடியே 2 லட்சத்து 50 ஆயிரத்து 630 ரூபா. ஆக்ராவில் உள்ள தாஜ்மகால், கோட்டை, பதேபூர் சிக்ரி, இதிமத் - உத் - தவுலா, ராம்பாக், மெதாப்பாக், அக்பர் மற்றும் மரியம் நினைவிடங்கள் உள்ளிட்ட நினைவுச் சின்னங்களைப் பார்க்க தினசரி ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இந்த நினைவுச் சின்னங்களைப் பார்ப்பதற்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இவ்வாறு வந்த சுற்றுலா பயணிகள் மூலம் கடந்த 2008 ஆம் ஆண்டு 26 கோடியே 8 லட்சத்து 88 ஆயிரத்து 310 ரூபாவும் 2009 ஆம் ஆண்டு 29 கோடியே 37 லட்சத்து 62 ஆயிரத்து 295 ரூபாவும், 2010 ஆம் ஆண்டு 43 கோடியே 46 ஆயிரத்து 82 ஆயிரத்து 110 ரூபாவும் நினைவுச் சின்னங்களின் மூலம் வருமானம் கிடைத்தது.

இந்த நினைவுச் சின்னங்களைப் பார்க்க வந்த சுற்றுலா பயணிகளிடம் இருந்து, கடந்த ஜனவரியில் 3 கோடியே 76 லட்சத்து 65 ஆயிரத்து 430 ரூபா வசூலானது.

## 491 கோடி சொத்து குவித்த 5 உயர் அதிகாரிகள்

ஐ.ஏ.எஸ். முன்னைநாள் அதிகாரிகளான அரவிந்த் ஜோஷி, டினு ஜோஷி, ராஜேஷ் ரஜோரா, பி.எல்.அகர்வால், வனத்துறை அதிகாரி ஆர்.கே. சின்கா ஆகியோர் மொத்தம் ரூ.491 கோடி சொத்து குவித்து இருப்பதாக மத்திய நிதி அமைச்சகத்திடம் வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

அவர்கள் பெயரில் உள்ள நிலம் மற்றும் வீடுகளின் மதிப்பு, இதில் சேர்க்கப்பட வில்லை.

இவர்களில், அகர்வால் தன்னிடம் வேலை பார்க்கும் வேலைக்காரர்கள் பெயரில் 220 வங்கி கணக்குகளை ஆரம்பித்து, அதில் பணம் சேமிப்பில் இட்டு வைத்திருப்பதாக வருமான வரித் துறை கூறியுள்ளது.

## சாதனைக்கான விளக்கம்...



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, இந்திய விஞ்ஞானிகள் சமீபத்தில் விண்வெளிக்கு அனுப்பிய அட்வான்ஸ்ட் ரிமோட் சென்சிங் சேட்லைட் ரிசோர்ஸ் சாட்-2 விண்கலம் தொடர்பாக டில்லியில் விளக்கம் அளிக்கின்றனர்.

## ரயில் தடம்புரண்டதில் 25 பேர் காயம்

மத்தியப் பிரதேச மாநிலம் விதிஷா அருகே மும்பை - பிர தாப்கர் உத்யோக் நாக்ரி எக்ஸ் பிரஸ் ரயிலின் 6 பெட்டிகள் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 25 பயணிகள் காயமடைந்தனர்.

சௌராய் மற்றும் சுமெர் நிலையங்களுக்கு இடையே நேற்றுமுன்தினம் காலை 6.20 மணியளவில் அந்த ரயில் தடம் புரண்டதாக மண்டல ரயில்வே மேலாளர் ஹன்ஷியாம் சிங் தெரிவித்தார்.

இந்த விபத்தில் 25 பயணி கள் காயமடைந்தனர் என ரயில்வே பொலிஸ் ஐஜி அர் ஜாரியா தெரிவித்தார். எனினும் 12 பேர்தான் காயமடைந்ததா கவும், அவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் மத்திய ரயில்வே செய்தித்தொடர்பாளர் அனில் குமார் சக்சேனா தெரிவித்தார்.

விபத்து நடந்த இடத்துக்கு மருத்துவக் குழு ஒன்று உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் காயமடைந்த அனைவரும் அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இந்த விபத்துக் காரணமாக போபாலை தில்லியுடன் இணைக்கும் ரயில் பாதையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# இந்தியாவில் தாக்குதல்களை நிறைவேற்றியது பாகிஸ்தான் இராணுவமும் ஐ.எஸ்.ஐயுமே!

## அம்பலப்படுத்துகிறது விக்கிலீக்ஸ்

வாஷிங்டன்,மே12

இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்டு நிறை வேற்றியது பாகிஸ்தான் இராணுவமும், அந்நாட்டு உளவு அமைப்புமான ஐ.எஸ்.ஐ.யும் தான் என்பது விக்கிலீக்ஸ் தகவலில் அம்பலமாகியுள்ளது.

குவாண்டனமோ சிறைக் கைதிகளிடம் அமெரிக்க அதிகாரி கள் விசாரணை நடத்தியுள்ளனர். அவற்றில் 779 விசாரணை அறிக்கைகளை விக்கிலீக்ஸ் இணையதளம் வெளியிட்டுள் ளது.

இந்தியாவில் தாக்குதல் நடத்த வேண்டிய இடத்தை பாகிஸ்தான் இராணுவம் தேர்வு செய்துள்ளது. பயங்கரவாதிகள் காஷ்மீருக்குள் ஊடுருவி குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியது, சிலரைக் கடத்திச் சென்றது, சிலரைக் கொன்றது போன்றவற்றை நிகழ்த்த ஐ.எஸ்.ஐ. ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளது என்று அமெரிக்க அதிகாரிகளிடம் கைதி ஒருவர் கூறினார் என ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதப் பயிற்சி முகாம்கள் நடைபெறுவது அமெரிக்காவுக்கு நீண்ட காலமாகவே தெரியும் என கைதிகள் பலர் கூறியுள்ளனர்.

இந்தியாவுக்கு எதிரான தாக்குதல்களில் தொடர்புடைய லஷ்கர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்த பலர் பாகிஸ்தானில் எவ்வாறு பயிற்சி பெற்றனர் என் பதும் விரிவாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியா, அல்ஜீரியா, பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் பயங்கரவாதச் செயல்களுக்குத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட விதம் பாகிஸ்தானில் பயிற்சி பெற்றது, இந்தியாவிலும், ஆப்கானிஸ்தானிலும் தாக்குதல் நடத்தியது குறித்து குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவில் இந்தியர்களைக் கொல்வதே லட்சியம் என லஷ்கர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்த அல்ஜீரிய நாட்டவரான [illegible] கூறியுள்ளார்.

பாகிஸ்தானிய கைதியான முகமது அன்வர் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள முசாபராபாத்துக்குச் சென்று அங்கு 1998 இல் 21 நாள்கள் பயிற்சி பெற்றுள்ளார். இவர் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளார்.

காஷ்மீரிலும், ஆப்கானிஸ்தானிலும் பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ள ஆப்கானைச் சேர்ந்தவரும், ஐ.எஸ்.ஐயுடன் தொடர்புடையவருமான சமன்குல் என்பவர், பாகிஸ்தான் இராணுவத்தில் பணியாற்றிய மேஜர் மஸ்த் குல் என்பவரைப் பற்றிய தகவல்களைக் கூறியுள்ளார்.

மேற்கத்திய நாடுகளில் இந்தியர்களை அதிகம் சோதனைக்கு உள்ளாக்குவதில்லை. எனவே, பயங்கரவாதச் செயல்களில் இந்தியர்கள் அதிகம் பேரை ஈடுபடுத்த வேண்டும் என அல் குவைதா தலைவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் என்று மற்றோர் அறிக்கை குறிப்பிடுகிறது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு வெகு அருகிலேயே வசித்து வந்த பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில், இப்போது வெளியாகியுள்ள விக்கி லீக்ஸ் தகவல்கள் பயங்கரவாதத்துக்கு பாகிஸ்தான் உறுதுணையாக இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 மே 2011 புதன்கிழமை

# புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்தபோதும் 'கோமாளித்தனம்' என அரசு நிராகரித்தது

## குழந்தைகளின் உணவுக்காக மன்றாடினர் பெற்றோர்கள்

111. பலதடவை ஆஸ்பத்திரி ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்ததால், வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியின் பிறிதோர் இடத்துக்கு சுகாதார பிராந்திய பணிப்பகம் இடம்பெயர்ந்தபோதிலும், அங்கு கூட தெளிவான அடையாளங்கள் இடப்பட்டிருந்த போதிலும், ஆஸ்பத்திரி இலங்கை இராணுவத்தின் ஷெல்லடித் தாக்குதலுக்கு ஆளாகி பலர் உயிரிழந்தனர். இரண்டாவது ஆஸ்பத்திரியிலும் நிலைமைகள் மோசமாக இருந்ததோடு, இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதல் காரணமாக சில ஆஸ்பத்திரி ஊழியர்கள் கொல்லப்பட்டார்கள்.

(44)

### 10. தமிழீழ விடுதலைப் புலிகளால் பொதுமக்கள் கொல்லப்படுதல் மற்றும் கட்டாய ஆள்சேர்த்தல்

112. இரண்டாவது யுத்த சூன்ய வலயத்தில் நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து தப்புவதற்காக அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் முயன்றபோது அதனை நிறுத்துவதற்கு மேலும் அதிக வன்முறைகளைத் தமிழீழ விடுதலைப்புலிகள் கடைப்பிடித்தனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் சில உறுப்பினர்கள் தப்பிச்செல்லும் பொதுமக்களைப் போகவிட்டபோது ஏனையோர் ஏகே 47 துப்பாக்கி கொண்டு அவர்களை நோக்கிச் சுட்டு ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் என பாரபட்சம் காட்டாமல் கொன்றனர். தப்பிச் செல்வதற்காக முனைந்த இடம்பெயர்ந்தோர் எப்படியாவது தப்பிச் சென்று இலங்கை இராணுவத்தினர் அணிகளைப் போய் அடைவதற்காக சூழந்தைகளையும் மற்றும் பொருள்களையும் தூக்கிக்கொண்டும் சில வேளைகளில் பயத்தினால் அவற்றைக் கீழே போட்டுவிட்டும் ஓடினர். சிலர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் சிலர் ஆழமற்ற நீரில் தடுமாறினர் அல்லது மிதிவெடிகளில் சிக்குண்டு படுகாயமடைந்தனர். சிறுவர்கள் மற்றும் சிலர் ஏரியில் மூழ்கி இறந்தனர். இவ்வாறு இறந்தவர்களின் எண்ணிக்கை தெரியாவிட்டாலும் அது கணிசமானதாக இருந்ததோடு யுத்தம் தீவிரமடைந்தபோது அவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தது.

113. புது அணியினரின் தேவை அதிகரிக்கவே, தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் அதன் பலவந்தமாக ஆள் சேர்க்கும் கொள்கையைத் தீவிரப்படுத்தி பாதுகாப்பு முன் அரண்களில் நிறுத்துவதற்காக இளைஞர்களையும் வயது குறைந்தோரையும் இழுத்துச் செல்ல ஆரம்பித்தனர். ஏப்ரல் நடுப்பகுதியில் ஒரு சந்தர்ப்பத்தின் போது, முன்னாள் திருகோணமலை அரசியல் துறைத் தலைவரான எழிலனின் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நூற்றுக் காணக்கான இளைஞர்களை வலைஞர்மடம் கோயிலில் இருந்து நிர்ப்பந்தமாக அணியில் சேர்த்து முள்ளிவாய்க்காலுக்கு அவர்களை பேருந்துகளில் அழைத்துச் சென்றனர். பெற்றோர் தம் பிள்ளைகளை யுத்தத்துக்காக அழைத்துச்செல்ல வேண்டாம் என அழுது மன்றாடிய போதிலும் அது பயனளிக்கவில்லை.

114. ஏப்ரல் 26 ஆம் திகதி ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் ஒன்றைத் தமிழீழ விடுதலைப்புலிகள் பிரகடனப்படுத்திய போதிலும் அதனை ஒரு 'கோமாளித்தனம்' என அரசு நிராகரித்துவிட்டது. 2009 ஏப்ரல் 27 ஆம் திகதி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துவிட்டதாகவும் கனரக ஆயுதங்களின் பாவனையை நிறுத்துவதாகவும் இரண்டாவது தடவையாகவும் அரசு அறி வித்தது. 2009 மே 8 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் இரண்டா வது யுத்த சூன்ய வலயத்தின் தெற்கில் மிகச் சிறிய பிரி வொன்றை மூன்றாவது யுத்த சூன்ய வலயமாக அரசு பிரகடனப்படுத்தியது.

### 11. இறுதி நாள்களில் இலங்கை இராணுவத்தின் ஷெல் வீச்சு (மே 13-18)

115. மே 13 ஆம் திகதி, 58 ஆவது படை அணி கிழக்குத் திசையில் இருந்து தெற்கு நோக்கி முன்னேறுவதற்காக அதன் பயணத்தைத் தொடர்ந்ததோடு, 53 ஆம் படைப்பிரிவு ஏரியை நோக்கி ஏ35 வீதியினூடாகக் கிழக்கு நோக்கி முன்னேறியது. 55 ஆவது படைப் பிரிவின் அணியினர் புதுமாத்தளனில் இருந்து மேலும் தெற்கு நோக்கிப் படையெடுத்தனர். அத்தருணத்தில், அரசு 10 ஆயிரம் பேர்கள் மாத்திரமே அங்கு இருந்தனர் எனக் கூறிய போதிலும், மூன்று சதுர கிலோமீற்றர் பகுதியொன்றில் ஒரு லட்சம் பொதுமக்கள் சிக்குண்டிருந்தனர் என ஐ.நா.மதிப்பீடு செய்கிறது.

(45)

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 11**

116. யுத்தத்தின் இறுதி நாள்களில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் எண்ணிக்கை அதிக அளவில் அதிகரித்தது. வெள்ள முள்ளிவாய்க்கால் ஆஸ்பத்திரியில், இரத்தம் கசியும் பலத்த காயங்களுடன் நூற்றுக்கணக்கான நோயாளிகள் தரையில் படுத்திருந்தனர். கடும் நோய் வாய்ப்பட்டவர்களுக்கிடையே இறந்தவர்களும் காணப்பட்டனர். நோயாளிகளைக் கவனித்து வந்த உறவினர்களும் கூட உணவுச் சக்தின்றி நலிந்து போயிருந்தனர்.

### 9. இரண்டாவது யுத்த சூன்ய வலயத்தில் பொதுமக்கள் மரணங்கள், (மூலம்: மே 2009 குழுவுக்குப் புகைப்படப்பிடிப்பாளர் சமர்ப்பித்தது)

117. ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்து எதுவித மீட்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத அளவுக்கு மூன்றாவது யுத்த சூன்ய வலயத்தில் ஷெல் தாக்குதல் இருந்தது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சிக்குண்டிருந்த போதிலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் பதுங்கியிருந்த இடங்களை நெருங்க நெருங்க இலங்கை இராணுவத்தின் தாக்குதல் ஒரு புது மட்டத்திலான தீவிரத்தை அடைந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத்துவமோ தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தற்கொலைத் தாக்குதல்களை உள்ளிட்ட உயிர்துறக்கும் தாக்குதல்களில் தம் உறுப்பினர்களை ஈடுபடுத்தினர்.

118. மூன்றாவது யுத்த சூன்ய வலயத்தின் இடநெருக்கடி காரணமாகப் பல பக்கங்களில் இருந்துவரும் ஷெல் வீச்சுக்களில் இருந்து தப்புவதற்காகப் பொதுமக்களுக்கு எந்தவொரு மறைவிடமும் இருக்கவில்லை. ஷெல் வெடிகள் சரமாரியாகப் பொழிந்ததோடு வேட்டுக்கள் பறந்துகொண்டிருந்தன. பலர் இறந்ததோடு, எதுவிதப் பதிவுமின்றி அவர்கள் ஆங்காங்கே புதைக்கப்பட்டார்கள். கரும்புகையும் சடலங்களில் இருந்து வரும் வாடையும் காற்றில் நிறைந்திருந்தது. சிலர் தம் குழந்தைகளின் உணவுக்காக அல்லது காயமுற்ற மற்றும் குற்றுயிராகக் கிடப்பவர்களுக்கு உதவி கோரி மன்றாடிக் கொண்டிருந்தார்கள். அந்தக்காட்சி நரகத்தை ஒத்ததாக இருந்தது.

(46)

119. காயமடைந்தோர் மற்றும் இறந்தவர் பற்றிக் கவனிப்பதற்காக ஷெல் தாக்குதலை நிறுத்துமாறு உதவி அரச அதிபரும் வைத்தியர்களும் பல முறை அவசரத் தொலைபேசி அழைப்புக்களை விடுத்த போதிலும், இலங்கை இராணுவம் எந்தவொரு பதிலையும் அளிக்கவில்லை. 2009 மே 14 ஆம் திகதிக்குப் பின்னர், ஷெல் வீச்சின் கடுமை காரணமாக வைத்தியர்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்ல முடியவில்லையாதலால் அதனை மூட வேண்டியேற்பட்டது. அகற்றப்பட முடியாத பல நோயாளிகள் அங்கு அப்படியே கைவிடப்பட்டனர். உயிர் பிழைத்த அனைவரும் கிடைக்கக்கூடிய பாதுகாப்பான இடங்களில் முடங்கியிருந்தனர். உணவு சமைப்பது முடியாத காரியமாக இருந்ததோடு, மலசலம் கழிக்க வெளியே போனால் கூட உயிருக்கு ஆபத்து நேரும் நிலையே இருந்தது. சில பொதுமக்கள் கூட்டமாக வெளியேற முயன்றபோது தமிழீழ விடுதலைப்புலிகள் அவர்களை நோக்கிச் சுட்டு ஷெல் வெடிகளை ஏவினர். தப்பியோடியவர்களை தனித் தனி இலங்கை இராணுவவீரர்கள் பாதுகாப்பாகச் செல்ல உதவினர்.

120. மே 15 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் தம் தொடர்பாடல் சாதனங்களைத் தகர்த்து நொருக்கினர். மே 16 ஆம் திகதி பெரியதோர் அதிர் வெடி தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசத்தைக் குலுக்கியதோடு பல இடம் பெயர்ந்த மக்களின் குடிசைகள் நெருப்பினால் அழிந்தன.

அதேதினம் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது மற்றும் 59 ஆவது படைப் பிரிவுகள் கரையோரத்தில் இணைந்தன. அப்போது இராணுவக் கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான வெற்றி யைப் பிரகடனப்படுத்தினார். 53 ஆவது படைப்பிரிவு தெற்கு நோக்கி அதன் பயணத்தை நந்திக் கடல் ஏரியினூடாகத் தொடர்ந்தது.

உயர் பீடத் தலைவர்கள் பலரை உள்ளிட்ட தமிழீழ விடுதலைப்புலி களில் எஞ்சியிருந்தவர்கள் மற்றும் சுமார் 250 உறுதியான போராளிகள் வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியில் சுமார் 3 சதுர கிலோமீற்றர் பிரதேச மொன்றில் சுற்றி வளைக்கப்பட்டனர். முடிவு நெருங்கிவிட்டது. அந்தத்தலைவர்கள் பலரின் மரணங்களைச் சூழ்ந்த நிலைமைகள் சர்ச்சைக்குரியதாகியுள்ளது.

121. 2009 மே 18 ஆம் திகதி, யுத்த சூன்ய வலயத்தில் இருந்து தப்பியோட முயன்றபோது பிரபாகரன், சூசை மற்றும் பொட்டு அம்மான் ஆகியோர் கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறின. சார்ள்ஸ் அன்ரனி, நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோரும் இறந்தவர்களுள் அடங்கினர். பிரபாகரன் மற்றும் அவரின் நெருங் கிய சகாக்கள் கொல்லப்பட்டார்கள் என மே 19 ஆம் திகதி இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்ததோடு, அவர்களின் சடலங்கள் தொலைக் காட் சியினூடாகவும் காண்பிக்கப்பட்டன. சடலங்களின் பல புகைப்படங்கள் பின்னர் வெளியாகின. தமிழீழ விடுதலைப் புலிகள் மீது கிடைத்த வெற்றியைப் பிரகடனப்படுத்தி அதே தினம் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தினார்.

122. மே 16 மற்றும் 19 ஆம் திகதிகளுக்கிடையே, வலயத்தில் சிக்குண்டிருந்த எஞ்சியிருந்த பொதுமக்கள் கரையோரப்பகுதியில் இருந்து தெற்கே வட்டுவாய்க்கால் பாலத்தைக் கடந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கிச் சென்றனர். ஷெல் வெடிகள் தொடர்ந்ததோடு, (தமிழீழ விடுதலைப்புலிகளின் அழிக்கப்பட்ட, ஆயுதக் குவியல்கள் உள்ளிட்ட) பெரும் சுவாலை நெருப்புக்கள் எரிந்து கொண்டிருந்தன. சடலங்கள் எல்லா விடத்திலும் சிதறிக் கிடந்ததோடு, வழியில் வீழ்ந்திருந்த காயமுற்றோர் நடக்கக் கூடியவர்களிடம் உதவி கேட்ட போதிலும் அவர்களுக்கு உதவ முன்வருவோர் அரிதாகவேயிருந்தனர். பாசமுள்ள இறந்த உறவினர்களைக் கட்டியணைத்துக் கொண்டிருந்தவர்களை இழுத்துச் செல்லவேண்டியிருந்தது. எங்குமே மரண வாடை வீசிக்கொண்டிருந்தது.

(47)

123. 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி வன்னியில் ஆயுதந் தரித்த யுத்தத்தின் முடிவைக் குறித்தது. 'கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத அளவிலான மனிதாபிமான அவலத்தில்' இறுதி நாள்கள் முடிவடைந்தது என்பதாக ஐ.சி.ஆர்.சி. குறிப்பிட்டது.

### ஈ. மனிதாபிமான உதவியை நிராகரிப்பதற்காக இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை பற்றிச் சர்ச்சை எழுப்பல்

124. யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் முழுவதிலும், குறிப்பாக 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை, தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்த பொதுமக்கள் எண்ணிக்கையைக் குறைவாகக் காட்டி, மனிதாபிமான உதவிகளைக் குறிப்பாக உணவு மற்றும் மருந்து வகைகளில் அளவைக் குறைப்பதற்காகக் குறைந்த மதிப்பீட்டை அரசு பிரயோகித்தது.

125. இறுதிக் கட்டத்தின் ஆரம்பத்தில், 2009 ஜனவரி 13 ஆம் திகதி, சுயாதீன மதிப்பீடுகளின்படி வன்னிப் பிரதேசப் பொதுமக்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் 2லட்சத்து 50 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட தாக இருந்தது என அரச இணையத் தளம் தெரிவித்தது.

ஆரம்பத்தில் ஐ.நா.வின் மதிப்பீடு 2 லட்சத்து 50 ஆயிரமாக இருந்தது. (பின்னர் அந்த மதிப்பீடுகள் அதிகமாக இருந்த போதிலும்). பின்னர் 2009 ஜனவரியில், வன்னியில் இருந்த பொதுமக்கள் எண்ணிக்கை 75 ஆயிரத் துக்கும் கூடிய மதிப்பீட்டின் படி ஒரு லட்சத்துக்கும் இடைப்பட்டதாக இருந்தது என பாதுகாப்பு அமைச்சு கூறியது. ஆயினும், வன்னியில் இருந்த பொதுமக்களின் சரியான எண்ணிக்கையை பிழையற்ற முறையில் மதிப்பீடு செய்வதற்கான போதிய அளவை விஞ்சிய தகவல் அரசு வசம் இருந்தது. ஒவ்வொரு மாதமும் உலக உணவுத் திட்டத்தில் இருந்து உலர் உணவுப் பங்கீடுகளைக் கோருவதற்காக அரச அதிபர்கள் ஐ.டி.பி யினர் பற்றிய தரவுகளை ஒப்பிட்டுப் பார்த்து வந்துள்ளனர். 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்கு முன் அச்சமயம் தமிழீழ விடுதலைப் புலி களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுமார் 4 லட்சத்து 20 ஆயிரம் பொதுமக்கள் இருந்தார்கள் என்று முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி அரச அதிபர்களினால் தொகுக்கப்பட்ட எண்ணிக்கைகள் குறிப்பிட்டன. இவ்வெண்ணிக்கைகள் அதிகரித்துக்காட்டப்பட்டிருக்கலாம் என்றிருந்த போதிலும், ஐ.நா. சிறுவர் நிதியத்தின்படி, வன்னியில் பதிவு செய்யப்பட்டிருந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 70 ஆயிரமாக, அதாவது அரசின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கைக்குச் சுமார் சமமானதாக இருந்தது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உயரதிகாரிகள் குழு நேற்று யாழ்.வந்தது

## மைதானங்களையும் நேரில் பார்வையிட்டது

யாழ்ப்பாணம், மே 11

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சிக்குச் சென்ற இந்தக் குழுவினர் கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ஜோய் பியசீலன் தலைமையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

கலந்துரையாடலின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் உதைபந்தாட்டத்தின் வளர்ச்சி தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் எஸ்.ரவீந்திரன், கல்லூரி உதைபந்தாட்ட மைதானத்தைப் புனரமைத்துத் தருமாறு குழுவினரிடம் வேண்டுகோள்விடுத்ததுடன் அதற்கான முன்மொழிவையும் சமர்ப்பித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் உறுப்பினர்கள், லீக்கின் அங்கத்துவக் கழகங்களின் பிரதிநிதிகள் பங்குகொண்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இந்தக் குழுவினர் இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் ''கொல்சிம் எவ்.ஏ' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி குறித்து ஆராய்ந்தனர்.

அதன் முதலாவது அரையிறுதியாட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான முன் ஆயத்தங்களை மேற்கொள்வதற்காக யாழ். துரையப்பா விளையாட்டு மைதானம், சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் மைதானங்களை நேரடியாகச் சென்று இந்தக் குழு பார்வையிட்டது.

போட்டிக் குழுத் தலைவர் ஆனந்அன்ரனிப்பிள்ளை, செயலாளர் அன்ரன் தங்கேஸ்வரன், ஊடக இணைப்பாளர் றுக்மன் பெரேரா, இளைஞர் அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் மகிந்த பாலா, யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலை வர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, செயலாளர் மு. பிரான்சிஸ் இதில் கலந்து கொண்டனர். (த-23)



# கற்சிலைமடு அ.த.க. சம்பியன்

முல்லைத்தீவு,மே11

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் கல்விக் கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டத்தில் 19 வயது ஆண்கள், பெண்கள் பிரிவுகளிலும் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை சம்பியனாகியது.

மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்துடன் 2:1 என்ற கோல் வித்தியாசத்தில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை வெற்றிபெற்று 19 வயதுப் பிரிவு சம்பியனாக கற்சிலைமடு அ.த.க. பாடசாலை தெரிவானது. கற்சிலைமடு அணிக்கான இரண்டு கோல்களையும் டினேஸ் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

3ஆம் இடத்துக்கான போட்டியில் யோகபுரம் மகாவித்தியாலயத்தை வீழ்த்தி பாலிநகர் மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றது.

மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யோகபுரம் மகாவித்தியாலயத்தை எதிர்கொண்டு 4:2 என்ற கோல் கணக்கில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை சம்பியனாகியது. இப் போட்டியில் 3ஆம் இடத்தைப் பாலிநகர் மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது. (ஒ-26)

# அரைகுறை நிலையில் நெடுந்தீவு மைதானம்

நெடுந்தீவு மணல்தறையில் அமைக்கப்பட்ட விளையாட்டு மைதான வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக கவனிப்பாரின்றி இருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விளையாட்டு மைதானத்தின் மதில்கள் கட்டி முடிக்கப்படாமலும், சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்படாத நிலையிலும் உள்ளன. இது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த மைதானத்தை விரைவில் உரிய முறையில் அமைத்து பயன்பாட்டுக்கு விடவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனைத் திருத்தியமைக்க மேலும் ரூபா 2 லட்சம் வரை தேவைப்படும் எனவும் ரூபா 4 லட்சம் செலவில் தற்போதைய வேலைகள் நடைபெற்றுள்ளதாகவும் கூறப்பட்டது. (த-7)

# வட மாகாண விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 11

வட மாகாண விளையாட்டு விழாவின் பெருவிளையாட்டுக்கள் எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவில் ஆரம்பமாகின்றன.

இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டம் ஹொக்கிப் போட்டிகள் வவுனியாவில் இடம்பெறவுள்ளன என வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலைகளின் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை.
* சாவகச்சேரி மகளிர் கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.
* கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி.
* நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
* வடமராட்சி சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம்.
* கோப்பாய் மத்திய மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் மகளிர் கல்லூரி.(த-86)

# மல்லாகத்தில் மென்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 11

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட ஆண், பெண்களுக்கான மென்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி மல்லாகம் கிராமமுன்னேற்றச் சங்க மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பெண்களுக்கான மென்பந்தாட்டப் போட்டியும் எதிர்வரும் 18ஆம் திகதி அதே மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ஜ-23)

# கரப்பந்தாட்டம் மல்லாகம் ம.வியில்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப் பிரிவுகளின் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதேவேளை 19 வயதின் கீழ் பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

# பாலிநகர் ம.வியை 3 விக்கெட்டுக்களால் வென்று சம்பியனானது கற்சிலைமடு

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் கல்வி கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டியில் பாலிநகர் மகா வித்தியாலயத்தை வீழ்த்தி கற்சிலைமடு அ.த.க. பாடசாலை சம்பியனானது.

மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கற்சிலைமடு அ.த.க. பாடசாலை பாலிநகர் மகா வித்தியாலயத்துக்கு முதலில் துடுப்பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கியது.

10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட இக் கிரிக்கெட் போட்டியில் பாலிநகர் மகாவித்தியாலம் 9.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உமாகாந் 11 ஓட்டங்களையும் அபிநாத், ஜெயசாந் ஆகியோர் முறையே 9, 7 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை சார்பில் சஞ்சீவன் 3 விக்கெட்டுக்களையும் பிரசாந், குணசாந், டினேஷ் என்போர் தலா 2 விக்கெட்டுக்களையும் சசிகரன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கற்சிலைமடு அ.த.க. பாடசாலை 8.2 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 49 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட் வித்தியாசத்தில் இந்தப் போட்டியில் வெற்றிபெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதில் பிரசாந் 13 ஓட்டங்களையும் சசிகரன், முகுந்தன் ஆகியோர் தலா 7 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் கெரிகன் 2 விக்கெட்டுக்களையும், கோபிகன் 1 விக்கெட்டையும் பாலிநகர் மகா வித்தியாலயம் சார்பில் பெற்றுக் கொடுத்தனர்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரியை வீழ்த்தி யோகபுரம் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இந்த மூன்று அணிகளும் 12 ஆம் திகதி முழங்காவில் வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெறும் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளன. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பில் உள்ள ஆசிரியரின் வேதனம்

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாகக் கடமை யாற்றி தற்காலிகமாக யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் கடமை யாற்றும் ஆசிரியர்களின் வைகாசி மாத வேதனப்பட்டியல் யாழ். கல்வி வலய நிதிக்கிளைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் வேதனப்பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.


**UK STUDENT VISA புதிய நடைமுறையில்**




இறுதியாக சென்ற மாணவர்களுடன் நீங்களும் இணைய இருக்கிறீர்களா?

STUDY IN UK

UK, Student Visa மிகநேர்த்தியாக பல வருடகால அனுபவம் வாய்ந்த ஆலோசர்களை கொண்ட புதிய நடைமுறையில் IELTS அவசியமான, அவசியமற்ற நடைமுறைகளில் Student Visa களை பெற்றுக்கொள்ள,
1வருடகால, 3வருடகால, 4வருடகால விசாக்களை பெற்று லண்டன் பயணம் செய்ய நாட வேண்டிய ஓரே இடம்.

**EUROPEAN COLLEGE OF HIGHER STUDIES**

ECHS

JAFFNA : Paramashwara Junction, Palay Road, Jaffna.
Tel: 021 3734747 Mob: 077-6327623
E-mail: asmy_echs@yahoo.com

COLOMBO : 190, Grand Pass Road, Colombo - 14
Tel: 011-4366331 Mob: 077-6327623
E-mail: asmy_echs@yahoo.com






சீட்டிழுப்பு இலக்கம் 748 திகதி 09-05-2011

வெற்றி எண்கள்

**06 10 22 29 R**

ஜக்பொட் பரிசு ரூ. 10,516,180/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,516,180/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 2,000/= | 38,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 432 | 1,000/= | 432,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 690 | 1,000/= | 690,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 17459 | 60/= | 1,047,540/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8180 | 40/= | 327,200/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 204827 | 20/= | 4,096,540/= |
| | | மொத்தம் ரூ. | 7,431,280/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| நுவரேலியா | 601041785-0-40 |
| வவுனியா | 601057922-9-19 |
| களுத்துறை | 601051348-5-45 |
| அம்பாறை | 601041616-0-30 |
| கம்பஹா | 601044911-8-08 |
| காலி | 601052431-8-48 |
| பதுளை | 601050092-1-41 |
| கம்பஹா | 601057062-1-21 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,831,280/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 11,070,250/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 மே 12 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள், 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## மிதிவெடி அகற்றும் வேளை அது வெடித்ததில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், மே 11

'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை மிதிவெடி ஒன்று தவறுதலாக வெடித்ததில் காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த வெடிப்புச் சம்பவம் நாகர் கோயில் பகுதியில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் மூளாயைச் சேர்ந்த சிவனேசன் நிஷாந்தன் (வயது22) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ஓ-4-131)

## சாரதி லைசென்ஸ்; கிளிநொச்சியில் எழுத்துப் பரீட்சை

கிளிநொச்சி மாவட்டச் செயலக மூடாக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்த (சுட்டி லக்கம் 3200 வரையிலான) பரீட்சார்த்திகளுக்கான எழுத்துப் பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கரைச்சி உதவி அரச அதிபர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

அத்துடன் 2011 ஆம் அண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதியிலும் அதற்கு முற்பட்ட திகதிகளிலும் இடம்பெற்ற எழுத்துப் பரீட்சை களில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்த பரீட்சை நாளை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பரீட்சார்த்திகள் தமக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுடன் உரிய நேரத்துக்கு சமுகம் தருமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)


**பெண் வேலையாள்கள் தேவை**

போன் சொப் ஒன்றுக்கு கணினி அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு: நான்ஜா போன் அன் வோச்
274, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்,0774540796

**நியூ லிசன் ஒப்டிக்கல்**

விசேட சலுகை அடிப்படையில் மூக்குக் கண்ணாடி விநியோகம்.
பிறேம் லென்ஸ் உட்பட 3500/= மட்டுமே
தொடர்புகளுக்கு: 0212229987

**தவறிவிட்டது**

மீசாலை கிழக்கு எனும் முகவரியைச் சேர்ந்த வரேந்திரன் பிரகாஸ் ஆகிய எனது விசேட அடையாள அட்டை மற்றும் எனது கையொப்பத்துடன் கூடிய வெற்று வெள்ளை நிற A4 பேப்பர் மற்றும் சில முக்கிய ஆவணங்களுடன் சிறிய கைப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் "நகுலேந்திரா பல்பொருள்வாணிபம்" அல்லாரை வீதி, மீசாலை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
T.P.: - 0758962049

**கடைகள் விற்பனைக்கு**

பண்டத்தரிப்பு சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள (NNR) கடைத் தொகுதி (மூன்று மாடிக் கட்டடம்) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0771726564.

**உடனடி வேலையாள் தேவை**

Secretary பெண். (18 - 30வயது)
தகுதி - O/L , A/L சித்தி
ஆங்கிலம் மற்றும் Computer தெரிந்தவர் விரும்பத்தக்கது. கீழ் உள்ள விலாசத்துக்கு போட்டோ, தொலைபேசி இலக்கம் அடங்கிய சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்.
360/7, கத்தலிக் பிறஸ்ற்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



**Computer Express**
**Institute of Information Technology**

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

20-05-2011 வரை மட்டுமே

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

Batch I - 11.05.2011 9Am or 3pm Batch II - 13.05.2011 9Am or 3pm
Batch III -14.05.2011 11Am or 2pm Batch IV -15.05.2011 11Am or 2pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனி பயிற்சி
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Fast track Tally 17.05.2011
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன 18.05.2011

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
02
★
07
★
1942



மறைவு
11
★
05
★
2009

அமரர் முருகர் சண்முகம்

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
ஆறாது எம் மனது
ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கும்.

ஸ்ரேசன் வீதி
கோண்டாவில். (4065)

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29
★
10
★
1992



மறைவு
03
★
05
★
2009

அமரர் சிவலிங்கம் ஜனோசன்
திதி: 11.05.2011

அன்புச் செல்வம் அண்ணாவே.
அன்புக்கு ஓர் ஆலயமாய் வாழ்ந்த
எங்கள் அன்பு மகனே.
வாழ்க்கைப் பாதையில் எம்முடன் கூடப்
பிறந்த அன்புச் சகோதரனே.
பண்பிலும் குணத்திலும் மாணிக்கமாய்
வாழ்ந்தவனே.
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் உம்
நீங்கா நினைவுகள் என்றும் எம்மை விட்டு
மாறாது.

சி.சிவலிங்கம் (கிலி) நவாலி வடக்கு.
மகேசன் வீதி, மானிப்பாய். (4048)

அன்பின் நினைவுடன்
குடும்பத்தினர்.




**அன்புடன் வரவேற்கின்றோம்**

இன்று (11.05.2011) புதன்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு வருகைதரும்
**CHEVRON LUBRICANTS LANKA PLC** நிறுவனத்தின் மேலாண்மைப் பணிப்பாளர்
**Mr.KISHU GOMES** அவர்களை வருக வருக என வரவேற்பதில்
பெருமகிழ்வடைகின்றோம்.

...,கே.கே.எஸ்.வீதி,சுன்னாகம்.

CALTEX

(4068) (20,22)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் நிறுத்தக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கசிந்தன என 'விக்கிலீக்ஸ்' குறிப்பிட்டுள்ளது.

அவற்றில் சில முக்கியமான விடயங்கள் கீழே தரப்படுகின்றன:-

அரச படைகள் மூர்க்கத்தனமான முறையில் போரைத் தொடருமானால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பலியாக நேரிடும். அது சர்வதேச கண்டனங்கள், சர்வதேச யுத்த விதிகள் மீறல் ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கும் வழிவகுக்கும் என்று அன்றைய அமெரிக்காவின் இலங்கைத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் 2009 மார்ச் மாதம் இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சருடனான சந்திப்பின்போது எச்சரித்திருந்தார்.

அதேவேளை, போரில் விடுதலைப் புலிகளின் தோல்வி உறுதிசெய்யப்பட்டு விட்டது என்றும் அழிவு ஏற்படுவதற்கு முன்னர் சரணடையுமாறும் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த ஒரேயொரு மேற்குலக நாடான நோர்வே விடுதலைப்புலிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால், விடுதலைப் புலிகள் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

''குருதி சிந்தப்படுவதைத் தடுப்பதற்கு நாங்கள் முழுமூச்சாகச் செயற்பட்டோம். எங்களால் முடிந்ததைச் செய்ததாக நாம் உணர்கின்றோம். எனினும், அவற்றையும் தாண்டி பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதைப் பார்க்கும்போது விரக்தியாக இருந்தது'' என இலங்கைக்கான அன்றைய நோர்வே தூதுவர் டோர் ஹெட்ரம் தெரிவித்திருந்தார்.

2009 மே மாதம் போர் வலயத்திற்குள் பொதுமக்கள் எவருமே இல்லை என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்தது. அந்தக் கூற்று உண்மையல்ல. பல்லாயிரக் கணக்கில் பொதுமக்கள் உயிராபத்துக்குள் சிக்கியிருந்தனர்.

இவற்றை எடுத்துரைக்கும் பல்வேறு அறிக்கைகள் அமெரிக்கத் தூதுவருக்குக் கிடைத்துள்ளன. இதனையடுத்து அழிவுகளைத் தடுக்கும் நோக்கில் இலங்கை அரசின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பிளேக் தொடர்புகொண்டார்.

காயப்பட்டவர்களையும், இறந்தவர்களையும் வெளியில் எடுத்து வருவதற்கான அனுமதியை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவுக்கு வழங்குமாறு றொபேர்ட் பிளேக் கோரிக்கை விடுத்த போதும் அவ்வாறு செய்ய முடியாது என பஸில் ராஜபக்ஷ கடுந்தொனியில் பிளேக்கிடம் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று விடுதலைப்புலிகள் சரணடைவதற்குத் தயாராக இருக்கின்றனர் என்றும் செஞ்சிலுவைப் பிரதிநிதிகளை அப்பகுதிக்கு ஹெலிக்கொப்டர்களில் அனுப்புங்கள் என்றும் கோத்தபாய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போது அதற்கான நேரம் தாண்டிவிட்டது என அவர் பதிலளித்தார்.

அழிவைத் தடுப்பது தொடர்பாக கொழும்பிலிருந்த இராஜதந்திரிகள் கொண்டிருந்த கருத்தையே உலகெங்கும் பலரும் கொண்டிருந்தனர். இவர்களில் நோர்வே வெளியுறவு அமைச்சகத்தின் தலைவர் ஜோன் எக்லண்டும் ஒருவர்.

மேற்கண்டவாறாக இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் கடைசி மாதங்களின் நிகழ்வுகளை திகதிவாரியாக 'விக்கிலீக்ஸ்' வெளியிட்டுள்ள தகவலை நோர்வேயின் ஊடகம் விலாவாரியாக தொகுத்து வெளியிட்டுள்ளது. (உ-சி)

## நிபுணர் குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் அளித்த அமைச்சர் பீரிஸ், நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பதில் அளிக்கப் போவதில்லை என்ற அரசின் இறுதி முடிவு பற்றித் தெளிவுபடுத்தினார்.

''தருஸ்மன் அறிக்கைக்குப் பதில் அளிப்பதை விடுத்து, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செய்யும் நற்பணிகள் குறித்தும் யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசு செய்துவரும் மனிதாபிமானப் பணிகள் குறித்தும் ஆதாரபூர்வமான அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபைக்கு அதன் செயலாளர் நாயகம் ஊடாக அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகிறோம்'' என்றார் அமைச்சர். தருஸ்மன் அறிக்கை ஒரு தலைப்பட்சமான அறிக்கை என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

இந்த அறிக்கை குறித்து இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு பீரிஸ் பதில் அளிக்கையில், ''நாம் இந்தியாவுடன் பேசி வருகிறோம். இந்தியா எங்களுக்கு எதிராகச் செயற்படவில்லை'' என்றார். (உ-சி)

## ஜனாதிபதியின் செய்தியுடன் வந்த அமைச்சர் பஸில்

''நாட்டின் எப் பகுதியிலும் பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இல்லை; சமாதான வலயங்களே உள்ளன.'' - ஜனாதிபதியின் இந்தச் செய்தியுடனேயே தாம் இங்கு வந்துள்ளார் என்று நேற்றுமுன்தினம் வலி.வடக்கில் இடம்பெற்ற மீள் குடியமர்வு நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

எனினும் இந்தச் செய்தி நேற்றைய 'உதயன்' தலைப்புச் செய்தியில் நாட்டின் எந்தப் பகுதியிலும் பாதுகாப்பு வலயம் என்று ஒன்று இல்லை; சமாதான வலயங்களே இல்லை'' என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம். (ஆ-ர்)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வைக்கும் நியாயமான கோரிக்கைகளை நான் செவிமடுத்து செயற்படுத்த முயற்சிப்பேன். ஆனால் புலிகளுக்குத் தேவையானவற்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எந்தக் கட்சி முன்வைத்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களின் சரியான எண்ணிக்கை இதுவரை தெரியாது. எவரிடமும் அந்தப் புள்ளி விவரம் இல்லை. வடக்கில் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக நாம் அடையாள அட்டைகளை அப்பகுதி மக்களுக்கு விநியோகிக்க முயற்சித்தோம். அப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வேறு சில அமைப்புகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

இதனால் அத்திட்டத்தை செயற்படுத்த முடியாமல் போனது. அதனை நாம் செய்து முடித்திருந்தால் அப்பகுதியில் இன்று எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதை எம்மால் கண்டுகொள்ள முடிந்திருக்கும்.

1980 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பே இன்றும் வடபகுதியில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே புதிய வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்ட பின்பே வடமாகாணசபைக்கான தேர்தல் நடத்தப்படும்.

போரின் போது இலங்கை இராணுவத்தினர் வெளிநாட்டவர்களுடன் போரிடவில்லை. எமது நாட்டவர்களுடனேயே போரிட்டார்கள். அதனால்தான் பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படக்கூடாது என்பதில் அரசு விசேட கவனம் செலுத்தியது.

இதற்காக விசேட அறிவுறுத்தல் வகுப்புகள் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டன. பொதுமக்களை இராணுவத்தினரால் காப்பாற்ற முடிந்தது. போர் தீவிரமாக நடந்துகொண்டிருந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் பாதுகாப்பாக இருந்தார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரேஒரு நாடாளுமன்ற உறுப்பினரான கனகரெத்தினம் மட்டுமே வன்னியில் இருந்தார். மக்களுடன் மக்களாகத் தங்கி இருந்து அவர் வேதனைகளை அனுபவித்தார். போரின் போது அரச தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஓடிவந்த சுமார் 600 பொதுமக்கள் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தாம் நேரில் கண்டதாக கனகரெத்தினம் கூறி இருக்கிறார். இவைபற்றி எல்லாம் நிபுணர் குழு அறிக்கையில் ஒரு வார்த்தை கூட இல்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (உ-சி)

## நீங்காத நினைவலைகள்

| மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி |
|---|---|
| மலர்வு 15 - 10 - 1931 / உதிர்வு 03 - 01 - 2008 | மலர்வு 01 - 12 - 1933 / உதிர்வு 22 - 04 - 2010 |



### சின்னத்துரை கந்தசாமி

(இளைப்பாறிய எழுதுவினைஞர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்)

அன்பால் எமை அணைத்து
அறிவுரை பல கூறி
நல் வழி காட்டிய
எம் அன்புத் தந்தையை
நினைவு கூருகின்றோம்.



### இலட்சுமிப்பிள்ளை கந்தசாமி

(இளைப்பாறிய உப அதிபர், யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

பார் போற்றும் ஆசானாய்
கணவனுக்கு நன் மனைவியாய்
பிள்ளைகளுக்கு அன்புத் தாயாய்
வாழ்ந்த எம் அம்மாவை
நினைவு கூருகின்றோம்.

எம் உயர்வுக்காய் நல்வழி காட்டிய அன்புத் தெய்வங்களின் ஆத்மா [illegible] இன்றைய நாளில் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]

சிவன் வீதி, ஆவரங்கால் (4060) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்கள்

### மரியதாஸ் றோசாறியம்மாள்



தென் இந்தியா, வேம்பாரைப் பிறப்பிடமாகவும் இல. 6/1, மாட்டீன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் றோசாறியம்மாள் 10.05.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியதாஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆபூர்வசீலன், மதுரநாயகி (மலர்) மற்றும் பாக்கியசீலன், அடைக்கலதாஸ் (ராஜு) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மினி, லூர்த்துமேரி, கலாஞானி ஆகியோரின் அன்பு மாமியாரும் வசந்தினி (அபி), திவிசாளினி (திவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றித் திருப்பலி இன்று (11.05.2011) பிற்பகல் 3 மணியளவில் யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/1 மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். (4074) (24+25) தகவல்: ராஜு (மகன்).

### ஐயன் வேலன்



7ஆம் வட்டாரம், அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயன் வேலன் (08.05.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2011) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அனலைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம், அனலைதீவு. (4078) (24+25) தகவல்: வே.மாதி (மனைவி), சற்பிரபாலன் (மகன் - சுவிஸ்)

### சின்னத்தம்பி கந்தையா



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா நேற்றுமுன்தினம் (09.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகமணி, மாணிக்கம், சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சகுந்தலாதேவி, இரத்தினேஸ்வரி (கனடா), விக்னேஸ்வரன் (சுவிஸ்), தவராசா (சுவிஸ்), சறோஜினிதேவி (கொழும்பு), யசோதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இலங்கைநாயகம், ஜெயச்சந்திரன் (கனடா), கேதீஸ்வரி (கீதா - சுவிஸ்), வசந்தராஜன் (கொழும்பு), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனோஜா, விதுஜா, நர்த்தனா, ஆதவன், அதீனா, அயன், றக்சனா, றிசானா, றதுசன், வபீசன், மதுபாசினி, கிசோ, கிசானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (4081) (24+25) தகவல்: குடும்பத்தினர்.

### முருகேசு அருளானந்தம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அருளானந்தம் நேற்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் லீலாவதி புஸ்பமலர், ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் றஜீவன் (யூனியன் அஸ்யூரன்ஸ் A.D.O ) அன்புத் தந்தையும் றம்மியாவின் (Bancassurance Commercial Bank, Chunnakam) பாசமிகு மாமனும் யுகானா, சியானா ஆகியோரது பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2011) நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்தச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை கிழக்கு, கோப்பாய். (4081) தகவல்: அ.றஜீவன் (மகன்) (Union Assurance, Jaffna)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

### நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தவேளை

# வன்னி மக்கள் வங்கிகளில் அடைவு வைத்த நகைகளை மீட்பதற்கான காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 11

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தவேளை அந்த மக்களால் வங்கிகளில் அடைவு வைக்கப்பட்ட தங்க நகைகளை மீட்பதற்கான கால எல்லை ஒரு வருடத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபர் திருமதி பி.எம்.சாள்ஸ் விடுத்த வேண்டுகோளை அடுத்து மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்,

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தவேளை தமது தங்க நகைகளை அங்கு இயங்கிய வங்கிக் கிளைகளில் அடைவு வைத்திருந்தனர். அவர்கள் அந்த நகைகளை மீட்பதற்கான கால எல்லை ஏற்கனவே முடிவடைந்து விட்டது. வங்கிகளில் அடைவு வைக்கப்படும் நகைகள் ஒரு வருட காலத்துக்குள் மீட்கப்படாவிட்டால் அவற்றை வங்கிகள் ஏலத்தில் விற்பனை செய்வது வழமையாகும்.

இதன்படி நலன்புரி நிலைய மக்களால் அடைவு வைக்கப்பட்ட பெருந்தொகையான தங்க நகைகள் ஒரு வருடத்துக்கு மேல் ஆகியும் மீட்கப்படாமல் வங்கிகளில் உள்ளன. இவற்றை ஏலத்தில் விற்காமல் அடைவு வைத்த மக்கள் அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் வவுனியா அரச அதிபர் திருமதி பி.எம். சாள்ஸ் ஈடுபட்டிருந்தார்.

இது தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று வவுனியா அரச அதிபர் தலைமையில் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் , வங்கி முகாமையாளர்கள் , பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் .

இதன் அடிப்படையில் இடம்பெயர்ந்த மக்களால் நலன்புரி நிலையங்களில் இயங்கிய வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளை மீட்பதற்கான கால எல்லை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு மத்திய வங்கியின் ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளதாக வவுனியா அரச அதிபர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்களால் இவ்வாறு அடைவு வைக்கப்பட்ட தங்க நகைகளை வவுனியா அரச அதிபரின் அனுமதியின்றி ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டாம் எனவும் ஆளுநர் பணித்துள்ளார்.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் பாதுகாப்புக் கருதி தம்மிடம் இருந்த தங்க நகைகளை வங்கிக் கிளைகளில் அடைவு வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-501)



தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற அரச கரும மொழி தொடர்பான செயலமர்வில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் ஆகியோர் காணப்படுகின்றனர். நிகழ்வில் அரச அதிபர் உரையாற்றுகிறார். (9)

## கீரிமலை நகுலேஸ்வரம் வீதி மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், மே 11

இதுவரை காலமும் மூடப்பட்டிருந்த நகுலேஸ்வரம் வீதி நேற்றுமுதல் மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

பன்னாலையில் இருந்து கீரிமலை வரை செல்லும் இந்த வீதி நீண்ட காலமாகவே மூடப்பட்டிருந்தது. இந்த ஆண்டு நடைபெற்ற நகுலேஸ்வரம் ஆலய மஹோற்சவத்தின்போது திறந்து விடப்பட்ட இந்த வீதி மஹோற்சவம் முடிந்ததும் மூடப்பட்டு விட்டது.

தற்போது கீரிமலைப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்த வீதியும் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் சேந்தாங்குளம் வீதி வழியாக இளவாலையூடாகவே பயணம் செய்ய வேண்டி இருந்த நிலை தவிர்க்கப்பட்டு பயணத்தூரம் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-38)

## 788 இலக்க பஸ் சேவை கீரிமலை வரை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், மே 11

788 இலக்க பஸ் சேவை கீரிமலை வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இளவாலை வரை இடம்பெற்ற இந்தச் சேவை வசந்தபுரம், வலித்தூண்டல் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்ததைத் தொடர்ந்து கீரிமலை வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை-

நகுலேஸ்வரம் வீதி திறக்கப்பட்டுள்ளதால் 795 ஆம் இலக்க பஸ் சேவையைக் கீரிமலை வரை விஸ்தரிக்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-38)

# மர்மப் பொருள் திடீரென வெடித்ததில் மாதகலில் சிறுவர்கள் மூவர் படுகாயம்

### விளையாடிக் கொண்டிருந்தவேளை நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 11

மர்மப் பொருள் ஒன்றை எடுத்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மூவர் அது திடீரென வெடித்ததால் படுகாயமடைந்தனர். அவர்கள் மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மாதகல் சகாயபுரம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சு.சதுசன் (வயது - 6), சு.தனுசன் (வயது - 3) என்ற சகோதரர்களும் மற்றும் ஜீ.கம்சி (வயது - 3) ஆகியோரே காயமடைந்தனர்.

வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த இந்த மூவரும் குறித்த மர்மப் பொருளைக் கண்டெடுத்துள்ளனர். அதனை எடுத்துச் சென்று வீட்டினுள் வைத்து விளையாடிக் கொண்டிருந்த போதே அது பெரும் சத்தத்துடன் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 11

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். (த-15)

# நிகழ்வுகள்

### முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், மே.11

யாழ்.புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தின் முத்தமிழ் விழா நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக அருட்தந்தை யோசவ் மேரி சுவாமியும், கௌரவ விருந்தினராக யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் 'மட்டக்களப்புப் பங்குக் கூத்துக்களின் தனித்துவப் பண்புகள்' 'இலங்கையின் திருத்தூதர் யோசவ்வாஸ்' ஆகிய இரு நாட்டுக் கூத்துக்கள் இடம்பெறும். (ற)

### கணித ஒப்படைப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே.11

யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் உயர் தேசியக் கணக்கியல் டிப்புளோமாவுக்கான வியாபாரக் கணித ஒப்படைப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை பகல் நேர, பகுதிநேர மாணவர்களுக்காக நடத்தப்படவுள்ளது என உதவிப் பணிப்பாளர் வி.எஸ். விஜயநாதன் அறிவித்துள்ளார். (ற)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே.11

இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட ''18 + சுப்பர் ட்றீம் புறமோசன்'' திட்டத்தின் கீழ் தேசிய ரீதியில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டவர்களில் வடமாகாண அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு வடபிராந்தியப் பிரதேச காரியாலய கேட்போர் கூடத்தில் இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் தலைமையில் இடம்பெறும். (ஒ-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையச் செய்திகள்

## பெரும் எரிபொருள் மோசடி முறியடிப்பு

1983 ஆம் ஆண்டிலிருந்து கிராண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்று வந்த பெரும் எண்ணெய் மோசடி விசேட அதிரடிப் படையினரால் கடந்த திங்கட்கிழமை முறியடிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் தரப்பினருக்கு விற்பதற்காக சட்டத்துக்கு மாறான வகையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த 16,600 லீற்றர் டீசல் இம்முற்றுகையின் போது கைப்பற்றப்பட்டதாக விசேட அதிரடிப்படை கொமாண்டர் ஆர்.டபிள் யூ.எம்.சி.ரணவன தெரிவித்தார்.

இது தொடர்பில் மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அரச நிறுவனங்களின் வாகனங்களிலிருந்து திருடப்படும் எரி பொருள், கிறீஸ் என்பவற்றை மலிவாக வாங்கி மீண்டும் விற்று வந்தனர்.

இந்த எரிபொருள் களஞ்சியம் கிராண்ட்பாஸில் உள்ள ...டேடியம்கமவில் அமைந்திருந்தது. அங்கிருந்து, ராஜகிரிய முகாமை சேர்ந்த விசேட அதிரடி படையினர் பல வகையான எரிபொருள்களையும் கிறீஸையும் கைப்பற்றினர்.

(தமிழ்மிரர்)

## சிறைச்சாலைகளுக்குள் பாலியல் நோயுடன் கைதிகள்

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் பெரும் குற்றம் புரிந்தவர்கள் 26,000 பேர்வரை இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இவர்கள் பாலியல் தொற்று நோய்களுக்கு உள்ளாவதாகவும் தற்போது கிடைக்கப்பெறும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் மூலமாகவே 50 வீதமான நோய்கள் சிறைச்சாலைக்குள் பரவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலைக்குள் இருக்கும் கைதிகள் சிலர் எச்.ஐ.வி (எயிட்ஸ்) நோய்த் தாக்கத்துக்கும் மற்றும் பல்வேறுபட்ட பாலியல் நோய் தாக்கத்துக்கும் ஆளாகிவருவதாக உலக சுகாதாரத் திணைக்கள அறிக்கை தெரிவிக்கிறது.

இது தொடர்பாக உலக சுகாதாரத் திணைக்களம் கைதிகளுக்கு மத்தியில் விழிப்புணர்வுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதோடு, சிறைச் சாலை கழிவறைகளை நவீனமயப்படுத்தவும் உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இலங்கை எயிட்ஸ் கட்டுப்பாட்டுச் சபைப் பணிப்பாளர் நிமால் எதிரசிங்க மற்றும் உலகச் சுகாதாரத் திணைக்களமும் இணைந்து பல செயல் திட்டங்களை முன்னெடுக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அதிர்வு)

## கிராமப் புறங்களில் மது பாவனை அதிகரிப்பு

கிராமப் புறங்களில் போதைப்பொருள் பாவனையுடன் மதுபாவனையும் அதிகரித்துள்ளதாகவும் மலையக தோட்டப்புற மக்கள், பெண்கள் மத்தியிலும் இந்நிலை காணப்படுவதாகவும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

பதுளையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மதுபாவனை ஒரு சமூக பிரச்சனையாகியுள்ளதாகவும் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மகாவலி வலயத்தில் பெண்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலானோர் குடிகாரர்களாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

வறுமைக்கு மதுபாவனை பிரதான காரணங்களில் ஒன்றாக இருப்பது உலக வங்கியினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

(தமிழ்மிரர்)

## உலகில் மிக உயரமான புத்தர்சிலை அ' புரத்தில் வெள்ளியன்று அடிக்கல்

உலகில் மிகஉயரமான புத்தர்சிலையை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப. 10.06 மணியளவில் அனுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

குடாகெலெரேவ சிறிசாரங்கராமய குருந்தன்குளம் என்ற இடத்தில்- 522 அடி உயரமான சமாதிநிலைப் புத்தர்சிலை அமைக்கப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் உயிரிழந்த இலங்கைப் படையினர் நினைவாகவே உலகின் மிகப்பெரிய புத்தர் சிலையை இலங்கை அரசு அமைக்கவுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

முன்னர் இந்தப் புத்தர் சிலையை வவுனியாவில் நிறுவப் போவதாக இலங்கை அரசு அறிவித்திருந்தது.

பௌத்தர்கள் அதிகம் வசிக்காத வவுனியாவில் இந்தப் புத்தர்சிலை அமைக்கப்படுவதற்கு தமிழர்தரப்பில் இருந்து எதிர்ப்புகள் கிளம்பியதை அடுத்தே அனுராதபுரவில் இந்தப் புத்தர் சிலையை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(புதினப்பலகை)



கொழும்பு, வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகாவை சந்திப்பதற்காக நேற்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் களான திஸ்ஸ அத்தநாயக்கா மற்றும் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோர் சென்று வருவதை படத்தில் காணலாம்.

(தமிழ்மிரர்)

## போர்க்குற்றச்சாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் இந்தியா இதுவரையில் கருத்து எதனையும் விடுக்கவில்லையே என்று பத்திரகை ஆசிரியர் ஒருவர் கேள்வி எழுப்பியதற்கு, ''பொருத்தமான சமயத்தில் பொருத்தமான பதிலை இந்தியா வழங்கும்'' என்றார் ஜனாதிபதி.

சந்திப்பில் ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில், தருஸ்மன் அறிக்கை நாட்டில் சர்ச்சையைக் கிளப்பாத வகையில் ஊடகங்கள் நாட்டுப்பற்றுடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஊடகவியலாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு ஜனாதிபதி பதில் அளிக்கையில் தெரிவித்தவை வருமாறு:-

நாம் ஏற்கனவே இலங்கை அரசு மேற்கொண்டுள்ள மனிதாபிமான நல்லிணக்கப்பாட்டு செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்க சட்டமா அதிபர் தலைமையில் ஒரு சிரேஷ்ட தூதுக்குழுவை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்.

தருஸ்மன் அறிக்கை(நிபுணர் குழு அறிக்கை) ஏற்படுத்திய சர்ச்சை தொடர்பாக ரஷ்யாவும், சீனாவும் இலங்கையை முழுமையாக ஆதரிக்கின்றன. அதுபோல் மேலும் பெரும்பாலான நாடுகள் எங்களை ஆதரிக்கின்றன.

சில நாடுகள் எங்களை யுத்த நீதிமன்றத்தின் முன்னர் நிறுத்தி தண்டிக்க முயற்சி செய்கின்றன. அதற்கு முன்னர், நாம் யுத்தக் குற்றங்களை இழைக்கவில்லை இவை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் என்பதையும் இதில் எவ்வித உண்மையுமில்லை என்பதையும் முழு உலகத்துக்கும் எடுத்துக்காட்ட வேண்டும். அப்போது இந்தக் குற்றச்சாட்டுகள் வலுவிழந்து தானாகவே செயலிழந்துவிடும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் நாம் வன்னிப் பிரதேசத்திலுள்ள வீடுகளிலும், புலிகளின் பங்கர்களிலும் இருந்து அரசு அனுப்பிவைத்த பெருந்தொகை அரிசி மூடைகளையும், கோதுமை மா மூடைகளையும் கண்டெடுத்தோம். யுத்தம் நடந்துகொண்டிருந்த காலகட்டத்தில் அரசு வடபகுதிக்கு உணவுப் பண்டங்களை அனுப்பவில்லை என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பதை உலக நாடுகள் அதிலிருந்தே உணர்ந்து கொள்ள முடியும்.

குற்றம் இழைக்காத எங்களை எந்தவொரு நீதிமன்றத்தினாலும் தூக்கிலிட முடியாது. நாம் மனித படுகொலைகளையோ யுத்தக் குற்றங்களையோ செய்யவில்லை.

தருஸ்மன் அறிக்கையைப்போல் ஆதாரமற்ற, ஒருதலைப்பட்சமான ஓர் அறிக்கையாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை அமையக்கூடாது என்பதனால் அதனை அவசரப்படாமல் நல்ல முறையில் தயாரிக்க வேண்டும் என்பதில் அரசு மிகவும் அக்கறை காட்டி வருகிறது.

- இப்படி ஜனாதிபதி கூறினார். (உ)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று தனது நியமனம் தொடர்பான உத்தியோகபூர்வ கடிதத்தைக் கையளித்து அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூன் இந்த நியமனத்தை வழங்கி உள்ளார். இலங்கையில் செயற்பட்டுவரும் 20 ஐ.நா. முகவர் நிலையங்களின் தலைமைப் பொறுப்பை நாண்டி இனி வகிப்பார்.

இதற்கு முன்னர், சீனாவில் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் பணிப்பாளராக அவர் பணியாற்றி இருந்தார். ஐ.நா. அதிகாரியாக அவர் கடந்த 20 ஆண்டுகளாகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

பங்களாதேஷ் நாட்டவரான நாண்டி, ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள விவசாயக் கல்வி நிறுவனத்தில் கலாநிதிப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தவர். ஆங்கிலம், ருஷ்யன், பெங்கலா மொழிகள் பேசவல்லவர். (உ)

## முன்னுக்குப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் நிலைப்பாடு என்னவென்று புரியவில்லை'' என்று குற்றச்சாட்டுக்களை அடுக்குகிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது. அங்கு அவர் தெரிவித்ததாவது:-

நிபுணர் குழு அறிக்கை மீது கவனத்தை செலுத்தியுள்ள அரசு, தொழிலாளர் பிரச்சினை, மக்களின் பிரச்சினை ஆகியவற்றில் கரிசணம் கொள்வதில்லை. அதேவேளை, நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் பலவிதமான நிலைப்பாடுகளில் அமைச்சர்கள் உள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஐ.நா. சபை எமது சபை, அதன் செயலாளர் நாயகம் எமது செயலாளர் நாயகம் என்கிறார். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஐ.நா. சபை தொடர்பில் எதிராகச் செயல்படக்கூடாது எனத் தெரிவித்துள்ளார். அமைச்சர் விமல் வீரவன்ஸ, ''ஐ.நா. சபை யுத்தத்தை தோற்றுவிக்கும் அமைப்பு. அதை கலைத்து தனித்துவ அமைப்பு ஒன்றை நிறுவவேண்டும்'' என்கிறார்.

அத்துடன் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் ஐ.நா. சபையையோ, அதன் செயலாளர் நாயகத்தையோ விமர்சித்தல், எதிர்த்தல் ஆகியவற்றில் இலங்கை ஈடுபடக்கூடாது என எச்சரித்துள்ளன.

இருந்தபோதிலும் அமைச்சர்களின் வேறுபட்ட கருத்துகளால் அரசின் ஸ்திர நிலைப்பாடு குழம்பியுள்ளது. ஐ.நா வின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பான அரசின் நிலைப்பாடு என்ன?

இந்தப் பிரச்சினைக்கு ஆவேசப்படாமலும், அடாவடித்தனம் செய்யாமலும், இராஜதந்திர ரீதியில் தீர்வுகாண அரசு முனையவேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

(உ-சி)

## தமிழ்மொழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களில் தேசிய கீதம் தமிழ் மொழியிலேயே பாடப்பட வேண்டும். எனினும் அது சிங்கள மொழியிலேயே பாடப்படுகிறது; பாடுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறது.

✱ அரச திணைக்களங்களுக்கு கொழும்பிலிருந்து வரும் தாபன விதிக்கோவைகள், சுற்றறிக்கைகள் மொழிபெயர்ப்பு இன்றி தனிச் சிங்களத்திலேயே வருகின்றன. சிலவற்றுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பு கிடைக்கின்றபோதும் தமிழ்ப் பெயர்ப்புச் செய்யப்படுவதில்லை. இதனால் நிர்வாகச் செயற்பாடுகள் தாமதமாகின்றன.

✱ நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காணப்படும் அரச அறிவித்தல்கள் பலகைகளிலும் பெயர்ப் பலகைகளிலும் தமிழ்க் கொலைகள் தாராளமாக இடம்பெறுகின்றன. அவை பற்றி யாரும் கவனத்தில் எடுப்பதில்லை.

✱ நாட்டின் ஏனைய மாகாணங்களில் உள்ள அரச திணைக்களங்களுக்கு சிங்களத்தில் அனுப்பப்படும் அரச சுற்றறிக்கைகளும் பதிவேடுகளும் வடக்கு மற்றும் கிழக்குக்கு மட்டும் ஆங்கிலத்தில் அனுப்பப்படுகின்றன.

✱ அரச ஊழியர்களுக்கான மொழிப் பயிற்சியின் காலத்தைக் குறைத்து, நவீன முறைப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

(உ-9-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட விவசாயிகளின் கண்ணீர் அஞ்சலி

புன்னாலைக் கட்டுவன் தெற்கில் யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் வளர்ச்சிக்காக வாடகைக்கு கட்டடத்தை மனமுவந்து வழங்கிய பெருந்தகை

**அமரர் இளையதம்பி மகாலிங்கம்**

நேற்று செவ்வாய்க்கிழமை (10.05.2011) இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரது ஆத்ம சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனம். — தலைவர், செயலாளர், நிர்வாகிகள்.

# ஐ.நாவின் போர்க் குற்ற அறிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரவு

கொழும்பு மே 11

இலங்கை தொடர்பான ஐ.நாவின் போர்க் குற்ற அறிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார கொள்கைத் தலைவர் கதரின் அஸ்ரன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

போரின்போது, அனைத்துலக மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்கள் இடம்பெற்றுள்ளதற்கான நம்பகரமாக குற்றச் சாட்டுகள் இருப்பதாக ஐ.நாவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.இது ஒரு முக்கியமான முன்னேற்றம்.

மோசமான குற்றச்சாட்டுகள் குறித்து சுதந்திரமான முறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நல்லிணக்க முயற்சிகளை வலுப்படுத்துவதுடன், இலங்கையில் இறுதியான சமாதானத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும்.

இலங்கை அரசு இந்த அறிக்கையின் ஆக்கபூர்வமான நோக்கங்களை உணர்ந்து கொள்ளும் என்று ஐரோப்பிய ஒன்றியம் உறுதியாக நம்புகிறது.

அத்துடன் அறிக்கையின் உள்ளடக்கங்கள் குறித்து ஐ.நா பொதுச்செயலருடன் இலங்கை அரசு தொடர்பு கொள்வதையும் ஊக்குவிக்கிறது என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## கோகேஸ்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வின் கோகேஸ் தீவைச் சென்றடைந்தது.

சட்டவிரோதமான முறையில் அந்நாட்டுக்குள் நுழைந்த இந்த 82 பேரும் இலங்கைத் தமிழர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அதனை அங்குள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்தத் தமிழர்கள் கிறிஸ்மஸ் தீவில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதிகாரிகள் அவர்களிடம் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் புகலிடம்கோரும் ஆறாயிரத்துக்கும் அதிகமான சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(உ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி மாரிமுத்து கந்தையா



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கைதடி தென்கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாரிமுத்து கந்தையா (10.05.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவரான வீரகத்தி தம்பதியரின்(செட்டியார்) அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் சின்னப்பிள்ளை, விசாலாட்சியின் அன்புச் சகோதரியும், சிவபாக்கியம், இராசலட்சுமி, காலஞ்சென்ற சுப்புலட்சுமி மற்றும் பரமேஸ்வரி, இரத்தினகுமாரி, மகாலிங்கம், சண்முகலிங்கம், இராசகுமாரி, பத்மாவதி, மங்கையர்க்கரசி, இராஜேஸ்வரி, கணேசலிங்கம், யோகலிங்கம், வைகுந்தமாலா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கந்தையா, காலஞ்சென்ற சின்னையா மற்றும் திருச்செல்வம், கிருஸ்ணர், லீலாவதி, சாந்தி, ஜெயரத்தினம், வடிவேலு, நற்குணதேவன், வேலாயுதம், வசந்தி, விஜியகலா, சண்முகக்குமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கைதடி தென்கிழக்கிலுள்ள அவரின் இல்லத்தில் இன்று (11.05.2011) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தென்கிழக்கு, கைதடி (செட்டியார் வளவு). (4084) தகவல்: குடும்பத்தினர்.

## ஓய்வுபெறும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான சுற்றறிக்கைகள் அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தப் புதிய சுற்றறிக்கையை அடுத்து, பழைய சுற்றறிக்கை வலுவிழந்துள்ளது. புதிய கொள்கையின்படி எந்த ஒரு அரச ஊழியரும் சேவை நீடிப்புக்கு விண்ணப்பிக்காமலேயே 57 வயது வரை சேவையாற்றலாம்.

ஓய்வு பெறும் வயது நிர்ணயிக்கப்பட்ட அரச நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கே இந்தப் புதிய சுற்றறிக்கை செல்லுபடியாகும் என்று திறைசேரிச் செயலாளர் தெரிவித்தார்.

அதேவேளை, 55 வயதை எட்டிய அரச ஊழியர்கள் தாமாக விருப்ப ஓய்வு பெறுவதற்கும் அனுமதிக்கப்படுவர். தேவைப்பட்டால் ஒரு ஊழியரை 60 வயது வரை சேவையில் வைத்திருப்பது குறித்து, அந்தந்தத் திணைக்களத்தின் உயரதிகாரிகள் அவசியத்தைப் பொறுத்து முடிவுகளை எடுக்கவும் புதிய சுற்றிக்கை அனுமதியளிக்கிறது.

(உ)

**வேலையாள்கள் தேவை**

Guest House ஒன்றுக்கு Room Boy வேலை தெரிந்தவர்களும் Diesel Generator Repairing வேலை தெரிந்தவர்களும் தமது சுயவிவரக் கோவையுடன் 68, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சமூகம் தரவும்.

தொடர்பு இல: 0212225575, 0779877309

| பிரத்தியேக வகுப்பு | கணக்கீடு ACCOUNTING | தொடர்புகளுக்கு |
|---|---|---|
| A/L2013, A/L2012, CBF, DBF,B.com,AAT | திரு. சுரேன் திரு. பாலகஜன் (H.N.DIP-in- ACC) | 0778366530 |

**கட்டடவேலைகள் செய்து கொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடுகட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், குளியலறைகட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள், Plumbing, Electrical, Painting, Welding, பூந்தோட்டம் அமைத்தல் அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

அழையுங்கள் 0776679564

AXSHAYACONSTRUCTION, JAFFNA.

## மரண அறிவித்தல்



### இளையதம்பி மகாலிங்கம்

(உரிமையாளர், இளையதம்பி அன் சன்ஸ், கல்லுடைக்கும் ஆலை)

புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி மகாலிங்கம் நேற்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி மற்றும் தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பையா-கதிராசி தம்பதியரின் அருமை மருமகனும் ருக்குமணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.05.2011) புதன்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக் கட்டுவன்தெற்கு, சுன்னாகம். (41076) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராசு தர்மகுலசிங்கம்



ஆவரங்கால் கிழக்கு, புத்தூரைப் பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசு தர்மகுலசிங்கம் நேற்று(10.05.2011) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் இராசு மற்றும் இராசு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், நிஷாந்தன்,நிதர்ஷன், நிஷாந்தினி, நிதர்ஷினி, கஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராசா, வள்ளுவன் (டென்மார்க்) அவர்களின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.05.2011) புதன்கிழமை பி.ப 3மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கவுடுதூவு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். (4087) தகவல்: நிஷாந்தன்(மகன்)

**வேலைவாய்ப்பு**

பிரபல நிறுவனத்துக்கு ஊக்கமும் திறமையும் முன்னேறும் இலட்சியமும் உள்ள இளைஞர், யுவதிகளுக்கான சந்தர்ப்பம் குறுகிய காலத்துக்குள் மாதாந்தம் 21,000/= க்கு மேல் வருமானம் பெற விருப்பம் உள்ளதா? அப்படியானவர்களே எமக்குத் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு.

R.Libesan
T.P 0776217763, 0217903283

**தவறிவிட்டது**

10.05.2011 நேற்று தங்கநகை (பென்ரன்) ஒன்று யாழ். நகரில் பூபாலசிங்கம் புத்தகசாலையில் கை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவினால் சன்மானம் வழங்கப்படும்.

பூபாலசிங்கம் புத்தகசாலை 0212226693
ஸ்ரீலங்கா புத்தகசாலை 0212222573

**ஆர்கி என்ரப்பிறைசஸ்**

சகல விதமான Hugo உற்பத்திகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்




150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (48)

**வெளிவந்துவிட்டது**

சங்கீதம்- தரம் -7,8
புதிய பாடத்திட்டம்
தொகுப்பு-
கா. பரமேஸ்வரன்(சங்கீத பூஷணம்)
வெளியீடு- நேத்ரா பப்ளிகேஷன், மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.
கிடைக்கும் இடம்-
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே- 0212226693

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்11.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.